www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20 ரூபா 11/00

செப்.08-14,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEE... முரசு 169

## புலிகளின் புதிய உத்தி

# உள்ளே வெளியே

## வண்மேண் ஒப்பரேசன்



## நகர்ப் புறப் பாய்ச்சல்



## நக்மா + கார்த்திக் படப்பிடிப்பில் மோதல்

## பரபரப்பான பூலான் தொடர்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## பரந்தமன யுத்தம்!

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

மாவும் பாணும்
மளமளவென்று உயரத்தில்
போய் உட்கார்ந்து கொண்டன!
பாமர மக்களுக்கு
சுலபமாக எட்டாத உயரம்தான்!

எத்தனை தடவைதான்
சிகரெட்டையும் மதுபானத்தையும்
விலை உயர்த்திக் கொண்டிருப்பது?

சிகரெட் குடிப்பவர்களும்
மது குடிப்பவர்களும் மட்டும்தான்
இந்த நாட்டின் குடிமக்களா?
எல்லோரும் இந் நாட்டின் குடிமக்களே!
அதுதான் ஜனநாயகம்!

யுத்தம் என்பது
நாட்டின் பொது விதி.
அனைவரும் விதியின் விளையாட்டில்
பங்கெடுப்பதுதானே நியாயம்!
இதிலே பாமரர் என்ன?
பணம் படைத்தவர் என்ன?
யுத்தத்துக்கு பேதம் கிடையாது!

இன பேதம் காரணமாக
உருவான யுத்தத்துக்கு
என்னே ஒரு பரந்த மனம்.....!

தாங்க முடியவில்லையே
என்று வருந்துபவர்கள்
நாட்டு நிலை அறியாதவர்கள்!

நாட்டைப் பாருங்கள்!
குருவியின் தலையில்
பெரிய பனங்காய் வைத்ததுபோல
யுத்தச் சுமையை
இந்தக் குட்டித்தீவு சுமக்கிறதல்லவா?
நாம் அதன் மக்கள்;
சுமக்காமல் சினக்கலாமோ?

"நாம் பதவியில் இருந்தால்
இப்படி நடக்குமா?" என்று
எதிர்க்கட்சி எகிறிக் குதிக்கிறது!

ஏதோ விலைவாசி உயர்வு
வேண்டுமென்றே விரும்பி
செய்யப்படுவது போல
எதிர்க்கட்சி சொல்கிறது.

ஐக்கிய தேசியகட்சி ஆட்சியைவிட
இன்றைய ஆட்சிக்கு
வெளியுலகில் வரவேற்பிருக்கிறது.
கடன் கேட்டாலும்
மறுப்பில்லாமல் கிடைக்கிறது!

ஜனாதிபதி எப்போது
வெளிநாடு போனாலும்
கடன்வாங்கிக் கொண்டு வருகிறார்!
உடன் தரப்படும் என்ற
உத்தரவாதம் இல்லாமலேயே
கடன் கிடைப்பது பாக்கியம்!

அப்படியிருந்தும்- வரவு இருந்தும்
செலவு கைமீறிப் போகிறதே?

எதிர்க்கட்சி
ஆட்சிக்கு வந்தால் மட்டும்
இந்நிலை எப்படி மாறும்?

வரவுக்கு காரணம் கடன்!
செலவுக்கு காரணம் யுத்தம்!
வரவு எட்டணா செலவு பத்தணா!

எனவே தேவையானது
ஆட்சி மாற்றமல்ல;
காட்சி மாற்றம்!

யுத்தக் காண்ட காட்சி
மாற வேண்டும்.
குருவியின் தலையிலுள்ள
பனங்காயை அகற்ற வேண்டும்!

யுத்தம்-
நாட்டைப் பிடித்தாடுவதுதான்
நாட்டுக்கு நேர்ந்துள்ள
துரதிஷ்டம் என்பதே உண்மை!

காட்சி மாறாதவரை
எந்தக் கட்சி பதவிக்கு வந்தாலும்
துரதிஷ்டம் தொடரவே செய்யும்!

ஆளும் தரப்பும், எதிரணியும்
தம் பொறுப்பை உணர்ந்து
காரியமாற்றினால் மீட்சி உண்டு!

அரசியல் போட்டிகளை
ஒரு கொஞ்சக் காலம்
மூட்டை கட்டிப் போட்டுவிட்டு
உண்மையாகவே மக்களுக்காக
ஒரே ஒரு தடவை சிந்தித்தால் போதும்!

திறந்த மனதோடு நோக்கினால்
பிரச்சனையின் வேர் தெரியும்!
தெளிந்த பார்வை உண்டானால்
நியாமான தீர்வும் எட்டும்!

அது சாத்தியமாகாத வரை
விலைவாசி உயர்வை
கட்டுப்படுத்தும் வாக்குறுதிகள்
'கூரை ஏறி
கோழி பிடிக்க முடியாதவன்,
வானம் ஏறி வைகுந்தம்
போவ'தாகச் சொல்வது மாதிரித்தான்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## மன்னித்தல் மனமகிழ்ச்சியைத் தரும்

'மன்னிப்பவனே மகாத்மா; மன்னிக்கும் மனம் படைத்தவனே மகோன்னத மனிதன்; மன்னித்தல் மன அளவில் வளர வேண்டியது. வளர்த்துக் கொள்ளப்பட வேண்டிய ஒரு வளமான மனப்பக்குவம். 'குற்றஞ் செய்வது மனிதகுணம்; மன்னிப்பது தெய்வீகம்' எத்துணை உண்மை பொதிந்தது! நமக்கு எதிராகக் குற்றம் புரிந்தவர்களை மனமுவந்து மன்னிக்கும் பொழுது நாமும் மகிழ்ச்சியடைந்து மற்றவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறோம் என்பதே உண்மை.

"அவன் மனத்தாபப்பட்டால் அவனை மன்னித்துக் கொள். அவன் ஒரு நாளில் ஏழுதரம் உனக்கு விரோதமாய் குற்றஞ் செய்து, ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து; 'நான் மனத்தாபப்படுகிறேன்' என்று சொன்னால் அவனுக்கு மன்னிப்பாயாக." (லூக் 17:4). ஆம்! ஏழு எழுபது தரமென்றாலும் மனநிறைவோடு மன்னித்தல் நம் ஆன்மீகக்கடமை. தம்மை சிலுவையிலறைந்து உயிரை எடுத்தவர்களைப்பற்றி "பிதாவே, இவர்களை மன்னியும்; இவர்கள் அறியாமற் செய்கிறார்கள்" என்று உரைத்தவர் இயேசு. அவர் வழிசெல்வது கிறிஸ்தவர்களின் கடமையல்லவா?

மன்னித்தல் என்று வந்தால் என்ன செய்ய வேண்டும் என்றும் வேதாகமம் போதிக்கிறது. "நியாயத்திலே முக தாட்சணியம் பாராமல் பெரியவனுக்கு செவிகொடுப்பதுபோலச் சிறியவனுக்கும் செவிகொடுக்கக் கடவீர்கள்; மனிதன் முகத்துக்கு பயப்படாதிருப்பீர்களாக; நியாயத்தீர்ப்பு தேவனுடையது." (உபா1:17).

நம்மவர்களுக்கு நல்ல படிப்பினை. எல்லாரும் கடைப்பிடித்தால் எவ்வளவு நீதி நிலவும். மன்னிப்போம் மறப்போம்!

-ஏ.பி.வி.கோமஸ்-



## அமல்கள் அனைத்தையும் விட சிறந்தது!

ஹஸ்ரத் அபூதர்தா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "உங்களுடைய அமல்களில் மிகச்சிறந்ததும், உங்களுடைய எஜமானிடத்தில் மிகப் பரிசுத்தமானதும், உங்கள் பதவிகளை உயர்த்தக் கூடியதும், தங்கம், வெள்ளி, ஆகியவற்றை நீங்கள் செலவு செய்வதை விடச் சிறந்ததும், நீங்கள் எதிரிகளைச் சந்தித்து, நீங்கள் அவர்களை வெட்டுவது, அவர்கள் உங்களை வெட்டுவது போன்ற (ஜிஹாத்)தைவிட மிகச் சிறந்ததுமாகிய ஓர் அமலை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா?" என்று றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்களிடம் கேட்ட போது "அவசியம் அறிவியுங்கள்" என ஸஹாபாக்கள் கூறினர். அப்பொழுது நபி (ஸல்) அவர்கள் "அது அல்லாஹ்வை திக்ரு செய்வதாகும்" என பதிலளித்தார்கள்.

(ஆதாரம்-திர்மிதி, இப்னு மாஜா)

எல்லா அமல்களை விடவும் சிறந்த அமலாக திக்ரு உள்ளது. திக்ரு செய்யும்படி திருமறை இவ்வாறு இயம்புகின்றது:

"உம்முடைய இரட்சகனை அதிகமாக திக்ரு செய்வீராக! (இன்னும் காலையிலும் மாலையிலும்) தஸ்பீஹ் செய்வீராக! (33:42)

"அல்லாஹ்வை திக்ரு செய்வதைவிட்டும் எவர்களுடைய இதயங்கள் கடினமாகி விட்டனவோ அவர்களுக்குக் கேடுதான். அவர்கள் பகிரங்கமான வழிகேட்டில் இருக்கிறார்கள் (39:22)

"(நபியே!) உம்முடைய இரட்சகனின் திருநாமத்தை திக்ரு செய்வீராக, மேலும் அவன் பக்கமே முற்றிலும் திரும்புவீராக!" (73:8)

"எவர் தன் இரட்சகனை திக்ரு செய்வதைப் புறக்கணிக்கிறாரோ அவரை அவன் கடினமான வேதனையில் நுழையச் செய்வான் (72:17) எனவே, நாங்களும் அதிகமாக திக்ரு செய்வோமாக!

எம்.ஏ.எம்.மருத் அஹமத், காத்தான்குடி-03

# கவிதைப் போட்டி இல.166

## பரிசுக்குரிய கவிதை

### என்றோ ஒரு நாள்!

தாயகம் விட்டு தவிப்புடன் நடந்து
தந்தையைத் தேடும் என்னுயிர்த் தாயே!
அக்கா காலில் நோவுடன் நடந்து
அப்பனைத் தேடுது ஆசை விழியால்;
தந்தை முகமும் ஞாபகம் இல்லை,
தாயே நானேன் உனக்குச் சுமையாய்......?
மிதிவெடி பார்த்து நடக்கும் உனக்கு
அகிலம் எங்குமே ஆதர வில்லை;
என்றோ ஒருநாள் எல்லாம் மாறும்.
அன்றைய நாள்வரை எமக்கிந்தக் கதிதான்!

ஆர். ஆர், சுப்பையா வீதி, மட்டக்களப்பு.

## இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்



### இழப்பு

போர் செய்த கொடுமையினால்
பாவிகளாய் ஆகிவிட்டோம்-எங்கள்
ஏர்பூட்டும் நிலமதனின்
பூர்வீகச் சொத்திழந்தோம்!
தேரோடும் வீதி எங்கும்
தோரணங்கள் நாமிழந்தோம்-நாங்கள்
பார் முழுகப் பாவிகளாய்
பரிதவிக்கும் (அ)கதியானோம்!

செல்வி ஆகன்யா அருமைநாதன்-
எட்டியாந்தோட்டை.

### இயற்கையுமா.....?

திட்டமிட்டு எமையழிக்கும்
தேசத்தில் வாழும்வரை
சுட்டெரிக்கும் வெய்யிலென்ன
சுகம் தருமா? அதுபோலே,
கொட்டும் மழையுமெமைக்
குறிவைத்துப் பார்க்கிறது!
எட்டி நடப்போம்! எம்-
எதிரிகளில் இயற்கையுமா....?

அ. கௌரிதாசன்- ஆலங்கேணி கிழக்கு.

### இதுவும் விதியோ?

நாமிருவர் நமக்கிருவர்-என
நாட்டுக்கும் சுமையின்றி
நிம்மதியாய் வாழ்ந்துவரப்
பொறுக்காத போரொன்று
புருசனுயிர் பிரித்ததனால்...;
நானொருத்தி எனக்கிருவர்
நாட்டுக்கும் நம்மவர்க்கும்
சுமையாய் ஆகிவிட்டோம்!

பீ.எம்.எம்.அன்ஸார்- புதியதெரு, வெலிகம.

### நிழல்

வலிகாமம் பெரிய வீடும்
விழுந்த "ஷெல்"லில் சரியாச்சு!
வன்னியில் போட்ட கொட்டில்
அதையடுத்துப் போயாச்சு!
இருப்பதற்கு இடம் இன்றி
அலையும் எங்களுக்கு
இப்போர்வை ஒன்றுதான்
பெரியதொரு நிழலாச்சு!

செல்வி தேவி அருணாசலம்- திருமலை.

### கடவுளிடம் ஒரு கேள்வி!

பாழும் விட்டைத்தான்
பறித்துக் கொண்டாய்....,
வாழும் விதியையுமா....?!!

நிட்டம்புவ கலாயுவன்.

### நாடு முன்னேறுகிறது....

காட்டில் உள்ளவர்
நகருக்கு வருகிறார்;
நாமோ
காட்டிற்குள்
செல்கிறோம்!


சுபா வரன்-கண்டி.

### முக்காட்டுத் தமிழர்

வானுலகம் பொழியும்
அனல் எறி கணைகள்,
மண்ணுலகம் வருமுன்
வேறுலகம் தேடும்
முக்காட்டுத் தமிழர்!

இ.லலீந்திரன்-எல்லை வீதி, செங்கலடி.

# கவிதைப் போட்டி இல-169



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை **கவனியுங்கள்**
வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி- 14.09.1996

—முகவரி—

கவிதைப் போட்டி இல.169 தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### தேடல்!

வசந்தம் கருகிப் போனதால்
வாழ்வும் தொலைந்து போனது!
உறவும் பிரிந்து போனதால்
ஊரும் உறங்கிப் போனது!
காலம் செய்த கோலமோ....
வாழ்வைத்தேடி அலைகிறோம்!

தெ. ரஞ்ஜனா- வவுனியா.

### மறக்க முடியுமா?

துணிகொண்டு மூடி
தூறலை மறைத்தோம்!
எது கொண்டு மூடி
எம் துயர் மறப்போம்?

சி.மு.சுந்தரேசன்-அரசினர்
வைத்தியசாலை, மஸ்கெலியா.

### போர் மழை

'சில்'லென்ற மழை நீரில் நனைந்த போதும்
'ஷெல்' லென்ற போர்மழையில் நனையவொண்ணா
'வில்'போன்ற போர்வையினுள் புதல்வர் கொண்டு
'இல்ல'மென்ற இடம்தேடி அலையலானோம்!!

காரைதீவூர் சிவம்-குருக்கள்மடம்.

### தொடர்ந்திடும் துன்பம்

வெள்ளத்தால் வீடிழந்து வீதி வழி போகின்ற
அல்லல்நிலை வந்ததுவே ஆண்டவனே- பாருமய்யா
தொல்லை ஒருபுறமா சுற்றிச்சுற்றி வருகுதுவே!
இல்லையோ எமக்கு இனி இத்தரையில் சுகவாழ்வு?

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

# வாசக(ர்) சாலை

என் அன்பு முரசே,

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். அதில் என்னைக் கவர்ந்த பூலானின் தொடர் இனிமையிலும் இனிமை. அதை தொடர்ந்து தரும் ரசிகனுக்கு எனது பாராட்டுக்கள். எங்கே ரசிகன்? அவரை எப்போது அறிமுகப்படுத்துவீர்கள்?

ஆர். துஸ்யந்தினி, கோட்லோஜ், கந்தப்பளை.

அன்பின் முரசே

சிந்திக்கத் தூண்டும் சிறப்பான கேள்விகளுக்கு சிந்தியாவின் சிங்காரமான பதில்கள் நடைமுறையோடு ஒத்துப் போகின்றன. குட்டிக் கதைகள் கூறி விளங்க வைப்பது மேலும் சிறப்பூட்டுகிறது.

நா. ஆனந்தன், கண்டி.

பாப்பா முரசில் வாரா வாரம் வெளிவரும் 'விஞ்ஞானத் தகவல்கள்' ஆகியவை மாணவர்களாகிய எங்களுக்கு மிகவும் பயனுள்ள அம்சமாக அமைந்துள்ளன.

மற்றும் வாரம் ஒரு நாடு, அறிவோம் மனதில் பதிவோம் என்பன எமது பொது அறிவுக்கு விருந்து ஊட்டுகின்றன.

ஜெயராஜா தேவனி, மட்/புனித சிசிலியா பெண்கள் பாடசாலை.

அன்பின் முரசு,

நான் யாழ் பகுதியிலிருந்து புலம் பெயர்ந்து கொழும்புக்கு வந்தது முதல் 'முரசை' ஒழுங்காகப் படித்து வருகிறேன். முரசில் வரும் அரசியல் கண்ணோட்டம், இனப்பிரச்சனைத் தீர்வு, யுத்தமுனைச் செய்திகள் மற்றும் நடுவு நிலை தவறாது சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல மிகவும் சிறப்பாக மக்களுக்கு விளக்கி வருகிறீர்கள். தங்கள் பணி தொடர வாழ்த்துகிறேன்.

காரைநகர் எஸ். ஆர். எஸ். தேவதாசன், முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர், தெகிவளை.

ஏழையின் கண்ணீர் கூரிய வாளை ஒக்கும். அதுபோல் எமது கண்ணீருக்கும் நிச்சயம் பதில் கிடைக்கும். எந்த அரசாங்கம் வந்தாலும் எமது நிலை மத்தளம்தான்.

திருமதி கார்த்திக், ரம்போடை.

நாரதர்-இராஜதந்திரி ஆகியோரின் அரசியல் விமர்சனங்கள் உள்ளதை உள்ளபடி நேர்நின்று சொல்வனவாக உள்ளன.

இந்தியாவின் உறவை நாம் இழந்தது வரலாற்றில் மறக்கமுடியாத பாடம். இனிவரும் காலங்களிலாவது தவறு திருத்தப்படுவதுதான் முறையானது.

சி. தாமோதரம், திருகோணமலை.

அரசியல் தொடரின் மூலம் நம் சமகால வரலாற்று நிகழ்வுகளின் மறுபக்கம் கண்முன்பாகத் தெரிகிறது. காலங்கள் மாறினாலும் உண்மைகள் உறங்காது. உண்மைகள் மக்கள் கவனத்திற்கு எட்டுவது முக்கியம். அரசியல் தொடர் அப்பணியைச் செய்கிறது.

கு. தேவநாயகம், கொழும்பு-12.

**முரசுக்கு மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்:**

- ரிம்னாஸ் எம்.பௌஸர், கல்ஹின்னை.
- எம்.எஸ்.எம்.ஹம்ஸா, களுத்துறை தெற்கு.
- கோ.சிவலிங்கம், மூதூர்.
- சிவாஜினி சதாசிவம், மாத்தளை.
- டி.எம்.அமீர்கான், திருமலை.
- செல்வி.எஸ்.புவராணி, பிட்டகந்தை.
- மு.நி.மு.றம்ஷான், ஓட்டமாவடி.
- எஸ்.ரவீந்தர், ஹுனுவத்தை.
- செல்வி யோகராணி, இரத்தினபுரி.
- எஸ்.ஜெயநாதன், கொழும்பு-03.
- திருமதி ராதா சிவபெருமாள், வெளிமடை.
- ஏ.செபஸ்தியன், உடப்பிட்டிய.
- ஜெ.நவபுத்திரன், அன்னமலை.
- ஏ.பி.எம்.பாஹிம், அக்கரையூர்-01.
- எஸ்.எச்.பனீன், ஹொறவபொத்தான.
- ஏ.சி.அன்ஹர், புத்தளம்.
- ஏ.ஜே.எம்.ஜுஃபர், கொழும்பு-15.
- வே.சசிகலா, வெரலகம.
- ரி.நிரா, ஹட்டன்.
- செல்வி.ஏ.சி.ஜெலீலா, நாச்சியாதீவு.
- றல்ஃபாடி மஹீம், கல்முனை-05.
- குகதாசன், பிரபா, மட்டுநகர்.
- மல்லிகா செல்வம், வத்துகாமம்.
- ஏ.எல்.எம்.றியாஸ்தீன், கல்முனை.
- எம்.எம்.முகம்மது ஸாகிர், சாய்ந்தமருது-10.
- சண்முகம் மனோகரன், அப்புத்தளை.
- பாத்திமா மின்ஹா, புத்தளம்.
- இரா.சுரேஸ், கந்தகெதர.
- மீனா பெருமாள்பிள்ளை, வரக்காப்பொல.
- திருமதி மலர் வேதநாயகம், பெரிய நீலாவணை.
- சண்முகி, வெளிகந்த.






படிப்பகம்

www.padippakam.com

# மதுரை ரயில் நிலையம் முன் குண்டுவெடித்தது!

## தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு குறி!

தமிழ்நாட்டில் மதுரை ரயில் நிலையம் முன்பாக கடந்த சனிக்கிழமை 31.8.96 அன்று குண்டுவெடித்தது. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தமிழக முதல்வர் கருணாநிதி மதுரை ரயில் நிலையத்திற்கு வருவதாக இருந்தது. அவர் வரும்போது வீசுவதற்காக குறிப்பிட்ட குண்டு கொண்டு வந்து வைக்கப்பட்டதா என்று சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக இதுவரை கிடைத்துள்ள விபரங்கள் பின்வருமாறு;

தமிழக முதல்வர் கருணாநிதி செப்டம்பர் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மதுரைக்கும், பின்னர் திருச்சிக்கும் விஜயம் செய்வதாக முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தது.

### கொலை மிரட்டல்

இதனையடுத்து திருச்சி ரயில் நிலை அதிகாரிகளுக்கு மிரட்டல் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது. தமிழக முதல்வர் வரும் ரயில் தகர்க்கப்படும் என்று மிரட்டல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் மதுரை வரை ரயிலில் சென்று பின்னர் கார் மூலம் திருச்சி செல்லத் திட்டமிட்டிருந்தார் கருணாநிதி.

தமிழக முதல்வரை வரவேற்பதற்காக மதுரை நகரில் பிரமாண்டமான வரவேற்பு வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன.

வீதிகளைச் சுத்தப்படுத்தும் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

மதுரை ரயில் நிலையம் எதிரே ஒரு பூங்கா இருக்கிறது. சனிக்கிழமை மாலை 4 மணியளவில் அந்தப் பூங்காவின் காவலாளி செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தார். அப்போது மூன்று பைகள் அங்கே கிடப்பதைக் கண்டார். குப்பைகள் என்று நினைத்து பைகளைத் தூக்கி வெளியில் போட்டார்.

முதல் இரண்டு பைகளையும் தூக்கிப் போட்டபோது எதுவும் நிகழவில்லை. மூன்றாவதாக இருந்த பையை தூக்கிப் போட்டதோடு பெரும் சத்தத்துடன் வெடித்தது. காவலாளி மயிரிழையில் உயிர்தப்பினார்.

சத்தம் கேட்டு மக்கள் ஓடிச்சென்று பார்த்தபோது வெடித்த பையில் இருந்து சில துண்டுப் பிரசுரங்கள் வெளியே சிதறியும், கருகியும் காணப்பட்டன.

### யார் காரணம்?

தற்போது விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இக் குண்டு வெடிப்புக்கு யார் காரணம் என்று இதுவரை தெரியவில்லை. முதல்வருக்கு குறிவைத்து வீசுவதற்காக முன்கூட்டியே குண்டைக் கொண்டுவந்து மறைத்து வைத்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தால் தமிழகம் செல்லும் இலங்கைத் தமிழ் அகதிகளும் சங்கடத்தில் மாட்டிக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழக அரசியல் போட்டிகள் காரணமாக இவ்வாறான செயல்களில் தமிழ் நாட்டிலுள்ள சில குழுக்கள் ஈடுபடும் சாத்தியமும் இருக்கிறது. தமிழ் நாட்டில் சட்டம், ஒழுங்கை ஜெயலலிதா காப்பாற்றவில்லை. தி.மு.க. பதவிக்கு வந்த பின்னர் சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்பட்டு வருகிறது என்ற கருத்து மக்களிடம் ஏற்படாமல் தடுக்கவும் இவ்வாறான செயல்கள் செய்யப்படலாம் என்ற கருத்தும் நிலவுகிறது.

ஆனாலும் இவ்வாறான சம்பவங்கள் தமிழகத்தில் மீண்டும் ஆதரவு தளத்தை உருவாக்க முனையும் புலிகள் இயக்கத்தினருக்கும் பாதகமாக அமைகின்றன.

தற்போதைய நிலையில் தமிழகத்தில் குண்டுவெடிப்புக்கள் இடம்பெறுவதை புலிகள்கூட விரும்பமாட்டார்கள் என்று கருதப்படுவதால் அவர்கள்மீது பொலிசார் உடனடியாக சந்தேகம் தெரிவிக்கவில்லை.

ஆனால் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால், புலிகளும் உள்ளே வந்துவிடக்கூடாது என்பதில் தமிழக அரசு தனது சொந்த நலன் என்ற ரீதியிலும் கவனமாக இருக்கும்.

## முல்லைச் சமர் பெண்புலிகள் முக்கிய பங்கு!

முல்லைத்தீவு இராணுவ முகாம்மீது நடைபெற்ற தாக்குதலிலும், அதன் பின்னர் நடைபெற்ற சமரிலும் பெண் புலிகளே முக்கிய பங்கு வகித்தனர். இத் தகவலை புலிகள் இயக்க மகளிர் அமைப்பால் வெளியிடப்படும் 'சுதந்திரப் பறவைகள்' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத் தீவில் பலியான படையினரில் 441 பேரின் உடல்களை செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைத்ததும் மகளிர் படையணியே என்பது குறிப்பிடத்தக்கது. மகளிர் படையணியைச் சேர்ந்த தாரணி (நிஸ்மியா) உடல்களை ஒப்படைக்கச் சென்றார்.

மணலாறு முகாம் தாக்குதலில் மகளிர் படையணியே முன்னணியில் சென்றது. தாக்குதல் தோல்வியில் முடிந்தமையால் மகளிர் படையணியைச் சேர்ந்த பலர் பலியானார்கள்.

அதன் காரணமாகவே முல்லைத் தீவு சமரில் மகளிர் படையணிக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டது. பலியான படையினரின் உடல்களையும் மகளிர் படையணி மூலமே ஒப்படைக்க உத்தரவிட்டார் பிரபாகரன்.

மணலாற்றில் பலியான புலிகளது உடல்களை பொலித்தீன் பைகளில் போட்டே படையினர் ஒப்படைத்திருந்தனர். அந்தப் பொலித்தீன் பைகளை கழிவுப் பத்திரமாக வைத்திருந்தனர் புலிகள் இயக்கத்தினர். அதே பொலித்தீன் பைகளில்தான் படையினரின் உடல்களை வைத்து கையளித்தனர் என்று கூறப்படுகிறது. உடல்கள் பழுதாகாமல் இருக்கவும், துர்நாற்றம் எழாமல் இருக்கவும் பொலித்தீன் பைகளில் உடல்களை வைத்து கொடுப்பது வழக்கமாகும்.

## "வெற்றிகரமான தாக்குதல்"

வவுனியாவில் 27.08.96 அன்று நடைபெற்ற கைக்குண்டுத் தாக்குதல் தொடர்பாக வன்னியில் இருந்து வெளியாகும் புலிகளின் ஈழநாதம் பத்திரிகையில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலத்த பாதுகாப்பு நிறைந்த வவுனியா நகரின் மத்தியில் பல வருடங்களின் பின்னர் முதன்முதலாக நடைபெற்ற வெற்றிகரமான தாக்குதல் அதுவாகும் என்று 'ஈழநாதம்' விபரித்துள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தினரே அத்தாக்குதலை வெற்றிகரமாக நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அறுபது வயதில் ஓய்வு! அரசு முடிவு!

### உஷாராகிறார்கள் வயதான ஊழியர்கள்!

ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் அறுவது வயதுக்கு மேற்பட்ட சகலரும் பாதுகாப்புத் திணைக்களங்கள் உட்பட சகல திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் என்பவற்றிலிருந்தும் வெளியேற்றப்பட வேண்டும் என அரசு தீர்மானித்துள்ளது. இது சம்பந்தமான அறிவுறுத்தல்கள் 21.10.1994 திகதியிடப்பட்ட சுற்றறிக்கை மூலம் சகல திணைக்களங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் வடக்கு-கிழக்கு மாகாண சபையைப்பொறுத்தமட்டில் இவ் விடயம் புறக்கணிக்கப்பட்டே வந்திருக்கிறது. இரண்டு ஆண்டுகளின் பின்னரே தலைமைச் செயலர் தி. கிருஷ்ணமூர்த்தி 15.08.1996 திகதியிடப்பட்ட சுற்று நிருபமொன்றின் மூலம் இவ்வருடம் டிசம்பர் 31ந்திகதியுடன் அறுபது வயதுக்கு மேற்பட்ட சகல ஒப்பந்தகார உத்தியோகத்தர்களும் வெளியேற்றப்பட வேண்டும் என அறிவுறுத்தியிருக்கிறார்.

இதற்கு அனுசரணையாக வெளியேற விருக்கும் உத்தியோகத்தர்களின் கடமைகளை எதிர்காலத்தில் ஆற்றுவதற்கு வேறு உத்தியோகத்தர்கள் உடனடியாகப் பயிற்றுவிக்கப்படல் வேண்டுமெனவும், அவ்வாறானவர்களின் பெயர்களை தமக்கு அறிவிக்க வேண்டும் எனவும் தலைமைச்செயலர் கோரியுள்ளார்.

சுற்று நிருபத்தையடுத்து திணைக்களங்கள் பல சுறுசுறுப்பாகின. புதியவர்களைப் பயிற்றுவிப்பதற்கல்ல; அறுபது வயதானவர்களை விட்டால் வேறு வழியில்லை என்று நிரூபிப்பதற்கான காரணங்களைத் தேடுவதில்தான்!

தங்கள் கடமைகளைப் பொறுப்பேற்பதற்குத் தகுதியான உத்தியோகத்தர்கள் எவரும் இல்லையெனவும், தாங்கள் வெளியேற்றப்பட்டால் திணைக்கள வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்து விடும் எனவும் சம்பந்தப்பட்டவர்களால் கடிதங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

உண்மையில் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் சில பதவிகள் தகுதியான ஆட்கள் தயார் செய்யப்படும்வரை பழையவர்களை வீட்டுக்கு அனுப்புவது முறையல்ல. ஆனால் புதியவர்களை பயிற்றுவிப்பதில் திறமையான பழையவர்கள் முயலலாமே!

## முஸ்லிம்களுக்கு தனியான அலகு!

### முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டில் தீர்மானம்

"ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பங்கு கொள்ளாத எந்தவொரு தீர்வும் இனப் பிரச்சனைக்கு தீர்வாக அமையாது." இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறையில் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரசின் 14வது தேசிய மாநாட்டில் உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

40 வீதமான முஸ்லிம்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒன்றுபடுத்தியுள்ளது. வடக்கு-கிழக்கில் உள்ள முஸ்லிம்களைப் பொறுத்தவரை வடக்கு-கிழக்கு இணைப்பு, பிரிப்பு என்பதற்கு அப்பால், வடக்கு-கிழக்கில் முஸ்லிம்களுக்கான தனி அலகு ஒன்று தேவை என்பதே முஸ்லிம் காங்கிரசின் நிலைப்பாடாகும் என்றும் அமைச்சர் அஷ்ரப் அங்கு கூறினார். மாநாட்டில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் ஆகிய தேர்தல் தொகுதிகளை அடித்தளமாகக் கொண்ட முஸ்லிம் அரசியல் அலகு ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும்.

சிவராத்திரி, ஹஜ் போன்ற விடுமுறைகளை நீக்கியதை கண்டிப்பதோடு அவற்றை மீண்டும் விடுமுறை தினங்களாக்குமாறு கோருகிறோம்.

லிபியா, ஈராக், ஈரான் நாடுகள்மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை நீக்க வேண்டும். ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சம்மாந்துறையில் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸ் மாநாடு தொடர்பான சுவரொட்டிகள் சில பகுதிகளில் கிழிக்கப்பட்டன. முஸ்லிம் கட்சியைச் சேர்ந்தவர்களே அவ்வாறு செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## "தனுவுக்கு நினைவாலயம் கட்டுவோம்"

### கனடா மாநாட்டில் முழக்கம்

கனடாவில் உலகத் தமிழ் பண்பாட்டு மாநாடு ஆகஸ்ட் 24,25,26ம் திகதிகளில் நடைபெற்றது.

இதேவேளை கனடாவில் உள்ள புலிகள் இயக்கத்தினரின் உலகத் தமிழ் இயக்கமும் எழுச்சி விழா ஒன்றை நடத்தியது. இந்த விழா ஆகஸ்ட் 31ம் திகதி அன்று நடைபெற்றது. உலகத் தமிழர் இயக்கத்தின் 10வது ஆண்டை முன்னிட்டு ரொறன்றோவில் உள்ள 'அலன் ஏ லம்பேட்' ஸ்ரேடியத்தில் எழுச்சி விழா நடைபெற்றது.

தமிழ்நாட்டிலிருந்து நெடுமாறன், பாட்டாளிமக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ், பாட்டாளிமக்கள் கட்சி பிரமுகர் தீரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் புலிகள் இயக்க பிரசாரப் பாடல்களை பாடி பல இசை நிகழ்ச்சிகளை நடத்தியவர் தேனிசை செல்லப்பா. தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் தேனிசை செல்லப்பா.

எழுச்சி விழாவில் கலந்து கொண்டு தேனிசை செல்லப்பாவும் பாடல்களைப் பாடினார்.

"மே 21ம் திகதி ஸ்ரீ பெரும் புதூரில் ராஜீவ் காந்திக்கு நினைவாலயம் கட்டியிருக்கிறார். அதே ஸ்ரீபெரும் புதூரில் எமது பத்தினித் தெய்வம் தனுவுக்கும் நினைவாலயம் கட்டுவோம்." என்றும் எழுச்சி விழாவில் சபதம் செய்தார் தேனிசை செல்லப்பா.

எழுச்சி விழாவுக்கு புலிகள் இயக்கத்தினர் பொக்கற் கத்திகளுடன் பாதுகாப்பு வழங்கினர். கனடா பொலிசார் கடும் கண்காணிப்பை மேற்கொண்டதோடு, புலிகள் இயக்க உறுப்பினர்களை சோதனையிட்டு, இரண்டு டசின் பொக்கற் கத்திகளை கைப்பற்றினார்கள்.

உலகத் தமிழர் இயக்க எழுச்சி மாநாட்டில் நாலாயிரம் பேர் கலந்து கொண்டதாக கனடாவில் இருந்து வெளிவரும் ரொறண்றோ ஸ்டார் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மாநாட்டில் நெடுமாறன் பேசும்போது, உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற ஒரே தலைவர் பிரபாகரன் என்று புகழாரம் சூட்டினார். விடுதலைப் புலிகள் மட்டுமே தமிழின விடுதலைக்காகப் போராடி வருகிறார்கள் என்றும் தெரிவித்தார்.

செப்டம்பர் பத்தாம் திகதி கனடாவில் உள்ள புலிகள் இயக்க ஆதரவு அமைப்புக்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிதிக்கான வருடாந்த இராப்போசன விருந்தொன்றை நடத்துகின்றன. இதில் மன்னார் பிஷப் ராஜப்பு ஜோசப் கலந்து கொள்ளவுள்ளார்.

## "வாராய் புலி நீ வாராய்"

### பண்பாட்டு மாநாட்டில் பாடல்!

கனடா ரொறண்ரோ நகரில் கடந்த ஆகஸ்ட் மாதம் 24, 25ம் திகதிகளில் ஆறாவது உலகத் தமிழ் பண்பாட்டு மாநாடு நடைபெற்றது.

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் ஸ்தாபகர் குரும்பசிட்டி கனகரத்தினம் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் இருந்து மாநாட்டுக்காக கனடா சென்ற குரும்பசிட்டி கனகரத்தினத்துக்கு மாநாட்டில் உரிய இடம் வழங்கப்படவில்லை.

இதேவேளை உலகத் தமிழ்பண்பாட்டு மாநாட்டில் கலந்துகொள்வதாக ஒப்புக் கொண்டிருந்த தமிழகத் தலைவர்கள் சிலர் அதில் கலந்து கொள்ள செல்லவில்லை. பிரதம விருந்தினராக குறிப்பிடப்பட்ட தமிழக அமைச்சர் தமிழ்குடிமகன் கனடா செல்லவில்லை.

ஆனால் மாநாட்டுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்படாத பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். அவரை மாநாட்டில் பேச அனுமதிக்குமாறு கனடாவில் உள்ள புலிகள் இயக்கத்தினர் வலியுறுத்தினர். அதனால் மாநாட்டில் பேச அவருக்கு அனுமதி கிடைத்தது.

அரசியல் எதுவும் பேசவேண்டாம் என்று கூறியே டாக்டர் ராமதாஸை பேச அனுமதித்தனர். ஆனால் டாக்டர் ராமதாஸ் புலிகள் இயக்கத்தினரை பாராட்டியும், ஆதரவு தெரிவித்தும் பேசத் தொடங்கி விட்டார். அதனால் மாநாட்டு தலைவர் செல்லையா அவரது பேச்சில் குறுக்கிட்டார். மாநாட்டில் கலந்து கொண்ட புலிகள் இயக்கத்தினர் ராமராஸை பேசவிடுமாறு குரல் எழுப்பினார்கள். பயந்து போனார் மாநாட்டு தலைவர். தான் குறுக்கிட்டதற்கு மன்னிப்பு கேட்டுவிட்டு ராமதாஸை பேச அனுமதித்தார்.

மாநாட்டில் கலை நிகழ்ச்சி நடத்த தமிழக பாடகர் தீபன் சக்கரவர்த்தியும், இயக்குநர் பாரதிராஜாவும் சென்றிருந்தனர். மாநாட்டின் மூன்றாம் நாள் நடைபெற்ற 'நட்சத்திர இரவு' நிகழ்ச்சியில் சுமார் 1500 பேர்வரை மக்கள் கலந்து கொண்டனர்.

'வாராய், நீ வாராய்' என்ற பாடலை, 'வாராய் புலி நீ வாராய்' என்று பாடினார் தீபன் சக்கரவர்த்தி.

## இந்திய மத்திய அரசு தலையிடவேண்டும்

### தமிழக முதல்வர் கலைஞர் தெரிவிப்பு

"இலங்கையில் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டுவர இந்திய மத்திய அரசு முயலவேண்டும் என்று கோருவேன்" இவ்வாறு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

1.09.96 ஞாயிற்றுக்கிழமை மதுரையில் நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாட்டிலேயே தமிழக முதல்வர் அவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்ததாவது;

அப்பாவி மக்கள் பலியாவதை தி.மு.க எதிர்த்தே வந்திருக்கிறது. மத்திய அரசு இவ்விடயத்தில் தலையிட்டு அங்கு நடக்கும் போரை முடிவுக்கு கொண்டுவரவேண்டும்.

யூலை 31ம் திகதி முதல் ஆயிரம் பேர்வரையான ஈழத் தமிழ் அகதிகள் தமிழகம் வந்துள்ளனர்.

அகதிகளை ஏற்றிவந்த மீனவர்களின் படகுகளை பறிக்குமாறு தான் ஆணையிடவில்லை என்றும் தமிழக முதல்வர் தெரிவித்தார்.

இதேவேளை தமது படகுகளை திருப்பித் தருமாறு கோரிக்கை விடுத்து இருவாரகாலமாக தமிழக மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தினார்கள். கடந்த சனிக்கிழமை தமிழக மீனவர்கள் தமது போராட்டத்தை முடித்துக் கொண்டு தொழிலுக்குச் சென்றனர். பறிமுதல் செய்யப்பட்ட மீன்பிடிப் படகுகள் திருப்பிக் கொடுக்கப்பட்டதை அடுத்தே மீனவர்கள் போராட்டத்தைக் கைவிட்டனர்.

இலண்டன் பி.பி.சிக்கு மீனவர் சங்கத் தலைவர் அளித்த பேட்டியில், "மனிதாபிமான அடிப்படையிலும், நாங்களும் அவர்களும் தமிழர்கள் என்ற அடிப்படையிலுமே ஈழ அகதிகளை ஏற்றிவருகிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

## கடத்தலைத் தடுக்க அணைக்கட்டுத் தகர்ப்பு!

மட்டக்களப்பு சித்தாண்டியில் புலிகள் வாகனக் கடத்தலில் ஈடுபடுவதைத் தடுக்கு முகமாகப் படையினர் வீதிக்குக் குறுக்கே அகழி தோண்டியிருந்தனர். எனினும் இதனையும் முறியடித்து புலிகள் அப்பகுதியில் மேலும் வாகனக் கடத்தலில் ஈடுபட்டனர்.

இதன் பின்னர் படையினர், வாகனங்களைக் கடத்தி வயல் வெளிகளுக்கூடாகக் காட்டுப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லப் புலிகள் பயன்படுத்தும் பாதைகளில் ஒன்றான மகிழையடிக்கட்டு என்னும் உறுகாமம் பெரிய நீர்ப்பாசனப் பிரிவின் அணைக்கட்டொன்றைக் கடந்த வாரம் குண்டு வைத்துக் தகர்த்துள்ளனர். இதனால் அப்பகுதியூடாகச் சூடடிப்பதற்கு உழவு இயந்திரங்கள் செல்ல முடியாத நிலையேற்பட்டுள்ளது. அத்துடன் இவ் அணைக்கட்டுத் தகர்ப்பால் சின்னவெளி, சின்னாளன்வெளி ஆகிய கண்டங்களைச் சேர்ந்த சுமார் 800 ஏக்கர் நெற்செய்கைக்குரிய நீர்ப்பாசனம் கிடைக்காமல் போகும் என்று தெரியவருகிறது.

மேலும் இச்சம்பவத்தின் காரணமாக வயல் வெளிப் பயணங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறது. இது மழைப் பருவ காலமாகையால் மக்கள் சேறும் சகதியும் நிறைந்த வயல்களுக்கூடாகவே பயணம் செய்ய வேண்டியிருக்கும்.

சித்தாண்டியில் முருகன் கோயில் வீதி, தீத்தக்கேணி வீதி என்பனவற்றில் அகழி தோண்டப்பட்டுள்ளது.

## மீனவர்கள் விடுவிப்பு!

ஏறாவூர் வாவியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேலை முஸ்லிம் மீனவர்கள் ஐவர் அவர்களது தோணிகளுடனும், வலைகளுடனும் கடந்தவாரம் புலிகளால் கடத்தப்பட்டிருந்தனர்.

பின்னர் அம்மீனவர்களின் உறவினர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் அவர்களை மீட்டுத் தருமாறு கோரியதை அடுத்து அம்மீனவர்கள் புலிகளால் விடுவிக்கப்பட்டனர். எனினும் அவர்களது தோணிகளையும் வலைகளையும் புலிகள் இன்னமும் தம்வசமே வைத்துள்ளனர்.

## மட்டக்களப்பில் சமாதானப் பூங்கா

(ஏறாவூர் திருபர்)

கடந்த கால வன்முறைப் பாதிப்பிற்குள்ளாகியுள்ள இளம் சிறார்களின் மனவடுக்களைக் குணப்படுத்தும் செயற்பாடுகளில் சிறார்களை ஈடுபடுத்துவதற்காக கனடா மக்களின் உதவியுடன் மட்டக்களப்பில் சிறுவர் வண்ணத்துப்பூச்சி சமாதானப் பூங்கா ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இப்பூங்காத் திறப்பு விழா 11.09.96 அன்று நடைபெறுகிறது. அன்றைய வைபவங்களில் கௌரவ அதிதியாக கனேடிய உயர் ஸ்தானிகராலயத்தின் அபிவிருத்தி ஆலோசனைப் பிரிவைச் சேர்ந்த செல்வி. மார்னி கோர்வின் கனடாவிலுள்ள சுழற்சிப் பூங்காவின் கண்டுபிடிப்பாளரும், இயக்குனரும், கலைஞருமான திருவாளர் போல் ஹோகன், மட்டக்களப்பு உளநல உதவி நிலையத்துப் பணிப்பாளர் பிதா, போல் சற்குணநாயகம் எஸ்.ஜே அவர்களும் மற்றும் சகல சமயப் பெரியார்களும் கலந்து கொள்வார்கள்.

இத்திட்டம் அமுல் படுத்தப்படுமுன்னர் கடந்த மூன்று வருடங்களாக இலங்கையில் வன்முறைப் பாதிப்பிற்குள்ளான தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களைச் சேர்ந்த சிறார்களிடத்தில் கனடா மக்.மாஸ்டர் பல்கலைக் கழகத்தின் 'ஹெல்த் றீச்' எனப்படும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வன்முறைகள் ஏற்படுத்திய பாதிப்புக்களின் தன்மைகளைப் பற்றிய ஆய்வு நடத்தப்பட்டு அதன் பிரகாரமே இத்திட்டம் இலங்கையில் முதன் முதலாக மட்டக்களப்பில் ஆரம்பித்து வைக்கப்படுகிறது. உள்ளூர் உதவி நிறுவனமான மட்டக்களப்பு உள உதவி நிலையத்தின் ஊடாகவே இச் செயற்றிட்டம் அமுலாக்கப்படுகிறது.



படிப்பகம்

# "என் மகன் நிரபராதி"

## பலியான இளைஞரின் தந்தை முறையீடு

கல்முனையில் 15.08.96 அன்று இரண்டு தமிழ் இளைஞர்கள் விசேஷ அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அமைச்சர்கள் கலந்து கொண்ட கூட்டமொன்றில் தாக்குதல் நடத்தவந்த சுருப்பலிலேயே அவர்கள் என்று அதிரடிப் படையினர் தெரிவித்திருந்தனர்.

அச் சம்பவம் தொடர்பாக வெளியாகும் தகவல் முரண்பாடாக இருப்பதாக முன்னரே 'முரசு' செய்தி வெளியிட்டிருந்தது.

பலியான இளைஞர்களில் ஒருவரான நாகராசா தமேஸ்குமார் சர்வோதய அமைப்பில் பணியாற்றியவர். தமேஸ்குமாரின் தந்தையான நாகராசா சர்வோதய தலைவருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். தனது மகன் நிரபராதி என்று அதில் குறிப்பிட்டுள்ளார். அக் கடிதம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது:

குருக்கள் வீதி,
பாண்டிருப்பு-02, கல்முனை.

மேற்குறிப்பிட்ட முகவரியில் வசிக்கும் கணபதிப்பிள்ளை-நாகராசா ஆகிய நான் எனது மகனான நா. தமேஸ்குமார் பற்றி அறியத் தருவதாவது:

நா.தமேஸ்குமார் 1974.11.24 திகதி பிறந்து காரைதீவு வசிப்பிடமாகவும் கொண்டு, 1980.01.16 முதல் கமு/ காரைதீவு இ.கி.மி. ஆண்கள் வித்தியாலயத்தில் 1ம் ஆண்டு தொடக்கம் 6ம் ஆண்டுவரை கல்வி பயின்று, 06.01.86 இல் இருந்து 07ம் ஆண்டு முதல் 13ம் ஆண்டு வரைக்கும் கமு/ விபுலானந்த மத்திய கல்லூரியில் கல்வி பயின்று, 1993 ஆவணி மாதம் க.பொ.த (உ.த்) பரீட்சை எழுதியிட்டு, மேற்குறிப்பிட்ட முகவரியிலே இடம்பெயர்ந்துள்ளார். பின் 1993.10.01 முதல் கமு/பாண்டிருப்பு மகாவித்தியாலயத்தில் தொண்டர் ஆய்வுகூட உதவியாளராகப் பணியாற்றி வரும்போது 1994.11.19 வடகிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டு அமைச்சின் செயலாளர் மூலமாக தற்காலிக ஆய்வுகூட உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டது. அதன் பின் 1995.05.16 அன்று இவருக்கு வழங்கப்பட்ட நியமனம் இரத்துச் செய்யப்பட்டதாக வடகிழக்கு மாகாண செயலாளரிடமிருந்து கடிதம் கிடைக்கப் பெற்றது. இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடு மேன்முறையீடு செய்தும் பலனளியாத நிலையில் சம்மாந்துறை பல்தொழில்நுட்பக் கல்லூரியின் என்.சி.ஏ.ரி. (N.C.A.T) 1ம் வருட மாணவனாக தற்பொழுது படித்துக் கொண்டிருந்தார்.

இந்நிலையில் 1994.01.01 முதல் சர்வோதய அங்கத்தவராயும் இருந்து வந்துள்ளார்.

இந்நிலையில் அண்மையில் நடந்த கதிர்காமத் தீர்த்தோற்சவத்தில் கலந்து கொண்டு நேர்த்திக்கடன் ஒன்றுக்காகத் தனது தலைமுடியை இறக்கிவிட்டு வந்து வெளிநாடு போய் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கடவுச்சீட்டும் (PASS PORT) பெற்றுள்ளார். இது சம்பந்தமாக 15.08.96 அன்று காலை வெளிநாட்டு வேலைவாய்ப்பு உதவி முகவரைச் சந்திப்பதாகச் சொல்லிவிட்டு தன்னுடைய மூமா- 24033351 இலக்கமுடைய துவிச்சக்கர வண்டியில் தனிமையில் சென்றார். அவர் போகும்போது கழுத்தில் 16 பி.கி. நிறையுள்ள தங்க மாலையும், மொன்னும் கையில் கடிகாரமும் அணிந்திருந்தார்.

அதன்பின் மு.ப. 10.30 மணி நேரமளவில் என் மகனை விஷேட அதிரடிப்படையினர் கைது செய்ததாகக் கேள்வியுற்று நானும் என் மனைவியும் கல்முனை பொலிஸ் நிலையத்திற்கு விரைந்து விசாரிப்போது அப்படி யொருவரும் இல்லையென மறுத்து விட்டனர். பின்பு எனது மகன் சுடப்பட்டு கல்முனை ஆதார வைத்திய சாலையில் உள்ளதாக கேள்வியுற்றோம். அங்கு சென்ற போது என் மகன் பிணமாகக் காணப்பட்டார்.

எனது மகன் நா. தமேஸ்குமார் இது வரைக்கும் எதுவித பயங்கரவாத அமைப்புக் களுடனும் தொடர்பு வைத்திருந்ததில்லை என்பதை நான் நன்கு அறிவேன்.

இது சம்பந்தமாக உங்களால் முடிந்த பங்களிப்பைச்செய்து உதவுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்,
க. நாகராசா

## புலிகளின் கையில் பட்டியல்

(காரைதீவு நிருபர்)

கல்முனை(தமிழ்) பிரதேசத்திற்கு புனர்வாழ்வு அமைச்சால் வழங்கப்பட்ட 150 பேருக்கான வீடமைப்பு நன்கொடைப் பட்டியல் புலிகளின் இயக்கத்தின் பரிசீலனையில் உள்ளதாம்.

அண்மையில் 150 பேருக்கான முதற் கட்டக் கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபாவுக்கான காசோலைகளை அமைச்சர் அஷ்ரப் கல்முனை நகர மண்டபத்தில் வைத்து வழங்கியது தெரிந்ததே.

இந்த 150 பேரில் சிலர் தனிப்பட்ட செல்வாக்கைப் பயன்படுத்தி பயன் அடைந்திருப்பதாக மக்கள் ஏலவே புகார் தெரிவித்திருந்தனர்.

இதனையறிந்த புலிகள் அநீதியான முறையில் பணம் பெற்றோரின் விபரங்களை சேகரிக்கத் தொடங்கியுள்ளனராம். நேர்மையான முறையில் உரியவர்களுக்கு பணம் சென்றடைய வேண்டுமென்பதில் புலிகள் கண்ணுங்கருத்துமாக உள்ளனராம்.

## பலத்த மழையும் பெருத்த சேதமும்

(ஏறாவூர் நிருபர்)

இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோகச் செய்கை விவசாயிகளுக்கு அதிர்ஷ்டமாக அமைந்துவிட்டது. அதிகரித்த விளைச்சல் காணப்படுவதுடன் நெல்விலை வழக்கத்திற்கு மாறாக இரட்டிப்புக்கு மேல் இருப்பதுமே விவசாயிகளின் குதூகலிப்பிற்குக் காரணமாகும்.

வழக்கமாக நெல் அறுவடைக் காலத்தின்போது ஆகக்குறைந்தளவில் காணப்படும் ஒரு சாக்கு நெல்விலை 400-500 ரூபா வரையாக இருக்கும். ஆனால் இம்முறை இது நெல் அறுவடைக்காலமாக இருந்தும் ஒரு மூடை நெல்லின் விலை 900-1000, ரூபாவரையாக உயர்ந்துள்ளது. இம்முறை ஏற்பட்ட கடும் வரட்சிகாரணமாக குறைந்தளவில் நெற்செய்கை பண்ணப்பட்டதே இதற்குக் காரணமாகும். மட்டக்களப்பில் ஒரு கொத்து அரிசியின் விலை 28/= ரூபாவுக்குமேல் உயர்ந்துள்ளது.

இதேவேளை விவசாயிகளின் மகிழ்ச்சியில் சலிப்பை உண்டாக்கும் வண்ணம் கிழக்கில் கடந்த சில நாட்களாக இடைக்கிடையே பலத்த மழைபெய்து வருகிறது. நெல் அறுவடைக் காலத்தில் இப்பலத்த மழைபெய்து அதிக இழப்பை ஏற்படுத்தியிருப்பதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## வைத்தியசாலையின் குறைகளை ஆராயக் குழு

## சுகாதார அமைச்சரின் விசேட ஏற்பாடு

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு பொதுவைத்தியசாலையில் நீண்ட காலம் இடம்பெற்றுவரும் பல சீர்கேடுகள் குறித்து ஆராய சுகாதார அமைச்சு தற்போது கவனமெடுத்துள்ளது.

இதுபற்றி ஆராய்வதற்காக சுகாதார அமைச்சினால் உயர்மட்டக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் திரு. க. வேலும்மயிலும் தலைமையில் இயங்கவிருக்கும் இக்குழுவில் சுகாதார சேவைகள் பணிப்பாளர்களான டாக்டர் திரு. துரைரெத்தினம், திரு. ஜயசிங்ஹ ஆகியோர் இடம்பெறுகிறார்கள்.

மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் நீண்ட காலமாக கவனிப்பாரற்று இடம்பெற்றுவரும் சீர்கேடுகளாலும், அசமந்தப் போக்குகளாலும் நோயாளிகளும், பொதுமக்களும் சலிப்படைந்துள்ளனர் என்பது சகலரும் அறிந்ததே.

இவ்வைத்தியசாலையின் சீர்கேடுகள் கண்டறியப்பட்டு முறைகேடுள்ள அதிகாரிகளுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டால் பொதுமக்கள் இவ்வைத்தியசாலை மீது வைத்திருக்கும் அவநம்பிக்கை நீங்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## பணிப்பாளர் பதில் சொல்வாரா?

(காரைதீவு நிருபர்)

நெதர்லாந்து அரசினுதவியுடன் அம்பாறை மாவட்டத்தில் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால்-72 பாடசாலைகளையும், பல ஆஸ்பத்திரிகளையும் புனரமைக்க பல கோடி ரூபாக்கள் ஒதுக்கப்பட்டதாக செய்திகள் தெரிவித்தன.

அதாவது 3.5 கோடி ரூபா கல்விக்கும், 2.5 கோடி ரூபா சுகாதாரத்திற்கும் என ஒதுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

அதற்கான மதிப்பீடுகள் உரிய திணைக்களத்திற்கு உரியவாறு அனுப்பிவிட்டு வழிமேல் விழிவைத்துக் கொண்டு நிற்கிறார்கள் அதிபர்கள். இருமாதகாலமாகிறது, எதையும் காணோம்!

ஏன் இந்தத் தாமதம்? என பாடசாலை அதிபர்கள் வினவுகின்றனர். வேறு எதற்கும் இந்நிதி செலவழிக்கப்படுகிறதா? என்ற அச்சமும் எழுந்துள்ளது.

திட்டப்பணிப்பாளர் திடமான பதிலைக் கூறுவாரா? என பலரும் எதிர்பார்க்கின்றனர்.

## பஸ் கட்டணம் குறைப்பு!

(மன்னார் நிருபர்)

கடந்த ஜூலை 01 முதல் நாடெங்கும் உள்ள தனியார் மற்றும் அரச பஸ்களுக்கான போக்குவரத்துக் கட்டணம் 10% முதல் 30%வரை உயர்த்தப்பட்டமை யாவரும் அறிந்ததே!

இவற்றிற்கு மாற்றமாக மன்னார் இ.போ.ச. மட்டும் தனது பயணக் கட்டணத்தை 40% முதல் 50%மாகக் குறைத்துள்ளது.

மன்னாரிலிருந்து தலைமன்னாருக்கான முன்னைய பஸ் கட்டணம் 15 ரூபா. தற்போது இது 7.50 சதம் முதல் 8.50 சதம் வரை அறவிடப்படுகின்றது.

மன்னார்- பேசாலைக்கான பஸ் கட்டணமும் குறைக்கப்பட்டுள்ளது.

நாடெங்கும் பஸ்கட்டணங்களில் உயர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது இங்கு மட்டும் புதுமையைக் கொண்டு வந்த மன்னார் இ.போ.ச. முகாமையாளர் நிச்சயமாக ஒரு சாதனை வீரராகக் கருதப்படுகின்றார்.

இந்த சாலையில் கடமை புரியும் ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய சம்பளத்தை கொழும்பிலிருந்து கொண்டு வந்து மாதாந்தம் இவர் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மக்கள் தொகையோ 80 ஆயிரம்

## இருப்பதோ ஒரே ஒரு பிரசவவிடுதி!

(அம்பாறை மாவட்ட நிருபர்)

சம்மாந்துறை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் ஒரே ஒரு பிரசவவிடுதி மட்டுமே இயங்கிவருவதால் பிரசவத் தாய்மார்கள் பெரும் அவலங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

எண்பதாயிரம் மக்களையும் சுமார் 240 கிலோமீட்டர் பரப்பையும் கொண்ட சம்மாந்துறைப் பிரதேசம் பின் தங்கிய வறிய மக்கள் வாழும் பல குடியேற்றக் கிராமங்களை உள்ளடக்கியதாகும்.

இப்பிரதேசத்தில் சம்மாந்துறை மாவட்ட வைத்தியசாலையில் மட்டுமே பிரசவவிடுதி இயங்குவதால், பல தூரக் கிராமங்களிலிருந்தும் பிரசவத்தாய்மார்களை இங்கேயே கொண்டுவந்து அனுமதிக்க வேண்டிய அவலம் நீடித்துவருகின்றது.

இரவு வேளைகளில் பிரசவ வேதனைக்குள்ளாகும் பிரசவத்தாய்மாரை பெரும் கஷ்டங்களுக்கு மத்தியிலேயே சம்மாந்துறை மாவட்ட வைத்தியசாலை பிரசவவிடுதிக்கு கொண்டு வந்து அனுமதிக்க வேண்டியுள்ளது.

இந்த அவலம் குறித்து சுகாதார அமைச்சு உடன் கவனம் செலுத்துவதுடன், பரந்து விரிந்த இப்பிரதேசத்தில் ஆங்காங்கே பிரசவ விடுதிகளை அமைக்கவும் முன்வரவேண்டுமெனக் கோரப்படுகின்றது. கவனம் திரும்புமா? காரியம் நடக்குமா?

## வட்டியில்லா இஸ்லாமிய வங்கி

## மூன்றாண்டு பூர்த்தி

(அக்குறணை நிருபர்)

இஸ்லாமிய முறையிலான வங்கித் திட்டமொன்றை அக்குறணை இஸ்லாமிய ஊழியர் சங்கம் தனது அங்கத்தினரைக் கொண்டு ஆரம்பித்து மூன்று வருடங்கள் வெற்றிகரமான சேவையாற்றியுள்ளது.

வட்டியில்லாத ஆபரணக்கடன், சிறுவர் சேமிப்பு ஊக்குவிப்புத்திட்டம், நிரந்தர வைப்பு, நடைமுறைக் கணக்கு போன்ற இன்னோரன்ன திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் இவ் வங்கியின் தலைவர் அல்ஹாஜ் மௌலவி எச்.எம். எம்.ஹாலித் அவர்கள் இவ்வங்கியின் செயல் பற்றிக் குறிப்பிடும்போது "வட்டி எனும் கொடிய ஹராத்தில் இருந்து எமது முஸ்லிம்களை ஹலாலான வழியின் பக்கம் திருப்புதலே எமது வங்கிமுறையின் நோக்கம்" என்று தெரிவித்தார்.

ஆரம்பத்தில் அக்குறணை பிரதேசத்தில் மட்டுமே அங்கத்தினரைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வங்கி, இப்பொழுது பரந்து நாடளாவிய ரீதியில் அங்கத்தினரைச் சேர்ப்பதற்கு திட்டமொன்றை அமுல் படுத்தியுள்ளது.

ஐந்து பங்குகளைக் கொண்ட (ஒரு பங்கு 1000 ரூபாய்) ஆயிரம் அங்கத்தினரை இவ்வருட இறுதிக்குள் சேர்த்துக் கொள்ளும் புதிய திட்டமொன்றையும் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.


**ரிஷி அஜமாமிச லேகியம்**

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 195/=,105/=
தங்க பஸ்பம் கலந்தது 990/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 890/=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398

**என்றும் சந்திக்கலாம்**

எங்களது வாடிக்கையாளர்களின் வீண் சிரமத்தையும் அலைச்சலையும் கருத்தில் கொண்டு திரு. P.K. சாமி அவர்களிடம் நுவரெலியாவிலும் கொழும்பிலும் வரும் வாடிக்கையாளர்கள் நேரடியாக அவரவர் பிரச்சனைகளைக் கூறி தீர்வுக்கான புதுமுறையாக செட்லைட் நெட்வேர்க், T.V. மூலம் திரு.P.K. சாமியுடன் கலந்துரையாடலாம்.

**தேவை**

கீழ்வரும் இடங்களுக்கு தினமுரசு விற்பனை முகவர்கள் தேவைப்படுகின்றார்கள். விண்ணப்பிக்கவும்

Kahatagasdigiliya, Hemmathagama, Dambadeniya, Deraniyagala, Polgahawala, Welikanda, Hakmana, Hettipola, Ratnapura, Hali-Ela, Kegalle, Ragama, Ampara, RAMBUKANA, Welipanna, Akuressa, Nivitigala, Kalawana

விநியோக முகாமையாளர்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772, கொழும்பு.

**Bright ன் தபால் மூலம் கல்வித்திட்டம்**

மூன்றே மாதங்களில் ஆங்கிலம்/ சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத் தரப்படும் விபரங்களுக்கு கீழ்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க.

பெயர்..............................
விலாசம்..............................

BRIGHT BOOK CENTRE (PVT) LTD
S-27, FIRST FLOOR, P.O.BOX 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX,
COLOMBO 11. TEL : 434770

**Bright - 1997 ஆண்டு மாணவர் களுக்கான ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைமுன்னோடிப் பயிற்சி**

Bright ன் தபால் மூலம் கல்வி

**புதிய வெற்றிக்கனி 1-10**

புதியதோர் அமைப்பு, புதியதோர் உத்வேகம், அறிவு, திறன், மனப்பாங்கு வளர்ச்சியூடாக புதியதோர் வழிகாட்டல் நூலாக வெளிவரவுள்ளது.

புதிய வெற்றிக்கனியை தொடர்ச்சியாக பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவம் பெற தொடர்பு கொள்க.

Bright Book Centre (Pvt) Ltd
S-27, First Floor, P.O. Box 162
Colombo Central Super Market Complex
Colombo -11 T.P : 434770



**3 மாதத்தில் தீர்வு**

கணவன்-மனைவி பிணக்கு, பிரிந்தவர் ஒன்று சேர, காதலித்தவர் திருமணம் புரிய, தொழில் உயர்ச்சியை மேம்படுத்த, வீழ்ச்சியுற்ற தொழிலை வீழ்ச்சி அடையா வண்ணம் இருந்த நிலைக்கு 3 மாதத்திற்குள் கொண்டு வர, எண்ணிய தொழில் கிடைக்க, திருமணமே ஆகாதென விரக்தி உற்றோருக்கு தெய்வீக வரத்தால் திருமணம் நடைபெற இன்னும் முனிவர்களால் அருளிய ஜீவிய கால காண்டம்-நாடி ஜோதிடம் எழுதிக் கொள்ள, அக்குபஞ்சர் சிகிச்சை மூலம் காது கேளாதவர், கண் தெரியாதவர், வாய்பேச முடியாதவர்கள், பாரிச வாதம், முடக்கு வாதம், இடுப்பு வலி, அஸ்மா, படபடப்பு, வீரியமின்மை, பெண்களுக்கு வெள்ளைபடுதல், மாதவிடாய் கோளாறு, மனநோய் (ஹிஸ்டீரியா) குழந்தை பேறின்மை, பாலியல் குறைபாடுகள், ஞாபக சக்தி இன்மை, நித்திரை இன்மை, பசியின்மை, தலை முடி உதிர்தல், தோல், நோய் இப்படி தீர்க்க முடியாத வியாதிகளுக்கு மனோதத்துவ ரீதியிலும், வைத்திய முறையிலும், மாந்திரீக முறைகளிலும் வெற்றி கண்டவர். எத்தனை எத்தனையோ பேர்-இதைவிட பெரிய சக்தி வந்தாரை வாழவைக்கும் மகாசக்தி ஸ்ரீ துர்கா தேவியின் அருளால் வசதி அற்றோருக்கு எம்மாத கடைசியும் கொழும்பிலும், நுவரெலியாவிலும் இலவச அற்புத ஞான தியான பூஜை நடைபெறுகிறது. தேவைகளுக்கு முன் அறிவித்தலுடன் தொடர்புகொள்ளவும். தொடர்புகளுக்கு-

P.K.SAAMI (J.D.G.A.N) & J.P, மலையாள மாந்திரீக உச்சாடன பீடம், 162, கொட்டாஞ்சேனை வீதி, கே பிளக் ரோட், கொழும்பு-13.
தொலைபேசி - 01,342463/64 344832 விசேட பிரிவு - 344831 EXT FAS

விளம்பரப் பகுதி

**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S.மணி**

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

சந்திரன்
144 2/1 காலிவீதி, வெள்ளவத்தை,
கொழும்பு-06
T.P: 586218, 078-63611
Fax: 503030

**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPHY)**

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்திமிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

செப்டம்பர் 19 முதல் 30 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11. T.P. 436383, 436390 Fax : 436439 செப்டம்பர் 4, 5 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஓட்டமாவடியிலும், செப்டம்பர் 7,8,9 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR.P.ARUMUGAM No: 50, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOA விலும் சந்திக்கலாம்.

www.padippakam.com

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# நகரங்களுக்குள் குறி 'வன் மேன் ஒப்பரேசன்'

கடந்தவாரம் 27.8.96 அன்று வவுனியாவில் கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது.

அத் தாக்குதலின் பின்னர் வழக்கம் போல சில சந்தேகங்கள் எழுந்துள்ளன.

புலிகள் செய்தார்களா? அல்லது வேறு ஒரு குழுவினர் செய்தார்களா? என்பது போன்ற சந்தேகங்கள் வவுனியாவில் குசு குசுப்பாகப் பேசப்பட்டன.

மக்கள் பேசிக்கொண்டது ஒருபுறமிருக்க, வவுனியாவில் உள்ள பாதுகாப்புத் தரப்பினர்கூட 'புலிகளால் செய்யப்படவில்லை' என்பதுபோன்ற கருத்துக்கு உடன்பாடு தெரிவிப்பது போலவே நடந்து கொண்டனர்.

காரணம்; புலிகள்தான் செய்தார்கள் என்று கூறுவது அவர்களுக்கு ஒரு கௌரவப் பிரச்சனை.

வவுனியாவில் கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக்கொண்டு வெகு கவனமாக இருப்பதாக தமது மேலிடத்துக்கு அறிவித்துக் கொண்டிருந்தார்கள்.

வவுனியா வரும் மக்களை அலசோ அலசென்று அலசிப் பார்த்துவிட்டுத்தான் உள்ளே அனுமதிக்கிறார்கள்.

வடபகுதியிலிருந்து வன்னிக்கு வரும் மக்களை வாட்டி எடுத்துவிட்டுத்தான் உள்ளே அனுமதிக்கிறார்கள்.

இரண்டு விரோதம் கொண்ட நாடுகளின் எல்லைகளில் கூட கடைப்பிடிக்கப் படாதளவுக்கு கடுமையான கட்டுப்பாடுகளும் கெடுபிடிகளும் வவுனியா தாண்டிக் குளத்தில் கடைப்பிடிக்கப்படுகின்றன.

இந்தக் கெடுபிடிகளையெல்லாம் நியாயப்படுத்தச் சொல்லப்படும் ஒரே ஒரு காரணம்: புலிகளின் ஊடுருவலைத் தடுப்பது.

வவுனியாவில் உள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள அகதிகள்கூட கிட்டத்தட்ட சிறையில் இருப்பதுபோலவே வைக்கப் பட்டுள்ளார்கள.

இவ்வாறெல்லாம் செய்வதால்தான் வவுனியாவில் அமைதி நிலவுகிறது. புலிகளின் ஊடுருவலும் தடுக்கப்பட்டுள்ளது என்பதுதான் இதுவரை சொல்லப்பட்டு வந்த நியாயம்.

இந்த நியாயப்படுத்தல்களை எல்லாம் தூக்கிச் சாப்பிடுவது போல வவுனியா நகரின் மத்தியில் பட்டப்பகலில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஆயுதம் தாங்கிச் சென்ற ரோந்து வாகனத்தை நோக்கி ஒருவர் கைக்குண்டு வீசியிருக்கிறார். ரோந்து வாகனத்தின் உள்ளே பொலிசாரும், இராணுவத்தினரும் இருந்துள்ளனர்.

கைக்குண்டு வீச்சில் பொலிசார் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

குண்டுவெடிப்பு என்றால்கூட யாரோ ஒருவர் கொண்டுபோய் குண்டுப்பார்சலை வைத்துவிட்டுப் போய்விடலாம்.

ஆனால் ஆயுதம் தாங்கிய படையினரை நோக்கி கைக்குண்டுத் தாக்குதல் நடத்துவது அதைவிடக் கடினமான காரியம்.

கைக்குண்டை வீசுபவர் பதட்டமடைந்தால் குறி தப்பிவிடும். பொலிசாரோ, இராணுவத்தினரோ உஷாராகிவிட்டால் கைக்குண்டை வீசுபவர் சுடப்படலாம். கொல்லப்படலாம். வீசப்படும் கைக்குண்டு வெடிக்காமலும் போகலாம்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் பலமாகச் செய்யப்பட்டுள்ள வவுனியா நகரில் பொலிசாரையோ, இராணுவத்தினரையோ தாக்குவது என்பது சவாலான காரியம்.

குண்டுவெடிப்பு மூலம் அதனைச் செய்ய முடியாது. இராணுவ, பொலிஸ் நிலைகளில் குண்டுப் பொதிகளைக் கொண்டு சென்று வைப்பது முடியாத காரியம்.

படையினரின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள வவுனியாவில் படைத்தரப்பை தாக்குவது மூலம் அவர்களது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு சவால்விடுவதுதான் நோக்கம். ஆனால் ஆயுதம் தாங்கிய பலர் கெரில்லாக் குழுவாகச் சென்று தாக்குதல் நடத்தும் சூழல் வவுனியாவில் இல்லை.

அதனால்தான் கைக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. பொலிசாரில் ஒருவர் மட்டுமே பலியானபோதும், தாக்குதல் நடவடிக்கையின் நோக்கம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

புலிகள் தவிர வேறு ஒரு குழுவினர் இக் காரியத்தை ஏன் செய்திருக்க முடியாது? என்ற கேள்விக்கு இப்போது விடை தேடலாம்.

புலிகள் தவிர்ந்த சகல ஆயுதக் குழுக்களும் படையினரின் உதவியுடன்தான் வவுனியாவில் நிலை கொண்டுள்ளன.

அவ்வாறான குழுக்களில் ஒன்று பொலிசாரை நோக்கியோ, படையினரை நோக்கியோ ஏன் தாக்க வேண்டும்?

அதற்கும் சில காரணங்கள் கூறப்படுகின்றன. வவுனியாவில் சமீபகாலத்தில் புளொட் அமைப்பினரின் குறிப்பிட்ட சில நிதி திரட்டல் நடவடிக்கைகள் அரசாங்கத்தால் கட்டுப் படுத்தப்பட்டுள்ளன.

புளொட் அமைப்பினர் முன்னர் நிலை கொண்டிருந்த ஒரு சில முன்னரங்கப் பகுதிகளில் இருந்து விலக்கிக் கொள்ளப் பட்டுள்ளனர்.

இதனால் புளொட் அமைப்பினர் அரசாங்கத்தின் மீது சற்றுப் பிணக்கம் கொண்டுள்ளனர்.

கடந்த சில மாதகாலமாக அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு ஆதரவாக வாக்களிப்பதையும் தவிர்த்து வருகின்றனர்.

இந்நிலையில், வவுனியாவில் புலிகளின் ஊடுருவலைத் தடுக்க வேண்டுமானால் தமது உதவியும் தேவை என்பதை வெளிப்படுத்த புளொட் அமைப்பினர் ஒரு தாக்குதலை ஏன் நடத்தியிருக்க முடியாது?

முடியாது! ஏன் எனில் தாக்குதல் நடத்தப் பட்ட முறையில் இருந்து அதனைப் புரிந்து கொள்ளலாம்.

தம்மை முன்புபோல செயற்படவிடாமல் தடுத்தால் புலிகளின் ஊடுருவலைத் தடுக்க முடியாது என்று காட்டுவதற்கு பல வழிகள் இருக்கின்றன.

வவுனியா நகரில் புலிகளின் ஊடுருவல் என்று காட்டவேண்டுமானால் படையினரைத் தாக்கும் 'கரணம் தப்பினால் மரணம்' என்ற தாக்குதல் உத்தியைத்தான் கடைப்பிடிக்க வேண்டும் என்றில்லை.

குண்டுவெடிப்பு, மற்றும் நாசகார நடவடிக்கைகள் என்று பல உத்திகள் இருக்கின்றன.

வேறொரு அமைப்பு மீது பழிபோடும் நடவடிக்கையை செய்யும்போது, கையும் களவுமாக மாட்டிக்கொள்ளக்கூடிய தாக்குதல் முறையை யாரும் செய்யமாட்டார்கள்.

குறிப்பிட்ட தாக்குதலில் கைக்குண்டு வெடிக்காமல் ஏமாற்றியிருந்தால் அதனை வீசியவர் உயிரோடு பிடிக்கப்படும் சாத்தியமும் இருந்தது. பலியாகி இருந்தால் கூட உடலைக் கைப்பற்றி அடையாளம் காணும் விசாரணைகள் மூலம் உண்மை தெரியவந்திருக்கும்.

எனவே புலிகள் தவிர வேறெந்த அமைப்பும் மேற்படி தாக்குதலுக்கு திட்டமிட்டிருக்க முடியாது. அதாவது தமது இயக்கத்தின் ஒட்டுமொத்தமான தற்கொலைக்குச் சமமான காரியத்திற்கு எந்தவொரு இயக்கமும் முன் வந்திருக்காது.

புலிகள் தவிர்ந்த வேறெந்த அமைப்புக்கும் அரசாங்கத்தையோ படைகளையோ பகைத்துக் கொள்ளக்கூடிய தன்மை தற்போது கிடையாது.

வேறொரு அமைப்பு குறிப்பிட்ட தாக்குதலை நடத்தி மாட்டியிருந்தால் என்ன நடந்திருக்கும்?

குறிப்பிட்ட அமைப்பின் முழு ஆயுதங்களும் உடனடியாக திரும்பப் பெறப்பட்டிருக்கும். பெரும் நெருக்கடிக்குள் சிக்க வேண்டி இருந்திருக்கும்.

குறிப்பாக, புளொட் அமைப்பினரை எடுத்துக் கொண்டால் வவுனியாதான் அவர்களின் மிகப் பிரதானமான மையம். அதனை இழப்பதற்கு ஒரு போதும் முன்வரமாட்டார்கள்.

எந்தவொரு தாக்குதலுக்கு திட்டமிடும் போதும் அது வெற்றியாகவே முடியும் என்ற நினைப்போடு திட்டமிடப் படுவதில்லை.

வவுனியாவில் நடைபெற்ற கைக்குண்டுத் தாக்குதல் தோல்வியில் முடிந்திருந்தால் புலிகளுக்கு பெரிய நஷ்டம் இல்லை. தாக்குதலில் ஈடுபட்டவர் பலியாகி இருக்கலாம். அல்லது ஒருவேளை பிடிபட்டிருக்கலாம். அதனால் புலிகளுக்கு பாதகம் ஒன்றும் கிடையாது.

ஆனால், வேறொரு அமைப்பு குறிப்பிட்ட தாக்குதலை நடத்தி மாட்டியிருந்தால், அந்த அமைப்பின் எதிர்காலமே கேள்விக் குறியாக மாறியிருக்கும்.

எனவே வவுனியாத் தாக்குதல் புலிகளின் நகரப்புறத் தாக்குதல் திட்டத்தின் ஒரு கட்டமே என்பது தெளிவு.

வவுனியா உட்பட வடக்கு-கிழக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள நகரப் பகுதிகளில் தொடரான தாக்குதல்களை நடத்துவது புலிகளின் திட்டமாகும்.

யாழ் குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டில் சென்ற பின்னர் புலிகளின் உத்திகளும் மாறியிருக்கின்றன.



யாழ்-குடாநாட்டுக்குள் கெரில்லாத் தாக்குதல்களை நடத்திக்கொண்டு, வடக்கு-கிழக்கில் படையினர் நிலைகொண்டுள்ள ஏனைய நகரங்களுக்குள்ளும் ஊடுருவித் தாக்குவதற்கான திட்டங்கள் புலிகளால் தீட்டப்பட்டுள்ளன.

போரை குறிப்பிட்ட ஒரு பகுதிக்குள் கட்டுப்படுத்திவைத்துக்கொண்டு, அங்கு படையினர் முழுக்கவனமும் செலுத்துவதற்கு புலிகளின் உத்திகள் தடையாக இருக்கின்றன.

யாழ்ப்பாண நகரில் புலிகளின் ஊடுருவலைத் தடுக்க கடும் சோதனைகளை படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ்குடாநாட்டில் ஆங்காங்கே பரவலாக மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. எனினும் யாழ்ப்பாண நகருக்குள் புலிகள் ஊடுருவல் செய்வதை படையினர் ஓரளவு கட்டுப்படுத்தி வைத்துள்ளனர்.

யாழ்நகரை கட்டுப்பாட்டில் வைத்திருக்க படையினர் பலத்த முயற்சி செய்து கொண்டிருக்கும்போது புலிகள் வவுனியா நகருக்குள் புகுந்து தாக்கிவிட்டு மறைந்துவிட்டனர்.

ஒன்றைக் கட்டுப்படுத்த இன்னொரு பக்கத்தால் கட்டுப்பாடு உடைக்கப்படும். வடக்கு-கிழக்கு முழுவதையும் ஒரே நேரத்தில் கட்டுப்படுத்த படையினரால் முடியாது என்பதையே புலிகள் தெரிவிக்க விரும்புகிறார்கள்.

வடக்கு-கிழக்கை மட்டுமல்ல வடபகுதி முழுவதையுமே ஒரே நேரத்தில் கட்டுப்பாட்டில் வைத்திருக்க படைத்தரப்பால் முடியாது என்பதே தற்போதைய நிலவரம்.

வடக்கு-கிழக்கில் புதிதாக மேலும் சில பகுதிகளை படையினர் கட்டுப்பாட்டில் கொண்டுவர நினைத்து திட்டம் தீட்டும்போது, ஏற்கனவே கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளின் பாதுகாப்பு நிலவரத்துக்கு சவால்விடும் தாக்குதல்களை புலிகள் மேற்கொள்ளவே முனைவர்.

இதனால் ஏற்கனவே கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளைப் பாதுகாப்பதா, அல்லது புதிய பகுதிகளை கைப்பற்றுவதா என்ற குழப்பமான நிலை படைத்தரப்பினருக்கு ஏற்படும்.

தற்போது மட்டக்களப்பு நகர், திருமலை நகர், வவுனியா நகர் போன்ற முக்கிய நகரப் பகுதிகளில் படையினரின் கட்டுப்பாட்டில், சிவில் நிர்வாகம் நடைபெற்று வருகிறது.

வடக்கு-கிழக்கில் அரசாங்கம் தனது கட்டுப்பாட்டுப் பகுதிகளை திறம்பட நிர்வகித்து வருகிறது என்று வெளியுலகுக்கு காட்டவும் அதனால் பயன் கிட்டுகிறது.

மறுபுறம் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள மக்களை உளவியல் ரீதியில் தமது பக்கம் வென்றெடுக்கவும் அரச கட்டுப் பாட்டு பகுதிகளை தூண்டிலாகப் பயன் படுத்தும் தந்திரமும் மேற்கொள்ளப்படுகிறது.

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மின்சாரம் கிடையாது. தொலைபேசி வசதிகள் கிடையாது. அடிப் படைத் தேவைகள் மற்றும் சேவைகளும் ஒழுங்காக இல்லை. இது தவிர உணவு, மருந்து நெருக்கடி எப்போதும் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது.

ஆனால் வவுனியாவில் அடிப்படைத் தேவைகளையும், சேவைகளையும் மக்கள் பெறமுடிகிறது. மின்சாரம், தொலைபேசி போன்ற வசதிகளும் உள்ளன.

வேறு பகுதிகளில் இருந்து வவுனியாவுக்கு செல்லும் மக்கள் பாதுகாப்புக் கெடுபிடிகளால் புரட்டி எடுக்கப்பட்டாலும்கூட, வவுனியாவில் நிரந்தரமாக வசிக்கும் மக்கள் ஓரளவு நிம்மதியுடன் வாழ முடிகிறது. அதாவது வடக்கு-கிழக்கின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும்போது வவுனியா பரவாயில்லை.

மட்டுநகர், திருமலை நகர், யாழ்நகர் போன்றவை வவுனியாவைவிட கெடுபிடிகள் அதிகமாவுள்ள பகுதிகளாகவே இருக்கின்றன.

அப்படியிருந்தும் புலிகளின் கட்டுப் பாட்டில் உள்ள பகுதிகளைவிட அரச கட்டுப் பாட்டில் உள்ள பகுதிகள் ஒப்பீட்டளவில் அடிப்படைத் தேவைகள், சிவில் நிர்வாகம் போன்றவற்றில் உயர்ந்த நிலையில் உள்ளன.

புலிகளைப் பொறுத்தவரை, அரசாங்கம் தனது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் செய்யும் ஒவ்வொரு வசதியும் மக்களை ஏமாற்றும் முயற்சி என்றே சொல்கிறார்கள்.

"அரிசியும், மாவும், மின்சாரமும், தொலைபேசியும் கொடுத்து தமிழ் மக்களை திசைதிருப்பப் பார்க்கிறது அரசாங்கம்" என்றே புலிகள் கூறிவருகின்றனர்.

மக்களும் அத்தகைய தற்காலிக மாயைகளில் சிக்கிவிடுவார்களோ என்ற சந்தேகமும் புலிகளுக்கு இருக்கிறது. அதனால்தான் மின்மாற்றிகள், தொலைபேசி இணைப்புக்கள் என்பவை புலிகளால் தாக்கப்பட்டுவருகின்றன.

வடபகுதியைப் பொறுத்தவரை அரசாங்கம் தனது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு வருமாறு மக்களை அழைத்துக் கொண்டு இருக்கிறது.

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மக்களை கணிசமானளவுக்கு தம் பக்கம் கொண்டுவருவதே அரசாங்கத்தின் நோக்கம்.

வவுனியாதான் அந்த நோக்கத்தை நிறைவேற்றும் மையம்.

வடக்கிலிருந்து வரும் பயணிகளை தாண்டிக்குளத்தில் தடுத்து தாமதப்படுத்தினாலும்கூட, அகதிகள் என்று வருவோர் மட்டும் உடனடியாக உள்ளே அனுமதிக்கப் படுகிறார்கள்.

வவுனியாவில் உள்ள அகதி முகாம்கள் நிரம்பி வழியுமானால் தமிழ் அகதிகள் புலிகளை ஒதுக்கிவிட்டுத் தம்பக்கம் வந்து விட்டதாக அரசாங்கம் பிரசாரம் செய்ய முடியும்.

அரசியல் பிரச்சனைகளுக்கு முன்பாக அத்தியாவசிய தேவைகளுக்கு தீர்வு என்ற திரையைத் தொங்கவிடுவதுதான் அரசாங்கத்தின் நோக்கம். அதன் மூலம் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழும் மக்கள் கஷ்டங்களுக்கு புலிகள்தான் காரணம் என்று நினைக்க வைப்பதும் சாத்தியம் என்று நம்புகிறது அரசாங்கம்.

தம்மைத் தனிமைப்படுத்தும் இத்தகைய தந்திரத்தை முறியடிக்க புலிகள் தீட்டியுள்ள திட்டம்தான் நகரங்களுக்குள் தாக்குதல்கள்.

நகரங்களுக்குள் நடத்தப்படும் தாக்குதல்களுக்கு நன்கு பயிற்றப்பட்ட கெரில்லாக்களையே புலிகள் இயக்கதினர் அனுப்பி வைக்கின்றனர்.

தனிநபராகச் சென்று திட்டத்தை நிறைவேற்றக்கூடியவர்களாக அவர்கள் இருப்பர்.

பலர் சேர்ந்து செல்லும்போது சோதனைகள், கண்காணிப்புக்கள் என்பவற்றில் மாட்டிவிடலாம். அதுதவிர படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் குழுக்களாகத் தங்கியிருப்பதும் காட்டிக் கொடுத்துவிடும்.

எனவே 'வன் மேன் ஒப்பரேசன்' என்று அழைக்கப்படும் ஒருநபர் பங்கு கொள்ளும் தாக்குதல்களுக்குத்தான் முதலிடம் கொடுக்கப்படும்.

'வன் மேன் ஒப்பரேசன்' என்பதற்குள் கண்ணிவெடித் தாக்குதல் முதல் கரும்புலித் தாக்குதல் வரை அடங்கும்.

இந்திய அமைதிப்படைக் காலத்தில் 'வன் மேன் ஒப்பரேசன்' புலிகளுக்கு சிறந்த பயன் கொடுத்த உத்தியாக இருந்தது.

புத்தகங்களுக்குள்கூட பிஸ்டல்களை வைத்துக் கொண்டு நகரப்புற கெரில்லாக்கள் தனித் தனியாகத் திரிந்தனர். வாய்புக் கிடைக்கும்போது புத்தகம் விரியும்; பிஸ்டல் வெளியே வந்து காரியத்தை முடிக்கும்.

பிஸ்டல் குறூப், கைக்குண்டு குறூப் என்று பல ரகமாகப் பிரிந்து நகரப் புறக் கெரில்லாக்கள் நடமாடுவர். ஏ.கே.47 போன்ற ஆயுதங்களைவிட சிறிய ரக ஆயுதங்கள்தான் நகர்ப்புறக் கெரில்லாக்களுக்கு உகந்தவை- குறிப்பாக 'வன் மேன் ஒப்பரேசனுக்கு' உபயோகமானவை.

'வன் மேன் ஒப்பரேசன்' அளவில் சிறிதாக இருந்தாலும் விளைவுகள் பெரிதாக இருக்கும். அதன் விளைவுகள் பினவருமாறு:

1. எல்லோர்மீதும் படையினர் சந்தேகம்

**நாரதர்**

கொள்ள வேண்டி ஏற்படும். அதனால் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகமாகும். அதன்காரணமாக சோதனைக்கு உள்ளாகும் மக்கள் படையினர்மீது அதிருப்தி அடைவர்.

2. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் பாதுகாப்பு உத்தரவாதமோ, உயிர் உத்தரவாதமோ கிடையாது என்ற நிலை தோன்றும். அதனால் புலிகளின் கட்டுப் பாட்டு பகுதிகளில் இருப்பது மட்டுமே ஆபத்தான விஷயம் என்ற நினைப்பு எழாமல் அடங்கிப்போகும்.

3. தாம் கைப்பற்றிய பகுதிகளை பாதுகாக்க படைத்தரப்பு அங்கு நிலை கொண்டிருக்க வேண்டும். எனவே படை பலத்தை ஒன்று குவித்து வேறு பகுதிகளை கைப்பற்றும் நடவடிக்கை தாமதப்படும்.

4. தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இயல்பு வாழ்க்கை நிலைமை இருப்பதாக அரசாங்கம் வெளியுலகில் சொல்லவும் முடியாது. புலிகளின் கட்டுப் பாட்டு பகுதிகளில் உள்ள மக்களில் ஒரு பகுதியினரை கவர்ந்து இழுக்கவும் முடியாமல் போகும்.

புலிகளின் நகரப் புறத் தாக்குதலின் நோக்கங்கள் அவைதான்.

எனவே- அரச கட்டுப்பாட்டில் உள்ள நகரப் பகுதிகளில் புலிகளின் தாக்குதல்கள் தொடரும் என்பது எதிர்பார்க்க வேண்டியதே!

---

## அதிரடி அய்யாத்துரை



மொழி மட்டுமல்ல, பெயர்களும் பெரிய பிரச்சனையாகிப் போகுது. தலைநகர சோதனையொன்றில் முதியவர் ஒருவர் பட்டபாடு சொல்லி மாளாது. தேசிய அடையாள அட்டையை எடுத்து பவ்வியமாக நீட்டினாராம் அந்த முதியவர். அடையாள அட்டையில் உள்ள பெயரைப் பார்த்த பொலிஸ்காரரின் முகம் மாறிப் போச்சுது. முதியவர் என்ன சொல்லியும் பொலிஸ்காரர் கேட்டபாடில்லை. ஸ்ரேசனுக்குக் கூட்டிக்கொண்டு போய் துருவித் துருவி விசாரித்துப் போட்டுத்தான் விட்டவையாம். சரி, முதியவரின் பெயர் என்ன தெரியுமோ? வேலுப்பிள்ளை.

யாழ்ப்பாணத்தின் பிரபலமான இந்துக்கல்லூரி அது. அதன் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையினர் நிதி திரட்டல் நடத்தினவை. ஜேசுதாஸைக் கூப்பிட்டு கொழும்பில் இசைக்கச்சேரியும் கலகலப்பாக வைத்து வசூல் நடத்தினவை. இதெல்லாம் தெரிந்த சங்கதி. தெரியாத சங்கதியும் ஒன்று இருக்குதுங்கோ. திரட்டிய நிதியில் ஒரு பகுதியை ஏப்பம் விட்ட இரண்டுபேர் தலைமறைவாம். பெரிய பெரிய கல்விமான்களை உருவாக்கிய கல்லூரியில் கள்ளமான்களும் உருவாகித்தான் இருக்கினம். பயிர்களுக்குள் களைகள் மாதிரியோ!

கொழும்பில் உள்ள தமிழ் சங்கக்காரர் கல் தோன்றி மண் தோன்றாக் காலத் தமிழர்கள் ஒன்றுபட வேண்டிய அவசியத்தை உருகி உருகிச் சொல்வதில் சளைத்தவர்களல்ல. இப்போது என்னடாவென்றால் தமிழ் சங்கம் இரண்டாகப் பிளந்து போச்சுது. அது மட்டுமோ, தமிழ் சங்கத்தில் ஒரு பிரிவு நடத்திய கூட்டம் பற்றி, மறு பிரிவு பொலிசுக்குப் போன் பண்ணியதாம். "புலிகள் கூட்டம் நடத்துகிறார்கள் போய்ப் பிடியுங்கோ" என்று உச்சபட்ச தமிழ் உணர்ச்சியுடன் தகவல் கொடுத்தவையாம். வாழ்க-சங்கத் தமிழ் வீரம்!

தலைநகரில் உள்ள அரச அலுவலகங்களில் ஒரு கூத்து நடந்து கொண்டிருக்குதுங்கோ. குறிப்பிட்ட அலுவலகத்தில் வேலை செய்யும் தமிழ் ஊழியர்கள் அனைவரும் வேலைக்கு வந்திருக்கினமோ எண்டு சக ஊழியர்கள் கண்ணும் கருத்துமாகக் கவனிக்கினமாம். ஆஹா என்ன ஒரு அக்கறை எண்டு வியக்க வேண்டாம். அதுக்கு ஒரு விஷயம் இருக்கு. தமிழ் ஊழியர்கள் வரவு குறைஞ்சால் சக ஊழியர்கள் பாய்ந்தோடிப்போய் அலுவலகத்துக்கு வெளியே நின்று பொலிசாருக்குத் தகவல் கொடுக்கினமாம். "குண்டு இருக்கலாம் எண்டு பயமாக்கிடக்கு உடனே ஓடிவாங்கோ". பதறியடிச்சு வந்த பொலிசார் தேடிக் களைச்சுப்போய் "ஏன் உங்களுக்கு சந்தேகம் வந்தது?" எண்டு கேட்டால், "ஹிஹி தமிழ் ஊழியர்கள் வராமல் விட்டதால் விஷயம் தெரிஞ்சுதான் வராமல் இருக்கினமோ எண்டு சந்தேகப்பட்டுப் போனோம்" என்று பதில் வருகுதாம். நான் அறிய நாலு ஐந்து அலுவலகங்களில் இந்த மாதிரிக் கூத்து நடந்திருக்கு.

திருவான மலையில் தமிழ் இயக்கம் ஒன்றின் அலுவலகத்தில் நடந்த அசம்பாவிதம் உள்வீட்டு வேலைதானாம். பலியானவரின் இரங்கல் கூட்டத்தில் உரையாற்றிய பிரமுகர் 'களைகளைப் பிய்த்தெறிவோம்' எண்டு பேசியதும் அதனால்தானாம். முரசு சந்தேகப்பட்டு வெளியிட்ட செய்தி சரிதான்.

கூட்டான கட்சித் தலைவர் ஒரு கூட்டத்தில் பேசும்போது பச்சைக் கட்சியினருடன் பேசுவதில் பயன் இல்லை எண்டு சொல்லிப் போட்டார். அச்செய்தி ஆங்கிலப் பத்திரிகைகளிலும் வெளிவந்தது. செய்தியைப் பார்த்த பச்சைக் கட்சி பிரதிநிதிகள் வெகுஜன சபையில் நிலமானவரைப் பார்த்தபோது அதுபற்றிக் கேட்டவையாம். "என்ன உங்கள் தலைவர் எங்களுடன் பேசுவதில் பயனில்லை என்று சொல்லிப்போட்டார்?" எண்டு கேட்க, நிலமானவர் சிரித்தபடியே, "அவர் அப்படித்தான் பேசிக்கொண்டிருப்பார். பெரிசாக எடுக்க வேண்டாம்" எண்டு சமாதானம் செய்தாராம். மேடையில் அடி. நேரில் அணை. உதுதானுங்கோ அரசியல்.

தலைநகரச் சோதனைகளின்போது குடும்பஸ்தர்களிடம் கேட்கப்படும் பொதுக்கேள்வி என்ன தெரியுமோ? "பிள்ளைகள் வெளிநாட்டில் இருக்கினமோ?" என்பதுதானாம். கில்லாடிகளான சிலர் வெளிநாட்டில் பிள்ளைகள் இருந்தாலும் சொல்லாமல் மறைச்சுப் போடுகினம். மடியின் கனம் அறியும் கேள்வியாக இருக்கலாமோ என்ட சந்தேகம்தான் பொய் சொல்லக் காரணமாம். சனத்தின் பொது அறிவைப் பற்றிக் குறைச்ச மதிப்பிடக்கூடாதுங்கோ.

இன்று ஒரு சித்தர் பாடல். பாடியவர் பட்டினத்தார்.

**இன்னம் பிறக்க இசைவாயோ நெஞ்சமே**
**மன்னர் இவர் என்றிருந்து வாழ்ந்தாரை-முன்னம்**
**எரிந்த கட்டை மீதில் இணைக்கோ வணத்தை**
**உரிந்து ருட்டிப் போட்டது கண்டு"**



படிப்பகம்

www.padippakam.com

**அரசியல் தொடர்**

அற்புதன் - எழுதுவது

# படையெடுக்க பாரதம் வகுத்த திட்டம்

**மூன்று இராணுவ நடவடிக்கைகள்**

1987 இல் இந்திய இராணுவத் தளபதியாக இருந்தவர் லெப்டினன்ட் ஜெனரல் கிருஷ்ணசுவாமி சுந்தர்ஜி.

சுந்தர்ஜி தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு தமிழர் என்பது குறிப்பிடத்தக்க விஷயம். ஒரு தமிழர் இந்திய இராணுவத்தின் தளபதியாக உணர்ந்திருந்தது பெருமைப் படத்தக்க விஷயமும் கூட.

சீக்கிய தீவிரவாதிகள் பஞ்சாப் பொற்கோவிலில் மறைந்திருந்தபோது 'புளூஸ்டார் ஒப்பரேசன்' என்ற நடவடிக்கையை இந்திய இராணுவத்தினர் மேற்கொண்டனர். அப்போது சுந்தர்ஜி இந்திய இராணுவ உப தளபதியாக இருந்தார். புளூஸ்டார் நடவடிக்கைக்கு தலைமை தாங்கியவர் சுந்தர்ஜி.

புளூஸ்டார் நடவடிக்கைக்குப் பின்னர் சீக்கிய தீவிரவாதிகளின் கொலைப் பட்டியலில் முக்கிய இடம் வகித்தவர்கள் இந்திரா காந்தி, தளபதி வைத்யா, சுந்தர்ஜி.

இந்திராகாந்தியும், வைத்யாவும் சீக்கிய தீவிரவாதிகளின் குறியில் இருந்து தப்பமுடியவில்லை. சுட்டுக் கொல்லப் பட்டனர். சுந்தர்ஜி மட்டுமே தப்பிக்கொண்டார்.

இந்திய இராணுவத் தளபதியாக சுந்தர்ஜி பொறுப்பேற்ற பின்னர்தான் இந்திய இராணுவத்தில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. அதன் பலமும் உயர்த்தப் பட்டது. 1987ல் இந்திய இராணுவம் தனது பலத்தின் உச்சக்கட்டத்தில் இருந்தது.

இந்திய இராணுவத் தளபதி சுந்தர்ஜி தனது புதுடில்லி அலுவலகத்தில் சும்மா யிருக்கமாட்டார்.

இராணுவ பலத்தை உயர்த்துவது மட்டுமல்ல, அந்தப் பலத்தைப் போரில் பரிசீலித்துப் பார்ப்பதற்கும் சுந்தர்ஜிக்கு ஆர்வம் அதிகம்.



**அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை**

மூன்று இராணுவ நடவடிக்கைகளுக்கு சுந்தர்ஜி திட்டங்களை வகுத்திருந்தார்.

மூன்று இராணுவ நடவடிக்கைகளும் மூன்று நாடுகளுக்கு எதிராகத் திட்டமிடப் பட்டன.

முதலாவது திட்டம் பாகிஸ்தானுக்கு எதிரானது.

அதற்கு 'பிராஸ் ராக்ஸ்' எனப் பெயர் சூட்டப்பட்டது.

இரண்டாவது திட்டம் மக்கள் சீனக் குடியரசுக்கு எதிரானது. 'செக்கர் போர்ட்' என்று அதற்கு பெயர் வைக்கப்பட்டது.

மூன்றாவது திட்டம் ஒரு குட்டி நாட்டுக்கு எதிரானது. அந்தநாடு இலங்கை.

இலங்கைமீதான இராணுவ நடவடிக்கைத் திட்டத்துக்கு 'திரிஷக்தி' என்று பெயர் சூட்டப்பட்டது.

இந்தத் திட்டமும் இந்திய அமைதிப் படை இலங்கைக்கு வந்தமையும் ஒரே விஷயமல்ல. இலங்கை அரசு பணிய மறுத்தால் படையெடுப்பதற்கான திட்டம் தான் 'திரிஷக்தி'.

**ஆயத்தங்கள்**

இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் நேரடியாக தலையிடமாட்டோம் என்று இந்திராகாந்தி பிரதமராக இருந்தபோதே இந்தியா அடிக்கடி கூறிக்கொண்டிருந்தது. உண்மையில் அந்த வார்த்தைகள் இராஜதந்திர முலாம் பூசப்பட்ட வார்த்தைகளே தவிர உண்மை அதுவல்ல.

இந்திரா காந்தி பிரதமராக இருந்த போதே ஈழப் போராளி அமைப்புக்களுக்கு பயிற்சிகள் வழங்குவதும் ஆரம்பிக்கப் பட்டது.

அதே காலகட்டத்தில் அவசியப்பட்டால் இலங்கை மீது படையெடுப்பதற்கான ஆயத்தங்களும் மெல்ல மெல்லச் செய்யப்பட்டன.

இலங்கையில் உள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைப் பற்றிய விபரங்களை திரட்டுவதில் இந்திய இராணுவ உளவுப்பிரிவு, 'றோ' உளவுப் பிரிவு போன்றவை துரிதமாக செயற்பட்டன.

பல வழிகளில் தகவல்கள் திரட்டப் பட்டன. விமானங்கள் மூலமாகவும் தகவல்கள் திரட்டப்பட்டன.

இந்தியாவில் பயிற்சி வழங்கப்பட்ட இயக்க உறுப்பினர்கள் மூலமும் தகவல்கள் திரட்டப்பட்டன.

குறிப்பிட்ட கேந்திர நிலைகளை எப்படித் தாக்குவது என்று சொல்லிக் கொடுக்கும் தேவைக்காக விபரம் திரட்டுவது போல நாசூக்காகவும் தகவல் திரட்டப்பட்டது.

இதுதவிர இலங்கை ஆயுதப்படைகளில் முன்னர் பணியாற்றிய, மற்றும் இடைநடுவே விட்டு விலகிய தமிழர்கள் மூலமும் தகவல் பெறப்பட்டது.

'றோ' உளவுப் பிரிவின் கீழ் செயற்பட்ட விமானவியல் ஆராய்ச்சி மையம் தனக்கு கிடைத்த தகவல்களைக் கொண்டு வரை படங்களைத் தயாரித்தது.

இலங்கைமீது படையெடுத்தால் உடனடியாக கைப்பற்ற வேண்டிய கேந்திர நிலைகள், படைகள் நிலைகொள்ள வேண்டிய இடங்கள் போன்ற விபரங்கள் யாவும் திரட்டப்பட்ட நிலையில் கோவா மாநிலத்தில் பயிற்சிகள் ஆரம்பமாகின.

விமானம் மூலமாகவும், கப்பல் மூலமாகவும் இலங்கைக்குள் தரையிறங்குவதற்கான சிறப்ப பயிற்சிகள் இந்தியப் படைப் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டது.

**MO-SL**

இந்திரா காந்திக்குப் பின்னர் பிரதமரான ராஜீவ் காந்தி இலங்கை ஜனாதிபதி ஜே.ஆருடன் பேசிக்கொண்டிருந்தபோதும், 'றோ' உளவுப்பிரிவு இலங்கை அரசின் நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணித்து வந்தது.

இலங்கை அரசு படைபலத்தை அதிகரிப்பதையும், ஆயுதக் கொள்வனவில் ஈடுபடுவதையும் அறிந்த 'றோ' உளவுப் பிரிவினர் படையெடுப்புக்கான அவசியம் நேரலாம் என்றே கருதியிருந்தனர்.

இந்தியாவின் சமாதான முயற்சிகளை மீறி இலங்கை அரசு இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தால் பலப்பிரயோகம் மூலம் அதனைத் தடுக்க வேண்டி நேரலாம் என்று 'றோ' மட்டுமல்ல, இந்திய இராணுவமும் தயாராகவே இருந்தது.

மற்றும் மிக், மிராஜ் போர் விமானங்கள் 14, ஹெலிகொப்டர்கள் 22 ஆகியவையும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

இலங்கை அரசு 'ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கையை வடபகுதியில் ஆரம்பிக்க முன்னரே இந்தியா இலங்கை மீதான படையெடுப்புக்கான சகல திட்டங்களையும் தயாரித்து முடித்திருந்தது.

இதன்பின்னர் இலங்கை அரசின் 'ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கையும், அதன் பின்னர் இலங்கை, இந்திய அரசுகளுக்கிடையே நடைபெற்ற கடிதப் போக்குவரத்துக்களையும் முன்னரே விபரித்திருந்தேன்.

1987 ஜீன் மூன்றாம் திகதி 19 மீன்பிடிப் படகுகளில் யாழ் குடாநாட்டு மக்களுக்கு இந்தியா அனுப்பிய உணவுப் பொருட்கள் இலங்கைக் கடற்படையினரால் வழிமறிக்கப் பட்டது. இந்தியப் படகுகள் திரும்பிச் சென்றன. இவை தொடர்பாகவும் விரிவாக சென்றவாரம் விபரித்தாயிற்று.

தாம் அனுப்பிய உணவுப் பொருட்களை இலங்கை திருப்பி அனுப்பியவுடன் இந்தியா அடுத்த கட்ட நடவடிக்கைக்கு தயாரானது.

ராஜீவ் காந்தி தலைமையில் நடைபெற்ற அவசர கூட்டத்தில் யாழ் குடாநாட்டுக்குள் விமானங்கள் மூலம் உணவுப்பொருட்களை போடுவதற்கான முடிவு செய்யப்பட்டது.

இந்திய இராணுவத் தளபதி சுந்தர்ஜிக்கும் முடிவு தெரிவிக்கப்பட்டது.

இலங்கை வான்பரப்புக்குள் ஊடுருவும் இந்திய விமானங்களை இலங்கை விமானப் படை தாக்குமானால் MO-SL நடவடிக்கையை ஆரம்பிக்க தயார் நிலையில் இருந்தார் சுந்தர்ஜி.

யாழ் குடாநாட்டுக்குள் விமான[illegible]கள் மூலம் உணவுப் பொருட்களைப் போ[illegible] நடவடிக்கைக்கு சூட்டப்பட்ட பெய[illegible] **'ஒப்பரேசன் பூமாலை'.**

மிராஜ் போர் விமானங்கள் வட்டமிட்டுப் பாதுகாப்பு வழங்க, அன்டனோ விமானங்கள் மூலம் உணவுப் பொருட்கள் போடப்படுவது தான் திட்டம்.

'ஒப்பரேசன் பூமாலை' நடவடிக்கை யாழ் குடாநாட்டு மக்களுக்கு உணவுப் பொருட்களை போடும் நடவடிக்கை மட்டுமல்ல. 'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள்' என்று சொல்வார்களே, அதுபோல வேறொரு நோக்கமும் இருந்தது.

அது. இந்திய விமானப்படை தனது விமானப்படை பலத்தை பரிசீலித்துப் பார்க்கும் ஒத்திகை.



ராஜீவ் காந்தி

வான் பரப்பில் பறக்கும் விமானங்களுக்கு தரையில் குறிப்பிட்ட பகுதியை அடையாளம் காண அங்குள்ள உயர்ந்த கட்டிடங்கள், கோபுரங்கள், அல்லது உயரமான அன்டனாக்கள் போன்றவை உதவியாக இருப்பதுண்டு. அதனை 'லான்ட் மார்க்' என்று அழைப்பர்.

யாழ் குடாநாட்டில் உணவுப்பொருட்களை போடுவதற்கு 'லான்ட் மார்க்'காக எதனை குறிப்பிடலாம் என்று யோசித்தபோது, புலிகளின் நிதர்சனம் தொலைக்காட்சி நிலையமும் 'லான்ட் மார்க்' காக தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கொக்குவில் ரயில் நிலையம் அருகே புலிகள் இயக்கத்தினரின் நிதர்சனம் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் இருந்தது. உயரமான அன்டனா ஒன்றை அங்கு புலிகள் நிறுவியிருந்தனர்.

அதுதவிர யாழ்கோட்டை, மற்றும் யாழ்ப்பாண இந்து ஆலயக் கோபுரங்கள் என்பவையும் லான்ட் மார்க்காக குறிப்பிடப்பட்டன.

**பாரசூட்டில் உணவு**

ஜூன் 4ம் திகதி.

பெங்களூரில் இருந்து உணவுப் பொருட்களுடன் அன்டனோ விமானங்களும், மிராஜ் போர் விமானங்களும் சீறிக்கொண்டு புறப் பட்டன.

யாழ் குடாநாட்டு வான் பரப்பில் முதலில் மிராஜ் போர் விமானங்கள் வட்டமடித்தன.

அடங்கிய பெட்டிகள் தான் போடப்பட்டன.

மக்களுக்கும் வந்திருப்பது இந்திய விமானங்கள்தான் என்று தெரியவந்துவிட்டது.

அப்போது ஏற்பட்ட ஆனந்தத்தை வியரிக்க வார்த்தைகளே கிடையாது.

கடலில் தத்தளிப்பவர்களுக்கு ஒரு துரும்பு கிடைத்தாலே பெரிய விஷயம்.

யாழ் குடாநாட்டு மக்களுக்கோ கடலில் தத்தளித்த நேரத்தில் கப்பலே கிடைத்தது போன்ற உற்சாகம். பலர் ஆனந்தக் கண்ணீரோடு 'இந்தியாவே நன்றி' என்று குரல் கொடுத்தார்கள்.

'இனிமேல் நம்மை யாரும் ஒன்றும் செய்ய முடியாது. இந்தியாவே வந்துவிட்டதாம். யார் அசைக்க முடியும்?' என்ற தைரியமும் ஏற்பட்டுவிட்டது.

அதுவரை என்ன நடக்குமோ என்று பயந்து கொண்டிருந்தவர்களுக்கு, மாபெரும் தைரியமும் தோன்றியது.

அதே நேரம் புலிகள் இயக்கத்தினரும் ஒலிபெருக்கிகள் மூலம் இந்திய விமானங்கள் தான் வந்துள்ளன. யாரும் பயப்படத் தேவையில்லை. வந்திருப்பவர்கள் நமது நண்பர்கள்தான்' என்று அறிவித்தனர்.

**புலிகளின் அறிவிப்பு**

மற்றுமொரு அறிவிப்பையும் புலிகள் இயக்கத்தினர் வெளியிட்டனர்.

"விமானத்தில் இருந்து போடப்பட்ட பொருட்கள் எதனையும் பொதுமக்கள் தொடவேண்டாம். அவற்றை எடுத்து நாம் விநியோகம் செய்வோம்" என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்புக்கிடையில் சில பகுதிகளில் விழுந்த பொருட்கள் மக்களால் எடுக்கப்பட்டுவிட்டன.

ஈரோஸ் இயக்கத்தினரும் பொருட்களை எடுத்து விநியோகிப்பதில் ஈடுபட்ட போது, புலிகள் இயக்கத்தினர் குறுக்கிட்டனர்.

"இதனை விநியோகிக்கும் வேலையை நாம் பார்த்துக் கொள்கிறோம் நீங்கள் விலகுங்கள்' என்றுவிட்டனர் புலிகள். எதற்கு வம்பு என்று ஈரோஸ் இயக்கத்தினரும் விலகிக் கொண்டனர்.

# 'ஒப்பரேசன் பூமாலை' பாரசூட்டில் இறங்கிய பொதிகள்!

1987 ஏப்ரல் மாதம் ராஜீவ்காந்தி முன்னிலையில் இலங்கை விவகாரங்கள் தொடர்பான ஆலோசனை மற்றும் திட்டமிடல் குழு அமைக்கப்பட்டது.

அப்போது இந்திய வெளியுறவுத்துறை இராஜாங்க அமைச்சராக இருந்த கே.நட்வர்சிங் தலைமையில் அக்குழு அமைக்கப்பட்டது.

அடிப்படைத் திட்டங்களைத் தயாரிக்கும் பொறுப்பு மூவரிடம் வழங்கப்பட்டது.

1. இராணுவத் தளபதி சுந்தர்ஜி.
2. தென்பிராந்திய கொமாண்டைச் சேர்ந்த பொது கட்டளையிடும் அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் திபந்தர்சிங்.
3. பிராந்திய கொமாண்டர் மேஜர் ஜெனரல் ஹரி கிரத்சிங்.

(திபந்தர் சிங்கும், ஹரி கிரத் சிங்கும்தான் பின்னர் இந்திய அமைதிப்படையுடன் வந்தவர்கள்)

இலங்கைமீதான இராணுவ நடவடிக்கைக்காக என்று 1987 ஏப்ரலில் தனிப்பிரிவு ஒன்றும் அமைக்கப்பட்டது.

அதன் பெயர்தான்-

**MO-SL**

**படைப்பிரிவுகள் தயார்**

இலங்கைமீது படையெடுப்பதற்காக பின்வரும் படைப்பிரிவுகள் தயார்நிலையில் வைக்கப்பட்டன.

<u>தரைப்படை</u>

36 வது இன்ஃபெண்டரி பிரிவு
57 வது இன்ஃபெண்டரி பிரிவு
2 கவச வண்டிப்படைப் பிரிவுகள்.
340 வது இண்டிபெண்டன் இன்ஃபென்ரி பிரிகேட்.

<u>கடற்படை</u>

சரக்கேற்றும் கப்பல்கள்-5
கப்பலில் சரக்கேற்றும் தாங்கிகள்-6
நீர் மூழ்கிகள் - 2
ரோந்துப்படகுகள் - 12
துணைக் கப்பல்கள் - 2
விமானங்கள் - 2

<u>விமானப்படை</u>

ஜாகுவர் - 27
கான்பெரா - 6
இலுஷன் 76 - 4
அன்டனோ 12 - 6
அன்டனோ 32 - 30



**அன்டனோ விமானம்**

அன்டனோ விமானங்களை இந்தியாவுக்கு வழங்கியது சோவியத் யூனியன்.

சோவியத் யூனியனுக்கும், இந்தியாவுக்கும் இடையே நிலவிய பலமான நட்புறவின் காரணமாக இந்தியாவுக்கென்றே விசேடமாக உருவாக்கப்பட்டவைதான் அன்டனோ விமானங்கள். வட இந்தியாவின் மலைப்பாங்கான பகுதிகளின் பாவனைக்கு ஏற்ற வகையில் அன்டனோ விமானங்கள் உருவாக்கப் பட்டிருந்தன.

போர்முனையில் அன்டனோ விமான வேகம், அன்டனோ விமானத்திற்கும், மிராஜ் போர் விமானங்களுக்கும் இடையே தகவல் தொடர்பை மேற்கொள்ளும் சாத்தியங்கள் பற்றியெல்லாம் பரிசீலிக்கக்கூடிய போர் முனை எதுவும் அதுவரை இந்திய விமானப் படைக்கு வாய்க்கவில்லை.

'ஒப்பரேசன் பூமாலை' நடவடிக்கையை தமது ஒத்திகைக்கான வாய்ப்பாக பயன்படுத்த இந்திய விமானப்படை நினைத்தது அதனால்தான்.

வட இந்தியத் தலைநகரில் இருந்து அன்டனோ விமானங்களும், மிராஜ் போர் விமானங்களும் பெங்களூருக்கு வரவழைக் கப்பட்டன.

இலங்கை போர் விமானங்கள் என்று பீதிகொண்ட மக்கள் பங்கர்களை நோக்கி ஓடத்தொடங்கினார்கள்.

புலிகள் இயக்கத்தினருக்கும் முதலில் விபரம் தெரிந்திருக்கவில்லை. அவர்களும் பதுங்கு நிலை எடுத்துக் கொண்டு வானத்தை பார்த்துக்கொண்டிருக்க,

அன்டனோ விமானங்களின் வாய்கள் அகலத் திறந்தன.

திறந்த வாய்கள் வழியாக பாரசூட்டுகள் வெளிப்பட்டு தரைநோக்கி இறங்கத் தொடங்கின.

விமானப்படைதான் குண்டுகளை இறக்குகிறதோ என்ற சந்தேகத்தில் பாரசூட்டைக் கண்டவர்கள் தலைதெறிக்க ஓட்டம் பிடித்தனர்.

பாரசூட்டுக்கள் தரையில் இறங்கியதும் புலிகள் இயக்கத்தினருக்கும், ஈரோஸ் இயக்கத்தினருக்கும் உண்மை புரிந்துவிட்டது.

பாரசூட்டில் வைத்து இறக்கப்பட்ட பெட்டிகளுக்குள் உணவுப் பொருட்கள் மட்டும் இருக்கவில்லை.

மருந்துகள், ஊசிகள், பஞ்சு, காயத்துக்கு கட்டுப்போடும் துணிகள், குழந்தைகளுக்கான பால்மா பக்கற்றுக்கள் என்று பல பொருட்கள்

இந்திய விமானங்கள் உணவுப் பொருட்களைப் போட்டுவிட்டுச் சென்றதும் புலிகள் இயக்க அலுவலகத்துக்கு படையெடுத்தனர் பத்திரிகையாளர்கள்.

அங்கு பத்திரிகையாளர்கள் சந்தித்தது திலீபனை.

பத்திரிகையாளர்கள் செல்லும்போது அங்கு கூடியிருந்த மக்களிடம் பேசிக் கொண்டிருந்தார் திலீபன்.

திலீபன் பட்டும் படாமல் மக்களுக்கு சொன்னது இது; "நாங்கள் சொல்லித்தான் இந்தியா வந்து உணவு போட்டுவிட்டுச் சென்றிருக்கிறது."

இந்திய விமானங்கள் வந்து சென்றதும் 'ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கையை நிறுத்துமாறு ஜே.ஆர் உத்தரவிட்டார்.

அதனையடுத்து தாக்குதலை நிறுத்தி விட்டு கைப்பற்றிய இடங்களில் நிலை கொண்டிருந்தனர் படையினர்.

ஜூன் 4ம் திகதியுடன் 'ஒப்பரேசன் லிபரேசன்' ஓய்ந்தது.

ஜூன் 5ம் திகதி நெல்லியடி மத்திய வித்தியாலயத்தில் கரும்புலித் தாக்குதல் நடைபெற்றது. இத்தாக்குதல் குறித்து முன்னரே விபரமாக கூறப்பட்டுவிட்டது.

இக்கட்டத்தில் ஒரு ஜோக் சொல்ல வேண்டும். ஒப்பரேசன் லிபரேசன் நடவடிக்கை மூலம் படையினர் அச்சுவேலி வரை முன்னேறியிருந்தனர்.

அந்த நேரத்தில் ஆனைக்கோட்டையில் கள் குடித்துக்கொண்டிருந்தனர் சில குடிமக்கள்.

புலிகள் அப்போதெல்லாம் 'அச்சமில்லை அச்சமில்லை' என்ற பாடலை ஒலிபரப்புவது வழக்கம்.

கள் வெறி உஷாரில் ஒருவர் அந்தப் பாடலை மாற்றி இப்படிப்பாடினார்:

**"அச்சமில்லை, அச்சமில்லை, அச்சுவேலி இல்லையே!"**

'ஒப்பரேசன் பூமாலை'க்கு பின்னர் நடைபெற்ற சூடான, சுவாரசியமான நிகழ்வுகளை அடுத்த வாரம் பார்க்கலாம்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

அலசுவது- இராஜதந்திரி

# ஜூலையில் முல்லைத் தாக்குதல்! ஆகஸ்ட்டில் மின்னொளியில் கிரிக்கெட்!

## திசைதிரும்பியுள்ள கவனம்

கடந்த ஓரிருமாதங்களாக இராணுவ நடவடிக்கைகளும், அந்த நடவடிக்கைகள் சார்ந்த செய்திகள், தகவல்களுமே நாட்டு மக்களுக்குக் கிடைத்துவந்தன.

இத்தகவல்கள், செய்திகள் ஓய்ந்து விட்டன என்றில்லை. இருந்தபோதிலும் மக்களின் கவனம் ஓரளவு திசை திரும்பும்வகையில் கொழும்பு மாநகரில் உலகின் முன்னணி கிரிக்கெட் பந்தய நாடுகள் போட்டிகளில் குதித்துள்ளன.

சச்சின் டெண்டுல்கர், சனத் ஜயசூரிய, அனில் கும்ளே, அரவிந்தடி சில்வா, மொஹமட் அசாருதீன் போன்ற சிறந்த வீரர்கள் இலங்கை இரசிகர்களை மகிழ்வித்து வருகின்றனர்.

ஒருபுறம் யுத்த அழுத்தம்; மறுபுறம் பொருளாதார நெருக்கடிகள்; மற்றொருபுறம் அகதிகளின் கஷ்டங்கள் என்று இலங்கை பல்வேறு இன்னல்களுக்கும் உள்ளாகியுள்ளது.

கடந்த ஜூலை மாதம் முல்லைத்தீவுத் தாக்குதல், குண்டுவெடிப்புக்கள் என்று நாட்டு மக்கள் கதிகலங்குமளவுக்கு மோசமான சம்பவங்கள் இடம்பெற்றன.

இதையொத்த சம்பவங்கள் குறித்த அச்சுறுத்தல் தொடர்ந்து இருக்கவே செய்கின்றது.

கொழும்பில் மின்னொளியில் இடம்பெறும் பிரமாண்டமான கிரிக்கெட் பந்தயங்களை வெளிநாடுகளில் தொலைக்காட்சி வாயிலாகப் பார்வையிடுவோர், இலங்கையில் மோசமான உள்நாட்டுப் பிரச்சினையொன்றிருக்கின்றதென்று நம்புவதற்குத் தயங்குவர்.

எனவே மின்னொளியில் இசையும், கூத்தும், கும்மாளமுமாக இலங்கையில் ஒருசாரார் குதூகலிக்கின்றனர்.

அதேசமயம் மின்னொளியே இன்றி உணவுக்கஷ்டம், யுத்தக் கெடுபிடி, அகதிமுகாம்கள் என்று இலங்கையின் மற்றொருசாரார் சொல்லொணா அவஸ்தைகளுக்குள்ளாகியுள்ளனர்.

இந்த இரு வேறுபட்ட தன்மைகளுக்கு மத்தியிலேயே இலங்கையின் ஆட்சியாளர்கள் தமது மூன்றாவது வருட ஆட்சிக்காலத்தில் அடியெடுத்துவைத்துள்ளனர்.

பொலன்னறுவ மாவட்டத்தில்

கடந்தவாரம் எல்.ரி.ரி.ஈ.யினர் மேற்கொண்ட கெரில்லாத்தாக்குதல் ஒன்றில் சுமார் 25 பொலிஸார் கொல்லப்பட்டனர்.

வடக்கிலும், கிழக்கிலுமாக எல்.ரி.ரி.ஈ.யினர் தற்போது மேற்கொண்டு வரும் கெரில்லாத் தாக்குதல்கள் ஆயுதப் படையினருக்குப் பெரும் திக்கு முக்காட்டத்தைக் கொடுத்துள்ளன.

இக் கெரில்லாத்தாக்குதல்களில் பெரும்பாலானவை படையினர், பொலிஸார் ஆகியோர் ரோந்து செல்லும்போதே மேற்கொள்ளப்பட்டனவையாகவும், அத்துடன் எல்.ரி.ரி.ஈ.யினர் படையினரது முகாம்களை முற்றுகையிட்டு நடத்தியவையாகவுமுள்ளன.

எல்.ரி.ரி.ஈ யினரது முகாம்கள், தளங்கள் என்பன தற்போது வடக்கு-கிழக்கின் வனாந்தரப் பகுதிகளுக்கே இடம்மாறியுள்ளன. எனவே இனிவரும் காலங்களில் அவர்கள் மீது மேற்கொள்ளப்படும் எந்தவொரு தாக்குதலும், காடுகளுக்குள் அவர்களைத் தேடிச் சென்று மேற்கொள்ளப்படவேண்டியவையாகவே இருக்கும்.







இத்தகைய தாக்குதலுக்கு இலங்கை ஆயுதப்படையினரின் ஆட்பலம், ஆயுதபலம் என்பன எவ்வளவு தூரம் ஈடுகொடுக்குமென்பதே கேள்விக்குறியாகவுள்ளது.

முல்லைத்தீவு முகாம்மீது எல்.ரி.ரி.ஈ. மேற்கொண்ட தாக்குதலையடுத்து, அம்முகாமை மூடிவிடுவதை விட, வேறெதனையும் படையினரால் மேற்கொள்ள முடியவில்லை.

ஆனையிறவில் இருந்து கிளிநொச்சிப் பகுதியைக் கைப்பற்றும் நோக்கில் 'சத்திய வெற்றி' என்று பெயரிட்டு படையினர் நகர்ந்தனர். ஆனால் வெறுமனே ஆட்டிலறி வெடிகளையும், கனரக வாகனங்களின் வேட்டுக்களையும் கொட்டித்தீர்க்க மட்டும் முடிந்ததே தவிர, கிளிநொச்சியைக் கைப்பற்றும் நோக்கம் எவ்வகையிலும் கைகூடவில்லை.

எனவே யாழ்குடாநாட்டைவிட விசாலமான, வன்னிப் பிரதேசத்தை எல்.ரி.ரி.ஈ.யினர் தமது மாபெரும் தளமாக மாற்றியிருப்பதும், இத்தளமே எதிர்காலத்தில் ஆயுதப்படையினருக்கு இடையறாத நெருக்கடிகளையும் தரவிருப்பதும் தெளிவாகியுள்ளது.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் எல்.ரி.ரி.ஈ.யினரைத் தடைசெய்யும் முடிவு நெருப்பில் எண்ணெய் வார்ப்பதாகவே இருக்கும்.

அரசியல் ரீதியாக எந்தவொரு தொடர்புகளையும் எல்.ரி.ரி.ஈ.யினரோடு கொண்டிருக்க முடியாததாகவே அவர்கள் மீதான தடை அமைந்திருக்கும்.

எல்.ரி.ரி.ஈ.அமைப்பை ஆட்சியாளர்கள் தடைசெய்வது பற்றிப் பரிசீலிக்கின்றனர்.

மறுபுறத்தே எல்.ரி.ரி.ஈ.யினரது அரசியல் அணுகுமுறை என்பது பற்றி எதுவுமே புரியாததாக இருக்கின்றது.

வெளிநாடுகளில் இருந்து எல்.ரி.ரி.ஈ. ஆதரவாளர்களினால் வெளியிடப்படும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், மற்றும் தமிழ் அமைப்புக்கள் நடத்தும் மாகாநாடுகள் என்பனவே எல்.ரி.ரி.ஈ.யின் குறித்த கருத்துக் கண்ணோட்டங்களை வெளியிட்டு வருகின்றன.

ஆனால் இலங்கையில் எல்.ரி.ரி.ஈ.யினரது அரசியல் அணுகுமுறைகள் என்பது மூடுமந்திரமாகவே இருக்கின்றன..

யாழ்-குடாநாட்டிலிருந்து இராணுவத்தை வாபஸ் பெறவேண்டும்; அரசு போர் நிறுத்தமொன்றைக் கொண்டுவர வேண்டும் என்று எல்.ரி.ரி.ஈ.யினர் அண்மையில் கிளிநொச்சியிலிருந்து தமது 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை மூலமாக அறிவித்திருந்தனர்.

இது தவிர அவுஸ்திரேலியாவில் இருமாதங்களுக்கு முன்னர் தமிழ் பிரமுகர்கள் பலரும் பங்குபற்றிய மகாநாடொன்று இடம்பெற்றது. அம்மகாநாட்டில் எல்.ரி.ரி.ஈ. சர்வதேசப் பேச்சாளர் லோரன்ஸ் திலகர் பங்குபற்றி உரை நிகழ்த்தியபோது கூட இராணுவ வாபஸ், போர் நிறுத்தம் என்பவை பற்றியே பிரஸ்தாபித்திருந்தாரே தவிர வேறு அரசியல் அணுகுமுறைகள் பற்றிக் குறிப்பிடவில்லை.

கடந்தவாரம் சுவிற்ஸர்லாந்தில் எல்.ரி.ரி.ஈ. அமைப்பினர் மாபெரும் பேரணி ஒன்றையும் நடத்தியிருந்தனர். அப்பேரணியில் சுவிற்ஸர்லாந்தில் உள்ள தமிழர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இரு விசேட ரயில் வண்டிகள்-இப்பேரணியில் பங்குகொண்டோருக்காக சூரிச் நகரில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

இந்த விசேட ரயில்வண்டிகள் ஜெனிவா நகர்வரை சென்றன. பின்னர் ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் ஸ்தாபன கிளை அலுவலகத்தில் இலங்கை தமிழர் பிரச்சினை குறித்த மகஜர்களை பேரணி நடத்தியோர் கையளித்தனர்.

இவ்வாறு பேரணிகள், மகாநாடுகள் மூலமாக மட்டுமே எல்.ரி.ரி.ஈ.சார்பு அமைப்புகள் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனவே தவிர எவ்வகையிலும் இராஜதந்திர ரீதியிலான அணுகுமுறைகள் இடம்பெற்றிருக்கக் காணப்படவில்லை.

எல்.ரி.ரி.ஈ.அமைப்பைத் தடை செய்யும் நடவடிக்கைகளை இலங்கை ஆட்சியாளர்கள் பரிசீலிக்கின்றனர். அத்தகைய தடையை எதிர்கொள்வதற்கு எல்.ரி.ரி.ஈ.அரசியல், இராஜதந்திர ரீதியாகத்தன்னைப் பயன்படுத்தவேண்டியது இன்றியமையாததாகின்றது.

ஏனெனில் ஆட்சியாளர்கள் அரசியல் அணுகுமுறைகளை ஆக்கபூர்வமாக்குவார்களோ அல்லது அர்த்தமுள்ளவையாக்குவார்களோ என்று கூறுவதற்கில்லை.

கூடியவரை இராணுவ அழுத்தங்கள் மூலம் தமது விருப்பு, வெறுப்பைப் பிரதிபலிக்கும் ஒரு தீர்வையே ஆட்சியிலிருப்போர் முன்வைக்க முனைவார்கள்.

ஐக்கியதேசியக் கட்சி ஆட்சியிலிருந்து இராணுவ நடவடிக்கைகளை எல்.ரி.ரி.ஈ.க்கு எதிராக மேற்கொண்டபோது, அரசியல் தீர்வொன்றின் அவசியத்தை எதிர்க்கட்சியில் இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அதனோடிணைந்த ஏனைய கட்சிகளும் வலியுறுத்தின.

ஆனால் தற்போது பொது ஜன ஐக்கிய முன்னணி பதவியில் இருக்கின்றது. எதிர்க்கட்சியில் உள்ள ஐ.தே.க., எல்.ரி.ரி.ஈ.மீது தற்போதைய ஆட்சியாளர்கள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை விமர்சிப்பதுடன் எல்.ரி.ரி.ஈ.யை ஒரு சாதாரண அமைப்பாகக் கருத வேண்டாமெனவும் கூறிவருகின்றனர்.

எதிர்க்கட்சியிலிருப்போர் ஆட்சியிலிருக்கும்போதும், ஆட்சியிலிருப்போர் எதிர்க்கட்சியிலிருக்கும்போதும் வெளியிடும் கருத்துக்கள் அவர்களது இதய சுத்தியற்ற நிலைப்பாடுகளையே வெளிப்படுத்துகின்றன.

இந்நிலையில் ஆட்சியிலிருப்போரிடமிருந்து மட்டுமல்ல; எதிரணியிலிருப்போரிடமிருந்து கூட எதனையும் நேர்மையாகவோ, அழுத்தம், திருத்தமாகவோ எதிர்பார்க்க முடியாது. தமிழ் அரசியலாளர்கள் காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வருகின்றனர்.

உள்நாட்டில் தமிழர்களது உரிமைகள், கோரிக்கைகளை வழங்க மறுக்கும் ஆட்சியாளர்கள் சர்வதேச சமூகத்தையும் தம்பால் கவர்ந்திழுத்து, அனுதாபம் தேட முனைகின்றனர்.

ஆனால், இலங்கையின் பேரினவாத ஆட்சியாளர்களின் இத்தகைய போக்கிற்கு இடந்தராது, சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் தமிழ் அரசியலாளர்கள் செயலில் இறங்கவேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது.

திட்டவட்டமான, அழுத்தம் திருத்தமான அரசியல் வரையறையொன்றை வகுத்து எல்.ரி.ரி.ஈ.உட்பட அனைத்து தமிழ் அமைப்புகளும் ஒரு நிரந்தர அரசியல் தீர்வை சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் தாமாகவே தேட வேண்டிய நிர்ப்பந்தமே தற்போது தோன்றியுள்ளது.

# கலைஞர்-புலிகள் ⇒ உறவுக்குத்தடைகள்!

சமீபத்தில் தமிழக சட்டசபையில் கலைஞர் கருணாநிதி ஒரு கருத்துச் சொல்லியிருக்கிறார்.

"புலிகளுக்கு மானசீக ஆதரவு கொடுப்பதுவேறு, செயல்வடிவமான ஆதரவு கொடுப்பது வேறு." என்பது கலைஞரின் கருத்து.

தமிழ்நாட்டில் புலிகளுக்கு ஆதரவாக குரல் கொடுப்பவர்களில் முன்னணியில் இருப்பவர்கள் நான்குபேர்.

1. வை. கோபாலசாமி.
2. டாக்டர் ராமதாஸ்.
3. நெடுமாறன்.
4. கி. வீரமணி.

இந்த நான்கு அரசியல் தலைவர்களும் தற்போது கலைஞர் கருணாநிதியின் முக்கியமான அரசியல் எதிரிகள்.

அதிலும் வை. கோபாலசாமி முதல் எதிரி. தனக்குப் பின்னர் தி.மு.க. தொண்டர்களை வளைத்துப் பிடிக்கக்கூடியவர் வை.கோபாலசாமி என்பது கலைஞருக்குத் தெரியும்.

கலைஞர் இருக்கும்வரை தொண்டர்கள் தி.மு.க.வில் இருந்தாலும், கலைஞருக்குப் பின்னர் தொண்டர்களை வழிநடத்தும் முக்கிய தலைவர் எவரும் தி.மு.க.வில் இல்லை.

கலைஞரின் மகன் ஸ்டாலின்தான் கலைஞருக்குப் பின்னர் தி.மு.க. தலைவர் என்ற சூழ்நிலை கட்சிக்குள் உருவாக்கப்பட்டு வருகிறது.

ஆனால், ஸ்டாலினால் கலைஞர்போல கட்சியை வழிநடத்திச் செல்ல முடியுமா? என்பது கேள்விக்குறிதான்.

தான் இல்லாதபோது ஸ்டாலினுக்கு போட்டியாகவும் சவாலாகவும் மாறக்கூடியவர் வை. கோபாலசாமி என்பதால், தனது காலத்திற்குள் கோபாலசாமியின் அரசியல் எதிர்காலத்திற்கு ஆப்பு வைத்துவிடவே விரும்புகிறார் கலைஞர்.

இந்த அரசியல் போட்டிக்குள் புலிகளும் சிக்கிக்கொள்கிறார்கள்.

வை.கோபாலசாமியோடு பிரபாகரனுக்கு நெருக்கம் இருக்கிறது. தி.மு.க.வைவிட வை.கோபாலசாமி போன்றவர்களையே புலிகளும் நம்புகிறார்கள்.

வை. கோபாலசாமி போன்றவர்களின் வளர்ச்சியால் தமிழ்நாட்டில் தமக்குப் பாதகமில்லாத நிலை உருவாகும் என்று புலிகள் நம்பலாம்.



"தமிழ் உணர்வு, புலிகள் ஆதரவு என்ற முழக்கங்களுடன் தமிழ்நாட்டிலுள்ள சமூக விரோத சக்திகள் தலைதூக்க முயல்கின்றன."

அந்த நம்பிக்கையின் அடிப்படையில் வை.கோபாலசாமிக்காக சில காரியங்களில் புலிகள் ஈடுபடக்கூடும் என்பது கலைஞரின் அச்சம்.

அதேவேளை, இலங்கையில் தொடர்ந்து நடைபெறும் யுத்தம் காரணமாக தமிழர்கள் பாதிக்கப்படுகிறார்கள். புலிகள் மட்டுமே தமிழர்களுக்காகப் போராடுகிறார்கள் என்ற எண்ணமும் தமிழக மக்களிடம் ஏற்பட்டிருக்கிறது.

அந்த எண்ணம் அனுதாப அலையாக உருப்பெறாவிட்டாலும், புலிகள் மீதான அபிமானத்தை உருவாக்கியிருக்கிறது.

அந்த அபிமானத்திற்கு மாறாகப் பேசுவது பொருத்தமாக இருக்காது என்பதால்தான், மானசீகமாக ஆதரிப்பது தவறல்ல என்ற அர்த்தத்தில் கலைஞர் கருத்துச் சொல்ல வேண்டி ஏற்பட்டது.

அதே நேரத்தில் வை. கோபாலசாமியின் கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள் சிலரை தொடர்ந்து சிறையிலேயே வைத்திருக்கிறார் கலைஞர்.

புலிகளுக்கு தமிழ்நாட்டில் இருந்து எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்களை அனுப்பும்போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வை. கோபாலசாமியின் கட்சிக்கும் புலிகளுக்கும் இடையிலுள்ள உறவுதான் கலைஞருக்கு கட்சி ரீதியாகவும் பாதகமான விஷயமாக இருக்கிறது.

புலிகள் தமிழ்நாட்டிற்கு வந்து அதனால் வை. கோபால்சாமி போன்றோர் ஆதாயம் பெறுவதை கலைஞர் விரும்பவில்லை.

அதனால் காட்டமாகவே பேசியிருக்கிறார். "தமிழ்-தமிழ் உணர்வு, புலிகளுக்கு ஆதரவு என்ற முழக்கங்களின் பெயரால் தமிழ்நாட்டிலுள்ள சமூக விரோத சக்திகள் வளரப் பார்க்கின்றன." என்று சட்டசபையிலேயே பேசியிருக்கிறார் கலைஞர்.

புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் தற்போது கலைஞரையும் பகைத்துக் கொள்ள முடியாது. அதேநேரம் வை.கோபாலசாமி போன்றோருடன் உள்ள உறவையும் முறித்துக் கொள்ள முடியாது.

இந்நிலையில் கலைஞருக்கும் புலிகளுக்கும் இடையில் சுமுகமான உறவு உடனடியாக மலர்வதற்கு ஏற்ற சூழல் காணப்படவில்லை.

எனினும், புலிகள்தான் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தீர்க்கமான சக்திகள் என்பதையும் கலைஞர் உணர்ந்தே உள்ளார். "அவர்கள் போராடட்டும். நமக்கு பிரச்சனையாக இல்லாமல் இருந்தால் சரிதான்" என்பதே கலைஞரது நிலை.



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி — பூலான்தேவி

**தருவது — ரசிகன்**

**8 இதுவரை**

**பூலான்தேவிக்கு 11 வயதில் திருமணம் நடக்கிறது.**
**கணவன் புத்திலாலை பூலான் வெறுக்க, அவன் வீட்டுக்குத் துரத்துகிறான்.**
**15 வயதில் பூலான் தேவிக்கு கைலாஸ் என்பவனுடன் காதல்.**
**கைலாஸ் ஏற்கெனவே திருமணமானவன். பூலானும் கைலாசும் ஒன்றாக இருப்பதை கைலாசின் மனைவி பார்க்கிறாள்.**
**பூலான் தான் தன்னை கூப்பிட்டாள் என்று பழி போடுகிறான் கைலாஸ். அங்கிருந்தும் விரட்டப்படுகிறாள் பூலான்.**

**இனி...**

கைலாஸ் ஒரு கோழை. பயந்தாங் கொள்ளி. எல்லாவற்றையும்விட சுயநலக் காரன்.

இப்படியும் யாராவது அபாண்டமாகப் பொய் சொல்வார்களா? என்று நான் நினைத்து நினைத்து திகைத்துப் போயிருக்கிறேன்.

என் வாழ்க்கையில் நான் முதன் முதலாக நேசித்த ஒரே ஒரு ஆண்மகன் கைலாஸ்தான்.

அவன் மனிதனே அல்ல என்று தெரிந்தபோது எல்லா மனிதர்களுமே இப்படித்தான் இருப்பார்களோ என்று நினைத்தேன்.

கைலாசின் அம்மா என்னை அழைத்துக் கொண்டு வந்து என் வீட்டில் விட்டுப் போனாள்.

நல்ல வேளை, அவள் எதையும் எங்கள் வீட்டில் சொல்லவில்லை. அந்த வகையில் கைலாசின் அம்மாவுக்கு நான் நன்றி சொல்லவேண்டும்.

வீட்டுக்கு திரும்பி வந்தபின்னர் அம்மா மீண்டும் புத்திலாலின் பேச்சை எடுத்தாள்.

திருமணமானபின்னர் நான் தொடர்ந்தும் வீட்டில் இருப்பது அவர்களுக்கு ஒரு சுமையாக இருந்தது.

இதற்கிடையே என் அப்பா ஆற்றங் கரையில் ஒரு காணியைப் பிடித்துக் கொண்டார். அது அரசாங்கத்துக்குச் சொந்தமான காணி; வெறுசாகக் கிடந்தது. யாரும் அங்கே பயிர் செய்யவில்லை.

அந்தக் காணியைப் பிடித்து அங்கு முலாம் பழமரங்களைப் பயிரிட்டார் அப்பா. நானும் காணியில் வேலை செய்தேன். என் உழைப்பு அப்பாவுக்குத் தேவையாக இருந்தது.

அதனால் புத்திலால் வீட்டுக்கு என்னை அனுப்பும் பேச்சை அம்மா எடுத்த போதெல்லாம், அப்பா 'பார்க்கலாம்' என்று மட்டும் சொல்வாரே தவிர, என்னிடம் எதுவும் சொன்னதில்லை.


பூலான்

காணியில் வேலை செய்வது எனக்கும் பிடித்தமாகத்தான் இருந்தது.

அப்பா காணிக்குள் நின்றால், நான் கடுமையாக வேலை செய்வேன். அதனைப் பார்த்தால் என்னை புத்திலால் வீட்டுக்கு அனுப்ப நினைக்க மாட்டாரல்லவா?

அப்பாவுக்கே பரிதாபமாக இருந்திருக்க வேண்டும். ஒருநாள் பரிவோடு சொன்னார்: "பூலான், ஏனம்மா இப்படிக் கஷ்டப்படுகிறாய்? எங்கள் காணிதானே! யார் உன்னை திட்டப் போகிறார்கள்? பொறுமையாக வேலை செய், போதும்!"

அப்போது நான் என்ன நினைத்தேன் தெரியுமா? 'ஐயோ அப்பா! எல்லோரும் என்னை ஏமாற்றுகிறார்கள். நான் உன்னை ஏமாற்றுகிறேன்' என்று நினைத்தேன்.

என் தம்பி சிவநாராயணன் வீட்டில் தான் இருந்தான். அவனைப் பள்ளிக் கூடத்தில் சேர்த்துவிடுமாறு நான்தான் அப்பாவிடம் சொன்னேன்.

நான் சொன்னதை அப்பா கேட்டுக் கொண்டதில் எனக்கு சந்தோஷமாக இருந்தது. சிவநாராயணன் பள்ளிக்கூடம் செல்லத் தொடங்கினான்.

நான்தான் நாலெழுத்துப் படிக்கவில்லை. அவனாவது படிக்கட்டுமே! எங்கள் குடும்பத்தில் ஒருவனாவது படித்திருப்பது பெருமைதானே!

அம்மா ஒருநாள் ஒப்பாரிவைத்து அழுது கொண்டிருந்தாள். 'அம்மா ஏன் அழுகிறாள்? என் பெரியப்பாவின் ஆட்கள் வந்து ஏதாவது தகராறு செய்துவிட்டார்களோ? அடித்துப் போட்டுவிட்டுப் போய் விட்டார்களோ?' என்றுதான் நினைத்தேன்.

"ஏன் அக்கா அம்மா அழுகிறா?"

"உனக்குத் தெரியாதா பூலான்?"

"என்ன?"

"மாமியின் மகன் கைலாஸ் செத்தும் போனானாம். யாரோ சுட்டுக் கொன்று விட்டார்களாம்!"

அக்கா சொன்ன செய்தி எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

ஆனால் சத்தியமாகச் சொல்கிறேன்; கவலையாக இருக்கவேயில்லை.

அப்போது என் மனதில் எழுந்த ஒரு நினைப்பை மறைக்காமல் சொல்லி விடுகிறேன்.

கைலாசைச் சுட்டவர்கள் யாரென்று தெரிந்தால் ஓடிப்போய் நன்றி சொல்ல வேண்டும் போல் இருந்தது.

"என்னடி உனக்கு கவலையே யில்லையா?"

"ஏன்?"

"எங்கள் மாமி மகன்தானே! உனக்கும் கைலாஸைத் தெரியும்தானே!"

"தெரியும்! நன்றாகத் தெரியும்!" சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டேன். முதுகுக்குப்பின்னால் அக்கா முறைத்துக் கொண்டிருப்பதாக மனதில் பட்டது.

கைலாஸ் இரண்டு கொள்ளைக் கோஷ்டிகளுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தானாம். ஒரு கோஷ்டிக்குத் தெரியாமல், மற்றொரு கோஷ்டிக்கு உதவியிருக்கிறான்.

விஷயம் தெரிந்துபோக இரண்டு கோஷ்டிகளில் ஒன்று கைலாசை சுட்டுப் பிணமாக வீசிவிட்டுப் போய்விட்டது.

இதெல்லாம் பின்னர் நான் அறிந்து கொண்ட செய்திகள்.

கைலாஸ் யாருடனும் விசுவாசமாக இருக்கத் தெரியாதவன். அதன் பயனை அவன் அனுபவித்துவிட்டான்.

கைலாஸின் முடிவு எனக்கு சந்தோசமாக இருந்தது. மெல்ல மெல்லக் கைலாசின் மரணம் பற்றிய செய்திகள் அடங்கிப்போய் விட்டன.

எனக்கும் பதினாறு வயதாகியிருந்தது.

அப்போதுதான் என் வாழ்க்கையில் குறுக்கிட்டான் சுரேஷ் சந்த்.

எங்கள் கிராம அதிகாரியைப் பற்றிச் சொல்லி இருக்கிறேன் அல்லவா? 'பொம் பிளைப் பொறுக்கி.' அந்தக் கிராம அதிகாரியின் மகன்தான் சுரேஷ் சந்த்.

அப்பனுக்கு பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கிறான் என்று சொல்லலாம்.

நான் காணிக்குச் செல்லும்போதெல்லாம் எதிரே நின்று இளிப்பான். முறைத்து முறைத்துப் பார்ப்பான்.

'போடா நாயே' என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டு ஒதுங்கிப்போய்விடுவேன். ஒல்லியான தேகம். நல்ல உயரம். நீளக் காற்சட்டை போட்டிருப்பான். சைக்கிளில் கிராமத்தைச் சுற்றிக்கொண்டிருப்பான்.

ஒருநாள் நான் காணியிலிருந்து வீட்டுக்கு திரும்பியபோது அங்கே சுரேஷ் சந்த் இருந்தான். அம்மா விழுந்து, விழுந்து உபசரித்துக் கொண்டிருந்தாள்.

எப்படியோ பழக்கம் பிடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டான்.

கிராம அதிகாரியின் ஒரு மகன் வீட்டுக்கு வருவது கௌரவமான காரியம். பெரியப்பாவின் கைக்குள் இருந்தான் கிராம அதிகாரி.



அவனது மகன் எமது வீட்டுக்கு வருவதால் பெரியப்பாவின் சொற்படி கிராம அதிகாரி ஆடாமல் பார்த்துக் கொள்ளலாம் என்று அம்மாவுக்கும், அப்பாவுக்கும் ஒரு ஆறுதல்.

சுரேஷ் சந்த்துக்கு நடந்த உபசாரமெல்லாம் அவனது தந்தை கிராம அதிகாரியாக இருப்பதால் செய்யப்பட்டவைதான்.

சுரேஷ் சந்த் எங்கள் வீட்டுக்கு வருவதும் போவதும் என் பெற்றோரில் ஏற்பட்ட ஏதோ அபிமானத்தில் அல்ல;. என் பொருட்டுத்தான்.

'பார்த்தாயா உன் வீட்டுக்கே வந்து விட்டேன்' என்பதுபோல கண்களில் கர்வத்துடன் என்னைப் பார்த்து ஒரு மாதிரியாக இளித்தான். நான் அதைக் கவனியாதது போல உள்ளே போய்விட்டேன்.

நான் அவனைக் கடந்து உள்ளே செல்லும்போது அப்பாவிடம் சுரேஷ் சந்த் கேட்டான்:

"யார் இது, உங்கள் மகளா?"

'அடப்பாவி' இவன் பொல்லாத பேர் வழியாக இருப்பான். கிராதகன் என்னமாய் நடிக்கிறான்?' என்று நினைத்துக்கொண்டேன்.

அதன்பின்னர் ஒருநாள் நான் காணியில் இருந்து வரும்போது சுரோஷ் சந்த் குறுக்கே நின்று வழிமறித்தான்.

எனக்கு சட்டென்று கோபம் வந்து விட்டது. நேராக அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டு, "என்ன?" என்றேன் முறைப்பாக.

நான் அப்படிக் கேட்பேன் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. பயந்து போவேன் என்றுதான் நினைத்திருப்பான். அதனால் கொஞ்சம் தடுமாறிப் போனான்.

"வாயேன் பேசிக்கொண்டிருக்கலாம்," என்றான்

"வழியைவிடு நான் போகவேண்டும்!"

"விடாவிட்டால் என்ன செய்வாய்?" என்றான். என் கழுத்துக்கு கீழே கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தான்.

எனக்கு அவனை ஒரே உதையாக உதைத்துவிட்டு ஓடிவிடலாம் என்று தோன்றியது.

"மாங்காயா வைத்திருக்கிறாய்! திருட்டு மாங்காயா? கள்ளி அதுதான் ஒளித்து வைத்திருக்கிறாய். நான் பார்க்க வேண்டும்!" என்றான்.

எனக்கு முதலில் புரியவில்லை. புரிந்த போது கோபம் தலைக்கேறியது.

"போடா கழுதை, போய் உன் வீட்டில் பாரடா!" என்று கத்தியபடியே அவன் நெஞ்சில் என் இரண்டு கைகளையும் வைத்து பின்நோக்கி தள்ளிவிட்டேன்.

என் திடீர் செய்கையால் பின்நோக்கிச் சரிந்தவன், சரியும் போது என் கைகளில் ஒன்றை எட்டிப் பிடித்துக் கொண்டான்.

அதனால் அவன் கீழேவிழ, அவன்மீது நானும் விழுந்தேன். அவன் என்னைப் புரட்டிக் கீழே தள்ளிவிட்டு என்மீது ஏறி இருந்து கொண்டான். என் இரண்டு கைகளையும் தல; கைகளால் அழுத்திப் பிடித்துக் கொண்டான்.

"இப்போது எப்படி?' என்பது மாதிரியாக என்னைப் பார்த்து ஒரு இளிப்பு இளித்தான்.

எனக்குள் அடக்க முடியாத கோபம் தகித்தது. ஆனாலும் வசமாக மாட்டிக் கொண்டேன். அப்போதுதான் எனக்கே என்மீது ஆச்சரியமாக அந்த யோசனை வந்தது.

"கையைவிடு சுரேஷ் சந்த்!" என்றேன். என் குரலில் கோபம் இல்லை. அதுவும் எனக்கே ஆச்சரியம்.

"விட்டால் நான் சொன்னபடியெல்லாம் கேட்பாயா?"

"கேட்கிறேன், கையைவிடேன்!" என்ன மாதிரிப் பேசுகிறேன்! மீண்டும் எனக்குள் என்மீது ஆச்சரியம்.

சுரேஷ் சந்த் என்னை சந்தேகமாய்ப் பார்த்தான். "உண்மையாகவா?"

"உண்மையாக!"

அவன் ஆசையோடு பார்த்துக்கொண்டே என் கைகளை விட்டான்.

என் கைகளுக்கு சுதந்திரம் கிடைத்து விட்டது.

"கேட்கவா?" என்றான்.

"கேளேன்!"

"இது வேண்டாம். விலக்கிவிடு!" என்று என் முந்தானையைத் தொட்டுக் காட்டினான்.

"அவ்வளவு ஆசையா?"

"ம்...ம்.. நிறைய!"

"நீ... பார்த்ததே இல்லையா?"

"இல்லை, இப்போதான்.."

"ஏன் உன்.... விடமும் பார்த்திருக் கலாமே?"

அந்தக் கேள்வியில் அவன் முகம் சிவந்துபோனது.

"என்னடி சொன்னாய்?" என்று கேட்டு முடித்து, என்னைத் தாக்குவதற்கு இடையில் நான் முந்திக்கொண்டேன்.

இடது கையை இறுகப் பொத்தி மூடிக் கொண்டு, என்பலத்தையெல்லாம் முஷ்டிக்கு கொடுத்து,

ஓங்கி ஒரே குத்து!

ஒரே ஒரு குத்து!

அவன் மூக்கு உடைந்து குபுக்கென்று பாய்ந்த இரத்தம் என் முந்தானையிலும் விழுந்தது.

மூக்கைப் பொத்தியபடி சுரேஷ் சந்த் பக்கவாட்டில் சாய்ந்தான்.

இரத்தம்.

நான் அடித்து முதன் முதலாகச் சிந்தப்பட்ட இரத்தம்!

'நிற்காதே ஓடு!' என்றது மனம்.

ஏனோ ஓடிப்போகவேண்டும் என்ற நினைப்பை நான் உதறிவிட்டு நடந்தே போனேன்.

எனக்குப் பின்னால் ஆபத்து வந்து கொண்டிருக்கிறது என்று தெரிந்திருந்தால் நான் ஒரே ஓட்டமாக வீடு போய்ச் சேர்ந்திருக்கலாம்.

என் துரதிர்ஷ்டம்; நடந்து போய்க் கொண்டிருந்தேன்.

என் வீட்டுக்கு அருகே இருந்த சந்தொன்றில் நான் திரும்பும்போது என் பின்னால் யாரோ ஓடிவருவது போல் இருந்தது.

திரும்பிப் பார்த்தேன்.

திகைத்துப் போனேன்.


(தொடர்ந்து வரும்)

# அழகி கிழவியானார்! கொட்டுகிறது பணம்

உலகின் தலை சிறந்த மொடலிங் அழகிகளில் ஒருவர் நோமி கேம்பெல். வயது 26தான். சூப்பர் அழகி என்று புகழ் பெற்றிருக்கிறார்.

பதினாறு வயதில் போஸ் கொடுக்க ஆரம்பித்தவர் நோமி கேம்பெல். அவரது ஒவ்வொரு போசும் பரபரப்பானது.

ஒரு சமயம் வித்தியாசமான போஸ் கொடுக்கும் ஆசை வந்தது. கொடுத்தார். விற்பனையில் சக்கை போடு போட்டது அந்தப் புகைப்படங்கள். கைமேல் பலன்.





கோடிக்கணக்கான ரூபாய் ஊதியமாகக் கிடைத்தது. காரணம், நிர்வாணமாக போஸ் கொடுத்திருந்தார் நோமி கேம்பெல்.

இப்படியெல்லாம் கவர்ச்சிப் போஸ் கொடுத்துக் கொண்டிருந்த நோமி கேம்பெல் திடீரென்று கிழவியாகிவிட்டார்.

அதாகப்பட்டது- நோமி கேம்பெலை கிழவியாக நடிக்கவைத்தால் வித்தியாசமாகப் பேசப்படும் என்று திட்டமிட்டு அவரை அணுகியது ஒரு தொலைக்காட்சி நிறுவனம்.

'இந்தியன்' படத்தில் கமல் நடித்தது போல, நோமி கேம்பலுக்கும் கிழவியாக நடிக்கும் வாய்ப்பு.

26 வயதில், 16 வயதுத் தோற்றத்துடன் காட்சியளிக்கும் நோமி கேம்பல், கிழவியாக நடிக்க முதலில் தயங்கினாராம்.

தொலைக்காட்சி நிறுவனத்தினர் விட வில்லை. கிழவியாக நடித்தால் ஊதியம் எவ்வளவு கொடுக்கப்படும் என்று விபரத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

வாய் பிளக்காத குறையாக கேட்டு விட்டு, உடனடியாக சம்மதம் சொல்லி விட்டார் நோமி.

ஊதியம் எவ்வளவு தெரியுமா? 54 கோடி ரூபாய்கள்!

நோமி கேம்பெல் கிழவியாக நடிக்கும் தொடர் பரபரப்பாகிவிடும் என்பதால் விளம்பரங்கள் குவியும். அதனை வைத்து நோமிக்கு கொடுக்கும் ஊதியத்தைவிட பல மடங்கு சம்பாதித்துவிடுவார்கள்.

நோமி கேம்பெலுக்கு கிழவியாக மேக் அப் போட்டு முடிக்க ஆறுமணி நேரம் பிடித்ததாம். களைத்துப் போனராம் அழகி. சுளையாக உழைப்பதென்றால் சும்மாவா?!

# கிளாரியின் வளர்ப்பு மகன்

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா வளர்ப்பு மகன் என்று சுதாகரனை தத்தெடுத்தார். வளர்ப்பு மகனுக்கு வரலாறு காணாத திருமணமும் நடத்திவைத்தார். அதன் பின்னர் வளர்ப்பு மகன் என்றாலே அலர்ஜியான சங்கதியாகி விட்டது.

இப்போது அமெரிக்காவிலும் ஒரு வளர்ப்பு மகன் விவகாரம்! வளர்ப்பு மகனை தத்தெடுக்கப் போகிறவர் அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டனின் மனைவி கிளாரி.



ஜெயலலிதா தத்தெடுத்தது வாலிபக் குழந்தையை. ஆனால் கிளாரி தத்தெடுப்பதோ உண்மையாகவே ஒரு குழந்தையை.

கிளாரிக்கு இப்போது 48 வயது. கிளிண்டன்-கிளாரி தம்பதிக்கு 16 வயதில் செல்சியா என்றொரு மகள் இருக்கிறார். கிளாரிக்கு குழந்தைகள் என்றால் கொள்ளை ஆசை. பெண் குழந்தை பிறந்த பின் ஆண் குழந்தை ஒன்றுக்காக ஆசைப்பட்டார் கிளாரி.

கணவருடன் அரசியல் நடவடிக்கைகளில் ஒத்துழைக்க வேண்டி இருந்தமையால் கர்ப்பமாவது தடையாக இருக்கும் என்று காலம் தாழ்த்தினார்.

அதன் பின்னர் தீவிரமாக முயன்றும் கிளாரிக்கு குழந்தைப்பேறு கிடைக்கவில்லை.

அதனால் ஒரு ஆண் குழந்தையைத் தத்தெடுக்கத் தீர்மானித்தார் கிளாரி. கிளிண்டனும் சம்மதம் கொடுத்துவிட்டார்.

கிளாரியின் இந்த முடிவினால் அமெரிக்க மக்களிடம் அவருக்கு மதிப்புக் கூடியுள்ளது.

ஆதரவற்ற குழந்தை ஒன்றுக்கு வாழ்வு கிடைக்கிறது என்பதால் அமெரிக்க மக்கள் கிளாரியின் முடிவை வரவேற்கிறார்கள்.

மகள் செல்சியா ஏதாவது நினைப்பாளோ? பெற்றோரின் பாகத்தை பங்கு போட தயங்குவாளோ என்று முதலில் நினைத்தாராம் கிளாரி. ஆனால் செல்சியா என்ன சொன்னாள் தெரியுமா?

"பொஸ்னியாவுக்கு அமைதிகாக்கும் படையில் சென்ற அமெரிக்க வீரரின் குழந்தையை நீ கொஞ்சினாயே அம்மா; அப்போது உன் முகத்தில் எத்தனை மகிழ்ச்சி! கண்களில் எவ்வளவு பிரகாசம். அந்தக் குழந்தையைக் கூட நீயே வைத்திருக்கலாம். எனக்கும் ஒரு தம்பி கிடைப்பான்," என்று சொல்லிவிட்டாள் செல்சியா. செல்சியா சொன்னதைக் கேட்டு வானத்தில் பறந்தார் கிளாரி.

அந்த மகிழ்ச்சிக்கிடையிலும் கிளாரிக்கு ஒரு பொறுப்புணர்ச்சி.

எதிர்வரும் நவம்பர் மாதம் அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தல் பிரசாரத்தில் கணவரின் வலதுகரமாக இருக்கிறார் கிளாரி.

அதனால் தேர்தல் முடிந்தபின்னர் தான் குழந்தையைத் தத்தெடுக்கப் போகிறார். அதிகாரம் உள்ளபோதே காரியத்தை முடிக்கும் எண்ணம் இல்லாததும் நல்ல விஷயம்தான்.

# 'பங்களாதேஷில் ஒரு நறுக்!'



சமீபகாலமாக இவ்வாறான செய்திகள் அடிக்கடி வெளியாகிக் கொண்டிருக்கின்றன. குறும்புக்கார ஆண்கள்தான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

செய்தியைச் சொல்லாமல் ஏதேதோ சொன்னால் எப்படி? இதோ செய்தி:

பங்களாதேஷ் நாட்டில் உள்ள தல்பாரா என்ற பகுதியில் வசிப்பவர் நஸீம் ஹுசைன். அவர் திருமணமானவர்.

அடுத்த தெருவில் உள்ள பெண் ஒருவருடனும் நஸீம் தொடர்பாக இருந்தார். அதனால் வீட்டுக்குத் தாமதமாகச் செல்லத் தொடங்கினார். வீட்டில் தகராறு ஆரம்பித்தது. மனைவி அமீனா பேகம் எவ்வளவோ சொல்லியும் நஸீம் கேட்க வில்லை.

அப்படித்தான் ஒருநாள் தாமதமாக வீட்டுக்கு வந்து தூங்கிக் கொண்டிருந்தார் நஸீம். மனைவி அமீனா பேகத்திற்கு தூங்கும் கணவர்மீது கெட்ட கோபம்.

சமையலறைக்குப் போய் அங்கே உள்ள கத்திகளில் கூரான கத்தியாக ஒன்றை எடுத்து வந்து, கணவரின் பிறப்புறுப்பை ஒரே நறுக்! கையோடு துண்டாக வந்த ஒரு பகுதியைக் கொண்டு போய் எங்கோ குப்பைத்தொட்டியில் வீசி விட்டு மனைவி தலைமறைவாகி விட்டார்.

www.padippakam.com

# தகவல் பெட்டி



## அழிந்த இனமும் அழியாத உடலும்

சரித்திர காலத்திற்கு முற்பட்ட ஐஸ் ஏஜ் என்று சொல்லப்படும் மிகப் பழமையான காலத்தில் பூமியில் உயிர் வாழ்ந்தது மம்மோத் யானை. பல ஆயிரம் வருடங்களாக இது போன்ற பல பனி யானைகளின் இறந்த சடலங்கள் கெட்டுப்போகாமல் பனிகளுக்குள் புதையுண்டு இருந்ததைக் கண்டுபிடித்துள்ளனர்.. இந்த இன யானைகள் முற்றிலும் அழிந்து போயிருந்தாலும் அடையாளம் கண்டு கொள்ள வசதியாக இவற்றின் உடல்கள் உலகெங்கிலும் உள்ள மியூசியங்களில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த வகை முடி வளர்ந்த மம்மோத் யானைகளின் ஒவ்வொரு தந்தமும் நீண்டு வளைந்து இருக்கும். இது வரை கண்டுபிடிக்கப்பட்ட மம்மோத் யானைகளின் ஒரு பக்க தந்தத்தின் உச்சக்கட்ட நீளம் 16 அடி 5 1/2 அங்குல மாகும்.



## வந்துவிட்டது நவீன சக்கர வண்டி

அங்கத்திலே ஒரு குறையிருந்தால் வாழ்க்கையே பங்கப்பட்டதுபோல மனம் உடைந்து போய்விடுவார்கள் பலர். கால்களில் ஊனம் ஏற்பட்டுவிட்டால் மாபெரும் சோகம்தான்.

நடமாட வேண்டுமானால் இன்னொருவர் துணை தேவை. நினைத்த இடத்திற்கு செல்ல முடியாது. அடுத்தவர் காலை நம்பி வாழ்வதும் ஒரு வாழ்க்கையா என்று மனதில் கவலை நிரம்பிவழியும்.

முச்சக்கர வண்டிகள் கால்கள் ஊனமுற்றோருக்கு என்று தயாரிக்கப்படுகின்றன. ஆயினும் அவற்றால் உயரமான படிகளில் ஏற முடியாது. இறங்கவும் முடியாது. உயரமான படிகள் கொண்ட இடங்களுக்கு செல்ல வேண்டுமானால் இன்னொருவர் உதவியை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டும்.


இந்தச் சிரமங்களையெல்லாம் போக்கும் வகையில் ஊனமுற்றோருக்காக நவீன சூப்பர் சக்கர வண்டி ஒன்று தயாராகிவிட்டது. படத்தில் ஒரு அம்மையார் பயணம் செய்கிறார் அல்லவா. அது நவீன சக்கர வண்டி. இந்த நவீன சக்கர வண்டிக்கு 12 சக்கரங்கள் உள்ளன. பற்றரியினால் இயங்கும் மோட்டார் மூலம் மணிக்கு 4 மைல் வேகத்தில் செல்லக்கூடியது. எந்த உயர மான படிக்கட்டுக்களிலும் ஏறி இறங்கும். இலண்டனில் இதனை தயாரித்துள்ளனர். இதன் விலைதான் கொஞ்சம் அதிகம். 4 ஆயிரத்தி 500 அமெரிக்க டொலர்கள். நம்நாட்டு பெறுமதிப்படி 250,000 ரூபாய்கள்.


## எட்டுமாதத்தில் பிறந்த அதிசயக் குழந்தை

தமிழ் நாட்டில் கும்மிடிப் பூண்டி என்னும் பகுதியில் வசிப்பவர் இந்திரா. கணவர் பெயர் ராஜவேலு. 26 வயதான இந்திராவுக்கு கர்ப்பமாகி எட்டாவது மாதமே பிரசவ வலி ஏற்பட்டது. உடனடியாக ஒட்டோ ஒன்றில் ஏற்றி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார் ராஜவேலு.

வைத்தியசாலைக்கு செல்வதற்கு இடையிலேயே ஒட்டோவில் வைத்தே குழந்தை பிறந்துவிட்டது. குழந்தையை பார்த்தவர்களுக்கு பலத்த அதிர்ச்சி. நான்கு கைகள், நான்கு கால்களுடன் காணப்பட்டது பெண் குழந்தை. தலையும் மார்பும் ஒன்றாக இருந்தது.

வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார்கள். குழந்தையைக் காப்பாற்ற பரபரப்பாகக் காரியம் பார்த்தார்கள் டாக்டர்கள். ஆனாலும் பிறந்த ஒரு மணி நேரத்துக்குள் குழந்தை இறந்துவிட்டது.





## யானை ஆப்பிள்

ஆப்பிள் கண்டிருப்பீர்கள். உண்டிருப்பீர்கள். ஆப்பிளில் யானை ஆப்பிள் என்றொரு ரகம் உண்டு தெரியுமா? படத்தில் காணப்படுவதுதான் யானை ஆப்பிள்.

இந்த ரக ஆப்பிள்கள் அபூர்வமானவை. மலேசியாவுக்கும் இந்தியாவுக்கும் இடைப்பட்ட மலைப்பகுதிகளில் இவை காணப்படுகின்றன. இந்த ஆப்பிள் செடிகள் அக்டோபர் முதல் டிசம்பர் மாதம் வரை பூத்துக் காய்க்கும்.

யானை ஆப்பிள்கள் முதுகுவலிக்கு மருந்தாகவும் பயன்படுகின்றன. இவை புளிப்பாக இருப்பதால் ஊறுகாயாகவு பயன்படுத்தலாம். கறியாகக் கூட சமைக்க ாம்.

விதை மூலம் பரவும் இந்த ஆப்பிள்கள் பார்வைக்கு வித்தியாசமாகத் தெரிவதால் வீடுகளிலும் வளர்க்கிறார்கள்.




## நவீன உலகின் பயங்கரப் பரிசு!

அணுக்குண்டு வெடித்தால் எப்படி இருக்கும் என்பதற்கு ஒரு உதார ம் இப் புகைப்படம்.

இந்த அதிசயப்படம் 1946ம் ஆண்டு எடுக்கப்பட்டது. 1946 ஜூலை மு லா திகதி மார்ஷல் தீவில் உள்ள பிகினி அடோல் கடல் பகுதியில் அமெரிக்கா அணுக்குண்டு பரிசோதனை நடத்தியது. கடலுக்கடியில்தான் அணுக்குண்டு வெடிக்க வைக்கப்பட்டது. அணுக்குண்டு வெடிப்பு நீர்பரப்புக்கு மேலே 500 அடிவரை பிரமாண்டமாக உயர்ந்து பயங்கரமாக காட்சியளித்தது. இந்த வெடிப்பின் அதிர்வால் அமெரிக்காவின் விமானம் தாங்கிப் போர்க்கப்பலான 'இன்டிபெண்டன்ஸ்' கடலுக்குள் மூழ்கியது.

கடலுக்குள் வெடித்த அணுகுண்டே இப்படிப் பயங்கரமாக விசுவரூபம் காட்டியிருக்கிறது. ஒரு நாட்டுக்குள் வெடித்தால் என்னாகும்? ஜப்பானின் ஹீரோசிமா, நாகசாகி நகர்களில் இரண்டாம் உலகப் போரில் அமெரிக்கா வீசிய அணுக்குண்டை விட பயங்கரமான அணுக்குண்டெல்லாம் தற்போது இருக்கின்றன.


இன்றைய உலகை மிரட்டும் பயங்கரப் பிசாசு அணுக்குண்டுதான். இரக்கமோ ஈரமோ கிடையாது. ஒரு நாட்டையே உருக்குலைத்துவிடும்.



## ருசியான கப்பல்!

இது புதுமையான கப்பல் அல்ல. ஸ்பெயின் நாட்டில் இருக்கும் புராதனக் கப்பலின் மொடலில் உருவாக்கப்பட்டுள்ள சொக்லெட் க்ரேமி புரோவின்ஷியல் டி பட்டிசேரியா என்னும் பேக்கரி நிறுவனம் 1991ம் ஆண்டின் உணவுக் கண்காட்சிக்காகத் தயாரித்த சொக்லெட்தான் இது. 4000 கிலோ எடை கொண்ட இந்த சொக்லெட்டை உண்மையான கப்பலைக் கையாள்வது போலவே கயிறுகள், கொக்கிகள் போன்றவை கொண்டு, உருவம் சிதைந்து விடாமல் கவனமாகச் செய்து காட்டிப் பரிசு பெற்றார்கள்.

வழக்கமாகக் கேக் வகைகளையே பலர் உற்பத்தி செய்து காட்டுகையில் ஒரு மாறுதலுக்கு இவர்கள் சொக்லெட்டைக் கொண்டு இப்படி உருவாக்கியது மாறுதலாக இருந்ததுடன் பரிசையும் பெற்றுத் தந்தது சுவையான முயற்சி.





படிப்பகம்

www.padippakam.com

# கார்த்திக்-நக்மா மோதல்! ஒரு மணிநேரப் பேச்சுவார்த்தை!

'மேட்டுக்குடி' படப்பிடிப்பில் கார்த்திக்குக்கும், நக்மாவுக்கும் இடையே லடாய். கோடம்பாக்க வட்டாரத்தில் லேட்டஸ்ட் கிசு-கிசு அதுதான்.

விசாரித்தபோது கிடைத்த விபரங்கள் இவைதான்

'மேட்டுக்குடி' படத்தில் கார்த்திக்-நக்மா சம்பந்தப்பட்ட பாடல் காட்சிகள் கிளு கிளுப்பாகப் படமாக்கப்பட்டுள்ளன. நக்மாவை முடியுமானவரை கவர்ச்சி விருந்து படைக்கவைத்துவிட வேண்டும் என்று திட்டமிட்டே காட்சிகளை அமைத்தார் இயக்குநர் சுந்தர்.

நக்மாவும் வஞ்சகம் பண்ணாமல் சிக்கன உடைகளில் தோன்றி நடித்தார்.

அப்படியான பாடல்காட்சி ஒன்று படமாகிக் கொண்டிருந்த போதுதான் விவகாரம் ஆரம்பித்தது.

கார்த்திக் மீது நக்மா விழுந்து புரள்வது போன்று ஒரு காட்சி படமாக்கப்பட்டது. நக்மா தன்மீது விழுந்ததும் கார்த்திக் விஷமம் பண்ணிவிட்டார். இயக்குநர் 'கட்' என்று குரல் கொடுத்த பின்னரும் கார்த்திக்கிடம் இருந்து நக்மாவால் விடுபட முடியவில்லையாம். இழுத்துப் பறித்து விடுபட்ட நக்மா சீறிவிழுந்திருக்கிறார்.

அதுவரை கார்த்திக்கை 'ஜென்டில்மேன்' என்று புகழ்ந்து கொண்டிருந்தவர் அன்று ஆங்கிலத்தில் தாறுமாறாக ஏசிவிட்டாராம்.

இயக்குநர் சுந்தர் தலையிட்டு சமாதானம் செய்திருக்கிறார். "காட்சி நன்றாக, இயல்பாக வரவேண்டும் என்பதற்காக கார்த்திக் அப்படிச் செய்துவிட்டார்" என்று சுந்தர் சொல்லியிருக்கிறார்.

நக்மாவுக்கு இயக்குநரின் சமாதானம் திருப்தியளிக்கவில்லை.

"காட்சி நன்றாக வரவேண்டும் என்பதற்காக கை எங்கு வேண்டுமானாலும் படலாமோ? இதெல்லாம் எனக்குப் பிடிக்காது. இந்த மாதிரி நடந்து கொண்டால் என்னால் தொடர்ந்து நடிக்க முடியாது" என்று குதி குதியென்று குதித்துவிட்டார்.

நக்மாவுக்கு ஏன் திடீரென்று இப்படி ஒரு கோபம் வரவேண்டும்?

குறிப்பிட்ட படப்பிடிப்பு நடைபெற்ற தினத்துக்கு முதல்நாள் கார்த்திக்-நக்மா இருவரும் ஒரே காரில்தான் போனார்களாம். அப்போது நடைபெற்ற ஏதாவது பிரச்சனையின் வெளிப்பாடுதான் படப்பிடிப்பில் நடந்த லடாய் என்றும் ஒரு தகவல்.

அதனை உறுதிப்படுத்துவதுபோல ஒரு காரியமும் நடந்திருக்கிறது.

தன்னால் சமாதானம் செய்ய முடியாமல் போன சி.சுந்தர் ஒரு புத்திசாலித்தனமான வேலை செய்தாராம்.

"வாருங்கள் ஒரு அறையில் இருந்து பேசுவோம்" என்று இருவரையும் அழைத்துச் சென்றிருக்கிறார். இருவரையும் ஒரு அறையில் தனியாக விட்டு விட்டு நைசாக நழுவி விட்டார் சுந்தர்.

சுமார் ஒரு மணிநேரம் இருவரும் தனிமையில் இருந்து பேசினார்களாம். என்ன நடந்ததோ கார்த்திக் எப்படி நக்மாவை சரிப்படுத்தினாரோ தெரியவில்லை, "தொடர்ந்து படப்பிடிப்பை நடத்துங்கள்" என்று பளிச்சென்ற புன்னகையுடன் நக்மாவே சொல்லிவிட்டார். நடந்தது ஊடலா, உண்மையான கோபமா? என்று தெரியாமல் படப்பிடிப்புக் குழுவினர் தலையைப் பிய்த்துக் கொண்டனர்.

# மலைச்சாமியாக நாசர்

'மகளிர் மட்டும்', 'அவதாரம்', 'அருவா வேலு' போன்ற படங்களில் கதாநாயகனாக நடித்தவர் நாசர்.

தற்போது 'மலைச்சாமி' என்னும் புதிய படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார்.

நாசரின் ஜோடியாக நடிப்பவர் 'ஆசை' பட நாயகி சுவலட்சுமி.

சரண்ராஜ், வடிவேலு, ஜெய்கணேஷ் மலையாள நடிகர் அப்துல் கரீம் ஆகியோரும் நடிக்கின்றனர்.

கதை, வசனம், இயக்கம் பாரதிமோகன், 'ரயிலுக்கு நேரமாச்சு', 'ஒரு தொட்டில் சபதம்' ஆகிய படங்களை இயக்கியவர். இசை; தேவா.

# கமலின் பரிசு

'இந்தியன்' பட வெற்றியால் மகிழ்ச்சியில் இருக்கிறார் கமல். தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள எம்.ஜி.ஆர். ஸ்டைலில் ஒரு காரியம் செய்திருக்கிறார்.

'இந்தியன்' படத்தில் பணியாற்றிய படப்பிடிப்புக் குழுவினர் நூறு பேருக்கு கைக் கடிகாரங்கள் பரிசளித்திருக்கிறார்.

கடிகாரத்தின் உள்ளே 'இந்தியன்' பட தாத்தாவின் வரைபடம் பொறிக்கப்பட்டுள்ளது.

# வினோ... ஊர்...

இந்திய கிரிக்... காம்ளிக்கும், நடி... இடையே கடந்த ... நெருக்கம் ஏற்பட்...

வினோத் கா... ஊர்மிளா. அதனை... லும் ஊர்மிளாவே ... பத்திரிகைப்...



# ஆச்சியின் கவலை

தேர்தல் பிரசாரத்தில் ரஜினியை ஒருபிடி பிடித்தாரல்லவா மனோரமா. இப்போது அதற்காக வருந்திக்கொண்டிருக்கிறார்.

ரஜினியை நேரில் சந்தித்து மன்னிப்புக் கேட்க தூது பல விட்டாராம் ஆச்சி. தொலைபேசி வழியாகவும் முயன்றாராம். ரஜினி மசியவேயில்லை.

"நான் ஆச்சியின் ரசிகன். அவங்க மேல மதிப்பு வைத்திருந்தேன். தேர்தல் பிரசாரத்தில் என் சொந்த விஷயத்தை இழுத்தாங்க. அது பெரிய தவறு. அதை எப்படி மன்னிக்க முடியும்?" என்று ஆச்சிக்காக தூது போனவர்களிடம் கேட்டாராம் ரஜினி.



ஊர்மிளா

# காதோடு சொல்லுகிறோம்

பிரபல தொழிலதிபர்கள் சினிமா நட்சத்திரங்களை வளைத்துப் பிடிப்பது சகஜமான சமாச்சாரம். தமிழ்நாட்டில் உள்ள தேக்குமர வியாபார கோடீஸ்வரர் ஒருவர் 'மீன்' நடிகையை வளைத்துள்ளாராம்.

கவர்ச்சி நடிகைகளின் மவுசு குறைந்த பின்னர் நடனக்குழு ஆரம்பித்தார் விசித்திரமான நடிகை. இப்போது துபாய் போன்ற நாடுகளில் நடிகையின் கலைச் சேவைக்கு கடும் கிராக்கியாம். மாதத்தில் இருபது நாட்கள் வெளிநாட்டு பயணத்தில்தான் இருக்கிறார். வருமானம் நன்று.

பிரபல இசையமைப்பாளர் ஒருவரிடம் வாய்ப்புக் கேட்டுப் போனாராம் ஒரு இளம் பாடகி. இசையமைப்பாளரோ 'ஆத்தாடி என்ன உடம்பு' (அது அவர் இசையமைத்த பாடல் அல்ல) என்று பாடாத குறையாக கைநீட்டினாராம். ஆளைவிட்டால் போதும் என்று தப்பி வந்துவிட்டாராம் பாடகி.

'சிவ' என்று பெயர் ஆரம்பிக்கும் நடிகைக்கு மீண்டும் தமிழ்ப்பட உலகின்மீது விருப்பம் வந்துவிட்டது. பிறமொழிப் படங்களுக்காக பெயரை மாற்றிக் கொண்டு நடித்தவர் அவர். இப்போதெல்லாம் தமிழ்ப்பட இயக்குநர்கள் சிலரோடு காணப்படுகிறாராம் நடிகை. தமிழ்ப்பட உலகின் பக்கம் கவனம் திரும்பியதற்கு அதுவும் ஒரு அடையாளம்தானே!

வளர்ந்துவரும் அந்த இளம் நடிகர் அடிக்கடி காணாமல் போய்விடுகிறாராம். 'ஹீர' நடிகை அழைத்தால் உடனே பறந்துவிடுகிறார் நடிகர். வளரும்போது இப்படி வழுக்கிப் போகலாமோ?" என்று அனுதாபப்படுகிறார்கள் சிலர்.

# வாய்மையே வெல்லும்

'ஆணழகன்' படத்தை தயாரித்த எஸ்.பி.பிலிம்ஸ் புதிதாக தயாரிக்கும் படம் 'வாய்மையே வெல்லும்'.

பார்த்திபன் கதாநாயகனாக நடிக்கிறார். 'பூவரசன்' படத்தில் நடித்த ரக்ஷனா ஜோடியாக நடிக்கிறார்.

கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குபவர் பி.வாசு. பாடல்கள் வாலி. இசை; தேவா.

புதிதாக நான்கு வில்லன்கள் அறிமுகமாகிறார்கள். மணிவண்ணன், வடிவேலு, விசு, வெண்ணிற ஆடை நிர்மலா ஆகியோரும் நடிக்கின்றனர்.

# மணிக்கு 45 இலட்சம்

கவுண்டமணி ஒரு படத்தில் நடிக்க கேட்கும் சம்பளம் 45 இலட்சம்.

சம்பளத்தை குறைக்க பிடிவாதமாக மறுப்பதோடு படப்பிடிப்புக்கும் உரிய நேரத்தில் ஆஜராவதில்லை. ஒரே சமயத்தில் பல படங்களில் நடித்துக் கொண்டிருப்பதால் தான் குழப்பம்.

இதனால் வெறுத்துப் போன தயாரிப்பாளர்கள் மணிவண்ணனை நாடியிருக்கிறார்கள்.

கவுண்டமணிக்கு பதிலாக பத்துப் படங்களில் புதிதாக ஒப்பந்தமாகியுள்ளார் மணிவண்ணன்.



விஜயகாந்த்
படம் அலெக்ஸாண்டர்

# சினிவிசிட்

வைத்து விசாரித்து குற்றவாளியைக் கண்டுபிடித்து ... பெரும் புள்ளி. அவரை எப்படி சட்டத்தின் பிடியில் ... தான் 'அலெக்சாண்டர்' படத்தின் கதை.

படப்பிடிப்பு வேகமாக நடந்து வருகிறது. விஜ... கிறார். பிரகாஷ்ராஜ், மணிவண்ணன் ஆகியோரும் ...

ஆயிரம் விமானப் பயணிகள் மத்தியில் விமான... சண்டைக் காட்சியும் படமாக்கப்பட்டுள்ளது.

விமானநி...
ஊரையே உலு...

# மொழி மாறும் புதிய படம்

'வம்ஷானி கொக்கடு' என்ற பெயரில் பாலகிருஷ்ணா, ரம்யா கிருஷ்ணன், ஆம்னி நடித்த தெலுங்குப்படம் ஆந்திர மாநிலத்தில் பெரும் வெற்றி பெறவே, அதைத் தமிழில் மொழி மாற்றம் செய்கிறார்கள். இந்த மொழிமாற்றுப் படத்தைத் தமிழில் தயாரிப்பவர் அனிதா கிருஷ்ணா என்பவர்.

தமிழில் 'நான் உங்க வீட்டுப்பிள்ளை' என்ற பெயரில் தயாராகும் இப்படத்தில் பாலகிருஷ்ணா, ரம்யா கிருஷ்ணன், ஆம்னியுடன் சரத் நாராயணா, ஸ்ரீனிவாசராவ், ஜெயந்தி, ராக்கி ஆகியோர் நடித்துள்ளனர்.

# தினமும் என்னைக் கவனி

விஜயகாந்தின் நண்பரும், படத் தயாரிப்பாளருமான இப்ராஹிம் ராவுத்தர் தயாரிக்கும் புதிய படத்திற்கு 'தினமும் என்னைக் கவனி' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

ராம்கி, பிரகாஷ்ராஜ், வடிவேலு ஆகியோர் முக்கிய வேடத்தில் நடிக்கின்றனர். கதாநாயகிக்கான தேர்வு நடந்து வருகிறது.

கதை, திரைக்கதை எழுதி இயக்குகிறார் ஏ.ஆர்.ரமேஷ்.

குடும்பக் கதையை மையமாக வைத்துத் தயாரிக்கப்படும் இப்படத்திற்கு ராமதாஸ் வசனம் எழுத சிற்பி இசையமைக்கிறார்.

# பிரபுதேவ...

கிடு கிடுவென்று புகழேணியின் உச்சத்தில் ஏறியவர் பிரபு தேவா. சென்ற ஆண்டு இதே தேதியில் பரபரப்பாகப் பேசப்பட்டவர். இப்போது பிர... வில்லை.

பிரபு தேவாவின் மவுசு போய்விட்டதா? இனிமேல் ... என்ற நம்பிக்கையுடன் பேசுகிறார் பிரபுதேவா.

"எனது உழைப்பு வீண் போகாது. 'காதலன்' த... படங்கள் தரவில்லை என்பது உண்மைதான். எனி... 'மின்சாரக் கனவு' படமும் என் நி... ரசிகர்கள் என்னை நடன... கொள்கின்றனர். காதல் நாயக... வர். 'ஆக்ஷன்' ஹீரோவா... ரசிகர்கள் எனது ப... றிக் கவலைப்படவில்... நேசிக்கிறார்கள். ... அடித்தளம். ... மான எதி... சற்று... இ...

# 'தாதா சாகேப் பால்கே' விருது
# தமிழ்ப் படவுலகம் கண்டனம்

இந்திய அரசின் 'தாதா சாகேப் பால்கே' விருது இந்த முறையும் சிவாஜிக்கு கிடைக்கவில்லை. கன்னட நடிகர் ராஜ்குமாருக்கு கிடைத்திருக்கிறது.

கன்னட நடிகர் ராஜ்குமார் அங்கு தமிழ் படங்கள் திரையிடப்படுவதை தடுக்க தன் ரசிகர்களை தூண்டிவிடுபவர். கர்நாடக மாநிலத்தில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு அவரது ரசிகர்களும் ஒரு காரணம்.

சிவாஜிக்கு விருது கொடுக்காமல் இருப்பதோடு, ராஜ்குமாருக்கு விருது கிடைத்திருப்பது தமிழக பத்திரிகைகளில் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் தேவகவுடா முன்னர் கர்நாடக மாநில முதல்வராக இருந்தவர். தனது மாநில மக்களைக் கவர்வதற்காக ராஜ்குமாருக்கு தாதா சாகேப் பால்கே விருதைத் தூக்கிக் கொடுத்து விட்டார் என்றும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மத்திய ஆட்சியில் தமிழக அரசியல் கட்சிகளான தி.மு.கவும், தமிழ் மாநில காங்கிரசும் செல்வாக்கான நிலையில் உள்ளன. அப்படியிருந்தும் சிவாஜிக்கு இம்முறையும் 'தாதா சாகேப் பால்கே' விருது கிடைக்கவில்லை.

சிவாஜி ஜெயலலிதாவின் சம்மந்தியாகிவிட்டதால் கலைஞர் கருணாநிதியும் கவனிக்காமல் இருந்துவிட்டாரோ என்றும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்ப் பட உலகத்தினர் பலர் சிவாஜிக்கு 'தாதா சாகேப் பால்கே' விருது வழங்கப்படாமைக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.



விஜய்-சுவாதி
படம் செல்வா



கார்த்திக்-நக்மா
படம் மேட்டுக்குடி


படிப்பகம்

www.padippakam.com

# ...த் காம்ளியுடன் காதலா?
## ...ளா பதில் சொல்கிறார்

... வீரர் வினோத்
...ஊர்மிளாவுக்கும்
... மாதங்களாக
...க்கிறது.
...பின் பரமரசிகை
... சில பேட்டிகளி
...ல்லியிருக்கிறார்.
...ட்டி ஒன்றைப்

பார்த்துவிட்டு ஊர்மிளாவுக்கு போன் செய்து பேசினாராம் வினோத் காம்ளி. 'நானும் உங்கள் ரசிகன்தான்' என்றும் ஒரு போடு போட்டிருக்கிறார்.

அதன்பின்னர் அடிக்கடி இருவரும் போனில் பேசிக்கொண்டு நட்பை வளர்த்துக்கொண்டார்கள். பின்னர் நேரில் சந்திப்புக்கள் தொடர்ந்தன.

ஏற்கெனவே வினோத் காம்ளிமீது ஏகப்பட்ட புகார்கள். கிரிக்கெட் சபை வேறு நடவடிக்கையும் எடுத்திருந்தது. அதனால் ஊர்மிளாவை சந்திப்பதை படு இரகசியமாக வைத்திருந்தார் காம்ளி. அப்படியிருந்தும் பத்திரிகையாளர்கள் மோப்பம் பிடித்து செய்தி வெளியிட்டு விட்டார்கள்.

செய்தி வெளியானதும் இருவரும் ஆடிப்போனார்கள். ஊர்மிளா உடனே ஒரு மறுப்பும் கொடுத்திருக்கிறார்.

"ஜாக்கி ஷெராப்புக்கும் எனக்கும் தொடர்பு இருப்பதாக முன்பு கூறினார்கள். பின்னர் இயக்குநர் ராம் கோபால் வர்மாவுடன் இணைத்துப் பேசினார்கள். இப்போது வினோத் காம்ளியுடன் இணைத்துப் பேசுகிறார்கள்.

"நான் பிஸியாக இருக்கிறேன். காதலிக்கவும், கும்மாளமடிக்கவும் எனக்கு எங்கே நேரம் இருக்கிறது?" என்று கேட்கிறார் ஊர்மிளா.

இப்படித்தான் முன்னரும் அசார்-சங்கீதா விவகாரத்திலும் மறுப்பறிக்கைகள் வந்தன. பின்னர் யாவும் உண்மை என்றாகியது. ஊர்மிளா-காம்ளி காதல் நீடிக்கிறதோ இல்லையோ இருவரும் நெருக்கமாக இருப்பதுமட்டும் உண்மையிலும் உண்மை என்கிறது பம்பாய் சினிமா வட்டாரம்.



# மினி-சினி

* அண்மையில் ஏ.ஆர்.ரகுமானின் தங்கை ரேகா, சிற்பியின் இசையமைப்பில் பாடலொன்றைப் பாடினார். 'புலி பொறந்த மண்ணு' படத்திற்காக தேவா இசையில் மணிமேகலை பாடலொன்றைப் பாடியுள்ளார். மணிமேகலை இசையமைப்பாளர் மரகதமணியின் தங்கை.

* குருதனபால் இயக்கத்தில் ஜெயராம் நடிக்கும் 'பெரிய இடத்து மாப்பிள்ளை' படத்தில் கௌதமி கதாநாயகியாக நடிப்பதாகச் செய்திகள் வந்தன. இப்போது அதில் மாற்றம். கௌதமிக்குப் பதில் தேவயானி அந்தப் படத்தில் நடிக்கவுள்ளார்.

* பாரதிராஜா இயக்கத்தில் விஜயகாந்த் நடித்த 'தமிழ் செல்வன்' படத்திற்கு முதலில் வைத்த பெயர் 'வாக்கப்பட்ட பூமி'. ஏனோ பின்னர் மாற்றப்பட்டது. அடுத்து பாரதிராஜா இயக்க சரத்குமார் நடிக்கவிருக்கும் படத்திற்கு இந்தப் பெயர்தான் சூட்டப்படவுள்ளதாம்.

* இந்தி நடிகர் ஜாக்கி ஷெரப் முதன் முறையாகத் தயாரித்து நடிக்கும் 'க்ரஹன்' என்ற இந்திப்படத்தில் மனிஷா கொய்ராலா கதாநாயகியாக நடிக்கிறார். வில்லனாக ரகுவரன் நடிக்கும் இப்படத்திற்கு இசையமைக்கிறார் கார்த்திக் ராஜா.

* ராஜ்கிரணிடம் உதவியாளராக இருந்தவரும் தற்போது 'புண்ணியவதி' என்ற படத்தை இயக்கி வருபவருமான சுப்புராஜ், ராஜ்கிரணின் 'மாணிக்கம்' படத்தில் நகைச்சுவை வேடத்தில் நடித்துள்ளார்.

* நீண்ட இடைவெளிக்குப் பிறகு பானுப்பிரியாவின் புதிய தமிழ்ப்படமொன்று வரவிருக்கிறது. பல வருடங்களுக்கு முன் தயாரிக்கப்பட்டு சில தடங்கல்களால் வெளிவராமல் இருந்த 'ஏழுமலையின் மகிமை' என்ற படமே வெளி வர இருக்கிறது.

* கலைப்புலி எஸ்.தாணு தயாரிக்க, பிரபுதேவா கதாநாயகனாக நடிக்கும் 'மன்மதன்' படத்தை மலையாள இயக்குநர் பிரியதர்ஷன் இயக்குவதாக இருந்தது. இப்போது 'மன்மதனை' இயக்குபவர் 'சுந்தர புருஷன்' படத்தை இயக்கிய சபாபதி.

* ஆர்.கே.செல்வமணி இயக்க, விஜயகாந்த் நடிப்பதாகவிருந்த 'மேடே' ஆங்கிலத் திரைப்படத்தைத் தற்போது தமிழில் தயாரிக்க முடிவு செய்துள்ளார்கள். விஜயகாந்தின் 125 வது படமான 'உளவுத்துறை' வெளிவந்ததும் இப்படத்தின் படப்பிடிப்புக்கள் ஆரம்பமாகும்.

* சத்யராஜ்-பிரபு இணைந்து நடித்துள்ள 'சிவசக்தி' தமிழில் வெளியாகும் அதே நாளில் தெலுங்கிலும் மொழிமாற்றப்பட்டு வெளியாகவிருக்கிறது. தெலுங்கிலும் 'சிவசக்தி' என்ற பெயரிலேயே வெளியாகிறது.

* முதன் முறையாக இந்திப் படமொன்றை இயககுகிறார் பி.வாசு. அயுப்கான் மம்தா குல்கர்ணி இணைந்து நடிக்கும் இப்படத்திற்கு 'சபல்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதில் முக்கிய வேடமொன்றில் ஜெயசித்ரா நடிக்கிறார்.

## மீண்டும் நடிக்கிறார்

தெலுங்கு நடிகர் ஒருவரை டிஸ்கோ சாந்தி திருமணம் செய்தார். ஓரிரு மாதம் திரையுலகில் இருந்து ஒதுங்கியிருந்தார். இப்போது மீண்டும் நடிக்கத் தொடங்கிவிட்டார்.

கன்னடத்தில் ராம்குமார்-அபூர்வா ஜோடியாக நடித்து வரும் 'காயா' என்ற படத்திலேயே டிஸ்கோ சாந்தி நடித்து வருகிறார். வேமகால் ஜகந்நாத் என்பவர் இயக்கும் இப்படம் விரைவில் கன்னடத்தில் வெளியாகவுள்ளது.

## தெலுங்கில் கஸ்தூரி

'இந்தியன்' வெற்றியால் தமிழில் பெரிய திருப்புமுனை எதுவும் ஏற்படாததால் தெலுங்கு, கன்னடப்படங்களில் கவனம் செலுத்திவருகிறார் கஸ்தூரி.

தெலுங்கில் நடிகர் கிருஷ்ணா தயாரித்து நடிக்கும் 'ரெண்டு குடும்பக் கதா' படத்தில் கிருஷ்ணாவுக்கு ஜோடியாக நடித்து வருகிறார் கஸ்தூரி. இன்னொரு கதாநாயகி ஸ்ரீசாந்தி. இவர்களுடன் சுரேஷ், ரஞ்சிதா ஆகியோரும் நடிக்கின்றனர்.

## தமிழில் தயாராகும் 'கிலுக்கம்'

பிரசாந்த் நடிப்பில் கேயார் இயக்கத்தில் ஆஸ்கார் மூவிஸ் நிறுவனம் தயாரிக்கும் புதிய படம் 'காதல் ரோஜா'. இப்படம் சில வருடங்களுக்குமுன் மலையாளத்தில் பிரியதர்ஷன் இயக்கத்தில் மோகன்லால்-ரேவதி நடித்து பெரு வெற்றி பெற்ற 'கிலுக்கம்' படத்தின் தமிழ்ப்பதிப்பு ஆகும்.



## முகப்பில்

கார்த்திக்
படம்:- பூவரசன்

விஜய்
சுவாதி

## ...லயத்தில் மோதல்

...ம் விதத்தில் ஒரு கொலை நடை...பெறுகிறது. அந்தக் கொலையின் பின்னணியைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு விஜயகாந்திடம் ஒப்படைக்கப்படுகிறது.

சின்னத் தடயம் ஒன்று விஜயகாந்திடம் மாட்டுகிறது. அதனை ...கிறார். ஆனால் குற்றவாளியோ ...வைக்கிறார் விஜயகாந்த் என்பது ...

...ந்த் ஜோடியாக சங்கீதா நடிக்...க்கின்றனர்.

...லையத்தில் நடப்பது போன்ற...

## ...வின் உறுதி

...வா பற்றிப் பேச்சையே காண...

...ால் எழ முடியாதா? முடியும்...

... சூப்பர் வெற்றியை மற்றப் ... 'மிஸ்டர் ரோமியோ'வும் ...யை மாற்றும்.

... கலைஞராகவும் ஏற்றுக் ...கவும் ஏற்றுக் கொள்கின்ற ... ஏற்றுக் கொள்கின்றனர். ...ளின் வெற்றி தோல்வி பற் ... அவர்கள் பிரபு தேவாவை ... வளர்ச்சிக்கு அவர்களே ...க்கு நிச்சயமாக பிரகாச...லம் இருக்கிறது" என்று ...கலங்காமல் சொல்லி...றார் பிரபு தேவா.

## மாறிவிட்டார் ரஜினி

"எனக்குக் கறுப்புக்கலர் என்றால் சொல்ல முடியாத இஷ்டம். அது எந்தவிதமான ஆடையானாலும் கறுப்புக் கலரில் இருந்தால் மனதிற்கு இதமாக இருக்கும். ஆனால் சமீபகாலமாக என் மனைவி மற்றும் நண்பர்கள் சிலர் வெள்ளையான ஜிப்பா-குர்தாக்களை அணியும்படி சொல்வதால் தற்போது வெள்ளைக்கு மாறி விட்டேன். எந்த விழாக்களுக்காவது சென்றால் வெள்ளை உடையிலேயே ஆஜராகிறேன்.

பெண்களைப் பொறுத்தவரை பட்டுப்புடவைதான் மங்களகரமாக இருக்கும். ஆனால் தற்போதைய பெண்கள் சல்வார் கமீஸிற்கு மாறிவிட்டார்கள். என் மனைவி லதா கூட சல்வார் கமீஸ்தான் அணிகிறார் என்னும் போது வேறு என்ன சொல்ல வேண்டும்", என்கிறார் ரஜினி.

## மறுபடியும் அஞ்சு

குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி, 'கேளடி கண்மணி' மூலம் கதாநாயகியானவர் அஞ்சு. தமிழில் எதிர்பார்த்தளவு வாய்ப்புக்கள் கிடைக்காததால் மலையாளப் பக்கம் போனார். இடையிடையே தமிழிலும் தலை காட்டினார்.

சிறிது காலம் தமிழில் நடிக்கவில்லை. இந்த இடைவெளிக்குப் பின்னர் மறுபடி தமிழில் நடிக்கவுள்ளார். பாண்டியராஜன்-குஷ்பு நடிக்கும் 'கோபாலா கோபாலா' படத்தில் இரண்டாவது கதாநாயகியாக நடிக்கவிருக்கிறார்.

## விஜயசாந்தியின் 'நியூஸ்'

விஜயசாந்தி-சுரேஷ்கோபியுடன் இணைந்து நடித்துள்ள 'டெல்லி டைரி' வெளிவந்து ஓடிக்கொண்டிருக்கிறது. இதே வேளையில் விஜயசாந்தி நடிக்கும் புதிய படமொன்று தயாராகவுள்ளது.

இதில் விஜயசாந்தி பத்திரிகை நிருபராக நடிக்கிறார். படத்தின் பெயர் 'நியூஸ்'.

நாட்டில் அநியாயம், அக்கிரமங்கள் செய்பவர்களை பத்திரிகை வாயிலாக மக்களுக்கு அடையாளம் காட்டும் வேடம் விஜயசாந்திக்கு.

சரத்பாபு, விசு, வடிவேலு, லட்சுமி, அலெக்ஸ் நடிக்கும் இப்படத்திற்கு கதை, திரைக்கதை எழுதி இயக்குகிறார் அரவிந்தராஜ். லியாகத் அலிகான் வசனம் எழுத சிற்பி இசையமைக்கிறார்.

## நாகதேவதை பக்தையாக சிவரஞ்சனி

நாக சக்திக்கும், தீயசக்திக்கும் இடையே நடைபெறும் போராட்டத்தைப் பின்னணியாகக் கொண்டு தெலுங்கு மொழியில் தயாரிக்கப்பட்டு வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் படம் "அம்மா நாகம்மா."

இது தமிழில் 'நாகவள்ளி' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது.

'நாகவள்ளி' யில் கதாநாயகியாக, நாகதேவதையாக சிவரஞ்சனி நடிக்கிறார். அவரது கணவராக பிரகாஷ்ராஜும், தீயசக்தியாக, 'அம்மன்' படத்தில் நடித்த ராமிரெட்டியும் நடிக்கிறார்கள். இவர்களுடன் சில்க் சுமிதா, வை. விஜயா ஆகியோரும் நடிக்கிறார்கள்.

பாடல்களை வாலி எழுத, சீனிவாசன் இசையமைத்துள்ளார். வசனம்- மருதபரணி, தயாரிப்பவர்-எஸ். மாதேஸ்வரி.

கதை திரைக்கதை எழுதி இயக்கியவர் தெலுங்கில் இயக்குநர் சாய் பிரகாஷ்.



## புதிய வாய்ப்புக்கள்

'பூவே உனக்காக', எனக்கொரு மகன் பிறப்பான் ஆகிய படங்களில் நடித்திருக்கும் அஞ்சு அரவிந்த் ஐந்து புதிய தமிழ்ப்படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இவை தவிர கோடி ராமகிருஷ்ணா இயக்கும் தெலுங்குப் படம் ஒன்றிலும் நடித்து வருகிறார்.

## பாடிய முதல்பாட்டு

என்.கே.விஸ்வநாதன் இயக்கும் 'புருஷன் பொண்டாட்டி' படத்திற்காக சிற்பி இசையில் பாடலொன்றைப் பாடியுள்ளார் மரகதமணி. இன்னொரு இசையமைப்பாளர் இசையில் மரகதமணி பாடிய முதல் பாட்டு இதுதானாம்.

## அகப்பட்டார் அப்பா

சித்ரா லட்சுமணன் இயக்கிவரும் 'பெரியதம்பி' படத்தில் பிரபுவின் அப்பாவாக நடிக்க வித்தியாச தோற்றம் கொண்ட நடிகரைத் தேடினார்கள். கடைசியாக அகப்பட்டவர் 'தலைவாசல்' விஜய்.

## நிறைவேறும் கனவு

செண்பகா இப்போது சந்தோஷமாகக் காணப்படுகிறார். அவரது சந்தோஷத்திற்குக் காரணம் பாலுமகேந்திராவின் இயக்கத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருப்பது தானாம். ஈரோடு முருகேஷ் என்பவர் தயாரிக்க பாலுமகேந்திரா இயக்கும் 'அப்துல் ராமன்' என்ற படத்திலேயே செண்பகாவுக்குக் கதாநாயகி வேடம்.

"பாலுமகேந்திரா சார் படத்தில் நடிக்க வேண்டும் என்பது எனது நீண்ட நாள் கனவு. அந்தக் கனவு இப்போது நிறைவேறிக்கொண்டிருக்கிறது," என்கிறார் செண்பகா.

## 'லேடீஸ் ஓன்லி'யில் கமல்

'மகளிர் மட்டும்' படம் இந்தியில் 'லேடீஸ் ஓன்லி' என்ற பெயரில் கமல் தயாரிக்கிறார் என்பது தெரிந்த செய்தி.

'லேடீஸ் ஒன்லி'யில் ரவீனா ராண்டன், ரேணுகா சஹானி, 'பண்டிட் குயின்' புகழ் சீமா பிஸ்வாஸ் ஆகியோர் ரேவதி, ஊர்வசி, ரோஹினி நடித்த வேடங்களில் நடிக்கிறார்கள்.

நாசர் நடித்த வேடத்தில் நடிக்கவிருப்பவர் ரந்தீர்கபூர். இப்படத்தில் கமலும் நடிக்கவிருக்கிறார். பிணமாக நாகேஷ் நடித்த வேடத்திலேயே இந்தியில் கமல் நடிக்கிறார்.

இந்தப் படத்திற்கு இசையமைப்பவர் இந்தி இசையமைப்பாளரான அனுமாலிக்.



படிப்பகம்

# உங்கள் எண் எது? குணத்தைக் கண்டறியலாம்!

ஒருவருடைய பிறந்த நாள் எண்ணைக் கொண்டு அவருடைய குணத்தைக் கணிக்க முடியும். இதில் இரண்டு முறைகள் கடைப் பிடிக்கப்படுகின்றன. பிறந்த திகதிக்குரிய எண்ணை மட்டும் எடுத்துக்கொள்வதுண்டு. பிறந்ததிகதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வரும் எண்களை எடுத்துக்கொள்வதும் உண்டு. இதில் இரண்டாவது முறையையே எடுத்துக்கொள்ள வேண்டும். ஒருவர் பிறந்த திகதி 04.10.1950 என்று வைத்துக் கொள்வோம். இதிலுள்ள எண்களின் மொத்தக் கூட்டுத்தொகை 20 ஆகிறது. அதை ஒற்றைப் படை எண்ணாக்கினால்-2. இவ்வாறு கணக்கிடும் போது எல்லோருடையதுமே 1 முதல் 9 வரை உள்ள எண்களில் ஏதாவது ஒரு எண்ணாகவே இருக்கும். 01 முதல் 07 வரையிலான எண்களின் பலன்களை கடந்த இரு வார முரசுகளில் பார்த்திருப்பீர்கள். ஏனைய எண்களின் பலன்கள் இதோ:



## எண் – 08

வாழ்க்கையில் வெற்றியும், புகழும் பெற வேண்டும் என்பதற்குப் பாடுபடுபவர்களாக இருப்பார்கள். நிறுத்தி நிதானமாகச் செய்வது இவர்களுக்குப் பிடிக்காது. வேகமாக உயர்ந்து செல்ல வேண்டும் என்று துடிப்பார்கள். இதன் விளைவாகச் சில சமயங்களில் இவர்கள் பேராசைக்காரர்களாகவும் இருப்பதுண்டு. இதை அவர்களால் கட்டுப்படுத்திக் கொள்ளவும் முடியும். முன் கூட்டித் திட்டமிடும் பொறுமை இவர்களிடம் கிடையாது. ஒன்றை வேண்டுமென்று விரும்பினால், உடனே அதனை அடைய முற்பட்டு விடுவார்கள். பணத்தைப் பற்றிய கவலை இவர்களுக்கு எப்போதுமே இருந்து கொண்டே இருக்கும். தங்களுடைய ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் சிரமப்படுவார்கள். இன்னொருவர் தம்மை விட அதிகம் முன்னேறியிருப்பதைக் கண்டால் அதற்காக மனம் புழுங்கி, தாமும் அதுபோல் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக மேலும் பாடுபடுவார்கள். தன்னை உயர்வாகக் கருதுபவர்களுடன் பாரபட்சமாக நடந்து கொள்வார்கள். தம் கீழ் பணி செய்பவர்கள் தனக்குரிய மரியாதை தர வேண்டும் என்று விரும்புவார்கள். தம்மைப் போல முன்னேற வேண்டும் என்ற விருப்பம் இல்லாதவர்களையும் இவர்களுக்குப் பிடிக்காது. போட்டியை விரும்ப மாட்டார்கள். தன் வழியிலேயே எதுவும் நடக்க வேண்டும் என்ற விருப்பம் கொண்டவர்கள். மேலேயே கண் வைத்துக் கொண்டு நடப்பதால், பல சமயங்களில் பள்ளத்தில் விழுந்து விடுவதுண்டு.

## எண் – 09

காதலை நாடிப் போற்றுபவராக இருப்பார்கள். எதிர்பாலாருக்கு தமது நேரம் அனைத்தையும் செலவிடத்தயங்கமாட்டார்கள். பெண்களைப் பெரிதும் நேசிப்பவர்கள். வியாபாரத் துறையில் விழிப்புடன் நடந்து கொண்டு நல்ல முறையில் பணம் சேர்ப்பார்கள்.

மகிழ்ச்சி நிலவும் வீட்டுச் சூழலில் தான் இவர்களுக்கு அக்கறை அதிகம். கிடைக்கக்கூடிய நேரம் முழுவதையும் அதற்காகவே செலவிடுவார்கள். வேலை நேரம் முடிந்ததும் வெளியே சுற்றிக் கொண்டிராமல், மனைவி மக்களைக் காண வீடு சென்று விடுவர். சில பொழுதுபோக்குகளில் இவருக்குப் பெரிதும் உற்சாகம் உண்டு. எல்லோரிடமும் பெருந்தன்மையான அனுதாபத்துடன் நடந்து கொள்வார்கள். தன் அன்புக்குரியவர்களுக்கு ஏதேனும் கஷ்டம் நேர்ந்தால், தனக்கே நேர்ந்து விட்டது போல் துன்பப்படுவார்கள். அதைத் துடைப்பதற்குத் தன்னாலானதை எல்லாம் செய்வார்.

# தூங்கும் வியாதி



அளவுக்கு அதிகமாகத் தூங்குவதும் ஒரு வியாதிதான். இப்போது உலக அளவில் 30 சதவீதம் பேர் தூங்கும் வியாதியில் சிக்கி அவதிப்பட்டுக் கொண்டிருப்பதாகக் கணக்கெடுப்பு ஒன்று கூறுகிறது.

ஆண்களைப் பொறுத்தவரை 6 சதவீதம் பேரும், பெண்களைப் பொறுத்தவரை 3 சதவீதம் பேரும் தூங்கும் வியாதியால் பாதிக்கப்பட்டுள்ளனர். சரி... தூங்கும் வியாதி என்றால் என்ன என்று கேட்கிறீர்களா?

வேலை பார்க்கும் நேரங்களில் அரைத் தூக்கம் போடுவது, தூக்கத்தில் கத்துவது, தூக்கத்தில் புலம்புவது, தூக்கத்தில் எழுந்து நடப்பது, குறட்டை விடுவது, சிறிது நேரம் பஸ்ஸில் போகும்போது தூங்குவது, காலையில் நீண்ட நேரம் தூங்குவது இவையெல்லாம் தூங்கும் வியாதிகள் என்று சொல்கிறார்கள். சில தூங்கும் வியாதிக்காரர்கள் சில சமயம் பக்கத்தில் தூங்குபவரைக் கழுத்தை நெரித்தோ, கத்தியால் குத்தியோ கொன்று விடுவதுண்டு. எனவே தூங்கும் வியாதிக்காரர்களிடம் கவனமாக இருக்க வேண்டும்.

தூங்கும் வியாதிகள் உருவாக முக்கிய காரணம் என்ன தெரியுமா? வாழ்க்கை முறையில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் தான் தூங்கும் வியாதிக்கு அடிப்படை முக்கிய காரணமாகும்.

பதட்டத்துடன் வேலை பார்ப்பது, முடிவுகள் எடுப்பதில் ஏற்படும் குழப்பங்கள், பகல் நேரத்தில் தேவை இல்லாமல் தூங்குவது போன்றவை இதர காரணங்கள் ஆகும்.

எனவே தூங்கும் வியாதியை ஒழிக்க வேண்டுமானால் சில நல்ல பழக்கங்களை நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும். அவற்றில் சில:

* தினமும் ஒரே சீராகக் குறிப்பிட்ட நேரத்திற்கு எழுந்து பழக வேண்டும்.
* தூங்கப் போகும்முன் கோப்பி, தேனீர், சிகரெட் மற்றும் குளிர்பானங்கள் குடிக்கக்கூடாது. மிதமான சூட்டுடன் பால் குடிக்கலாம்.
* அதிகாலையில் ஏதாவது உடற்பயிற்சி செய்யலாம்.
* தூங்கும் முன் குளித்து விட்டுத் தூங்கலாம்.
* தினமும் குறிப்பிட்ட நேரத்தில் சமச்சீரான உணவுகளைச் சாப்பிட வேண்டும். தூங்கச் செல்லும் போது அதிகமாகச் சாப்பிடக் கூடாது.
* வலுக்கட்டாயமாகத் தூங்க நினைக்கக் கூடாது.

இத்தகைய பழக்கங்களைக் கடைப் பிடித்தால் நிச்சயமாகத் தூங்கும் வியாதியை ஒழித்துவிடலாம்.

பொதுவாக ஒவ்வொருவருடைய உடலமைப்புக்கு ஏற்ப தூக்கம் அமையும். சிலர் ஐந்து மணிநேரம் தூங்கினால் கூடப்போதும். மறுநாள் புத்துணர்ச்சியுடன் இருப்பார்கள்.

சிலர் 8 மணி நேரம்வரை தூங்கி இருப்பார்கள். என்றாலும் மறுநாள் காலையில் தூங்கி வழிவார்கள்.

எனவே உங்கள் உடல் நிலையைக் கணக்கில் கொண்டு அதற்கேற்ப தூங்கிப் பழகுங்கள். நிச்சயமாக 'தூங்கும் வியாதிகள்' உங்கள் பக்கம் வராது.

# வாரம் ஒரு இயற்கை வைத்தியம்

## வாய்வுத் தொல்லை

அனைத்து வாய்வுத் தொல்லைகளுக்கும் காரணம், மலச்சிக்கலே. வாழைக்காய், உருளைக்கிழங்கு போன்ற வாய்வுள்ள காய்கறிகள் சாப்பிடுவதால் வாய்வு ஏற்படுகிறது என்ற சொல்வழக்கு தவறானதாகும். எனவே வாய்வுத் தொல்லையில் இருந்து உண்மையாகவே நீங்க வேண்டுமானால் மலச்சிக்கல் தராத இயற்கை உணவிற்கு மாற வேண்டும். இதை விடுத்து, மருந்து, மாத்திரைகளை நம்பி, பணத்தை விரயம் செய்ய வேண்டாம்.



**காலை 5 மணி:**
மூன்று முதல் ஆறு தம்ளர் தண்ணீர் குடித்தல்.

**காலை 6 மணி:**
அறுகம்புல்சாறு, எலுமிச்சம்பழச் சாறு ஏதேனும் ஒன்று அருந்தவும்.

**காலை 9 மணி:**
வாழைப்பழம், அப்பிள் அன்னாசிப் பழம் ஆகியவற்றை உண்ணலாம்.

**மதியம் 1 மணி:**
பசுங்காய்கறிக் கலவையும், பழங்களும் உண்ணலாம். இல்லையேல் இனிப்பு, கார அவல் உண்ணலாம்.

**மாலை 4 மணி:**
திராட்சைப்பழச் சாறு, தேன் கலந்த எலுமிச்சைப்பழச்சாறு, தேங்காய்ப்பால் ஏதேனும் ஒன்று அருந்தலாம்.

**இரவு 7 மணி:**
தேங்காயும், பழங்களும் உண்ணலாம்.

**பொது:**
நோய் குணமாகும் வரை நாள்தோறும் எனிமா, இடுப்புக்குளியல் எடுத்தல் அவசியம். யோகாசனங்கள் செய்வது நல்லது. இடையிடையே உண்ணாநோன்பு கொள்வது உத்தமம். சுமார் ஒரு மாதத்தில் நல்ல பலன் காணலாம். எந்த நோய் நீங்கவும் நீங்கள் இயற்கை

# லேடீஸ் ஸ்பெஷல்

உணவிற்கு மாற ஆரம்பித்து விட்டால் மருந்து, மாத்திரைகள் தேவையே இல்லை. மருந்து, மாத்திரைகளால் மேலும் ஆரோக்கியம் கெடும். பணமும் விரயமாகும்.

சுமார் ஒரு மாதத்தில் இந்நோய் குணமாகும்.

# பாதாம் பருப்புக் குளியல்

சிங்கப்பூரில் ஒரு கிலோ பாதாம் பருப்பு ஒன்பது டொலராக இருந்தது. இப்போது 11 டொலராக இருக்கிறது. பாதாம் பருப்பு விலை ஏறியதற்கு ஜெயலலிதாவும் ஒரு காரணம்.

எப்படி என்கிறீர்களா? ஆட்சியில் இருந்த போது ஜெயலலிதா வீட்டு உபயோகத்திற்காக கன்டெய்னர் கணக்கில் பாதாம் பருப்பு இறக்குமதி செய்யப்பட்டது. லாபம் வைத்து விற்பனைசெய்தது போக, உயிர்த் தோழிகள் இருவரும் பாதாம் பருப்பை அரைத்து பாலில் கலந்து உடலெங்கும் பூசிக் குளித்தார்களாம்.

பாதாம் பருப்பு உடல் அழகுக்கு மட்டுமல்ல மற்றும் சில ஆரோக்கிய விஷயங்களுக்கும் பயன்படுவதுண்டு.

# சமைப்போம் சுவைப்போம் [தொகுத்துத் தருவது-சுகந்தினி]

படித்த உடன் சூட்டோடு சூடாக வீட்டில் செய்யக்கூடிய எளிமையான சமையல் குறிப்புக்கள் இந்தவாரம் முதல் தரப்படுகின்றன. செய்து பார்த்து சுவைத்து மகிழுங்கள்.

## கத்தரிக்காய் பச்சடி

தேவையானவை:

| | |
|---|---|
| கத்தரிக்காய் | - பெரிதாக ஒன்று. |
| வற்றல் மிளகாய் | - இரண்டு |
| கடுகு | - அரைஸ்பூன். |
| உழுத்தம் பருப்பு | - 1/2 ஸ்பூன் |
| பெருங்காயம் | - சிறியதுண்டு. |
| உப்பு | - தேவையான அளவு. |
| தயிர் | - 5 கரண்டிகள். |

வேகவைத்த கத்தரிக்காயைத் தோல் உரித்து, உதிர்த்து தயிரில் போட்டு உப்புச் சேர்க்கவும். கடுகு, மிளகாய், உளுத்தம் பருப்பு, பெருங்காயம் இவற்றை தாளித்து அதில் போடவும். பச்சைக் கொத்தமல்லியையும் அதில் போடவும். கமகமவென்று பச்சடி தயார்.

# முகப் பொலிவிற்கு...



வியர்வையினால் முகத்தில் தோன்றும் வெண்மையான படிவை தக்காளிப் பழத்தை முகத்தில் தேய்ப்பதன் மூலம் போக்கலாம்.

முகத்தில் அம்மை, பருக்கள் காரணமாக ஏற்படும் கரும் நிறப் புள்ளிகளில் வெற்றிலைக் காம்பின் சாற்றைத் தினந்தோறும் தேய்த்து வந்தால் அவை மறைந்துவிடும்.

முகத்தில் அழகு சாதனப் பொருட்களால் ஏற்பட்ட சுருக்கத்தைப் போக்க குளிர்ந்த நீரில் முகம் கழுவிய பிறகு கறிவேப்பிலையுடன் கடல் சங்கையும் அரைத்து முகத்தில் தடவி வர முகச்சுருக்கங்கள் நீங்கும்.

முகம் வறட்சியாக இருக்கிறதா? எலுமிச்சைப் பழத்தின் சாற்றை முகத்தில் தடவிக் கொண்டு படுக்கவும். காலை எழுந்து முகம் கழுவவும். முகம் பளபளப்பாக இருக்கும்.

முகத்தைத் தினமும் கழுவுவதால் மட்டும் முகத்திலுள்ள அழுக்குகள் முற்றாகப் போய்விடாது. மாதம் ஒருமுறை வேப்பிலை அல்லது துளசி இலைகளை வெந்நீரில் போட்டு ஆவி பிடிக்க வேண்டும். இவ்வாறு பிடிக்க முகத்தில் உள்ள அழுக்குகள் போய்விடும்.

# என்னால் முடியும்! எப்படியும் முடியும்!!

அசத்தலான சாதனை

ஒலிம்பிக் ஜிம்னாஸ்டிக் போட்டிகளை நீங்கள் தொலைக்காட்சியில் பார்த்தீர்களா? அப்படியானால் 20 வயதிற்குட்பட்ட இளம் வீர்கள்-வீராங்கனைகள் அந்தரத்தில் கரணம் அடித்து அங்கும், இங்கும் ஓடியாடிக் குதித்து, உடலை வளைத்து, நெளித்து, முறுக்கிக் காட்டியது உங்களுக்கு நன்றாகவே தெரிந்து இருக்கும்.

சில ரஷ்ய பொடிசுகள் செய்த சாகசங்கள் மூக்கின் மேல் விரலை வைக்க வைத்தன. ஆனால் கொஞ்சம்கூடப்பயப்படாமல் மன உறுதியுடன் ஜிம்னாஸ்டிக் விளையாடியது அமெரிக்காவைச் சேர்ந்த கெர்ரி ஸ்ட்ரக் என்ற வீராங்கனைதான்.

இந்த வீராங்கனைக்கு 18 வயதுதான். இவரது மன உறுதி இதர வீரர்கள், வீராங்கனைகளிடையே இன்னமும் ஆச்சரியத்துடன் பேசப்படுகிறது.



ஜிம்னாஸ்டிக் போட்டிகளில் கலந்து கொண்ட அவர் முதல் முயற்சியின் போதே கால் தடுமாறித் தவறி விழுந்தார். இடது குதிக்கால் உடைந்து விட்டதுபோல அவர் உணர்ந்தார். வலியைத் தாங்கிக் கொள்ள முடியாமல் நொண்டியபடியே கீழே இறங்கினார்.

இதைப் பார்த்த அமெரிக்க ஜிம்னாஸ்டிக் அணியில் இடம்பெற்றிருந்த இதர வீராங்கனைகள் பதறி விட்டனர். ஓடி வந்து, "காலை நன்றாக உதறிவிடு," என்றனர்.

கெர்ரி காலை உதறிப் பார்த்தார்; கால்வலி போகவில்லை. கண் கலங்கியபடியே இருந்தார்.

அவர் கலந்து கொண்ட அணிப் போட்டியில், அமெரிக்காவுக்கு சவால் விடும் வகையில் ரஷ்ய வீராங்கனைகள், சாகசம் செய்து கொண்டிருந்தனர். இறுதியில் தங்கம் யாருக்கு என்பதை நிர்ணயிக்கும் வால்ட் பிரிவில் ஜிம்னாஸ்டிக் பயிற்சிகள் செய்து காட்ட வேண்டிய கட்டம் வந்தது.

"கால் வலியால் துடித்துக் கொண்டிருக்கும் கெர்ரி அந்தப் பயிற்சியை முழுமையாக, ஒழுங்காகச் செய்து முடித்து விட்டால் போதும்; தங்கம் உறுதியாக அமெரிக்காவுக்குத்தான்" என்ற நிலையும் உருவாகி இருந்தது. படபடப்புடன் இருந்த பயிற்சியாளர் கரோலி ஓடிவந்து, "கெர்ரி உன்னால் பயிற்சி செய்ய முடியுமா? முடிந்தால் செய்!" என்றார்.

'இதுவரை இந்த அணிப் பிரிவில் அமெரிக்கா தங்கம் வென்றதே இல்லை. ரஷ்ய வீராங்கனைகள்தான் அதில் ஆதிக்கம் செலுத்தியபடி உள்ளனர். எனவே மனது வைத்தால் முதன் முதலாக இதில் அமெரிக்காவுக்குத் தங்கம் பெற்றுக் கொடுக்க நல்ல வாய்ப்பை ஏற்படுத்த முடியும்.'

இப்படி எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்த கெர்ரியின் மனதில் திடீர் உற்சாகமும், புத்துணர்ச்சியும் ஏற்பட்டது. "என்னால் முடியும்! என்னால் முடியும்!" என்று கத்தியபடி எழுந்தார்.

கால் என்ன ஆனாலும் பரவாயில்லை என்று மனதில் உறுதியை ஏற்படுத்திக் கொண்டார். பிறகு ஓடிக் குதித்து எழுந்து அந்தரத்தில் சுழன்று 'டைவ்' அடித்து வந்து சரியாக நின்றார்.

இதனால் அமெரிக்காவுக்குத் தங்கம் கிடைத்தது.

இதைத் தெரிந்து கொண்ட மறுநிமிடம், காலைப் பிடித்துக் கொண்டு அழுதபடி கெர்ரி கீழே சாய்ந்தார். ஸ்கேன் செய்து பார்த்தபோது, அவர் கால் எழும்பு முறிந்து இருந்தது தெரியவந்தது.

உடனடியாகக் கட்டுப்போட்டுச் சிகிச்சை அளித்தனர். அவர் பரிசு பெற வந்தபோது கூட பயிற்சியாளர்தான் தூக்கிக் கொண்டு வந்தார்.

இவரது மன உறுதி அமெரிக்கர்களிடையே ஆரவாரத்தை ஏற்படுத்தி உள்ளது. இதனால் அவரை வாழ்த்தி ஏராளமான பரிசுப் பொருட்களை அனுப்பிக் கொண்டிருக்கின்றனர்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** AG

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 14-09-1996

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## பொகவந்தலாவ வாசகிக்கு அதிஷ்டம்

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**வி. லோகேஸ்வரி**
கொட்டியாக்கொலை லோவர் டிவிசன்,
பொகவந்தலாவ.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

பரிசு பெற்றவர்



கே. மெற்றில்டா
திரௌபதை அம்மன் கோயில் முன்வீதி,
பாண்டிருப்பு-02, கல்முனை.

பட்டுச்சேலைப் பரிசுப் போட்டிப் பரிசு வென்ற அதிர்ஷ்டசாலிகளுள் ஒருவர்



படிப்பகம்

# தேன் கிண்ணம்

## குறிஞ்சி நிலத்தில் கொடி பறக்கும் வரை

நாளை நாம் சேரலாம்
என்ற நம்பிக்கை(ச்) சொட்டு
என் விழியோரங்களில்
ஒண்டியிருக்கிறது.
-o-
குறிஞ்சி 'வயலில்' மலர்ந்த
ஆகாயத் தாமரையே...!
உன் நீல விழிகளில்
ஏனிந்த நீர்த்திவலைகள்..?
-o-
காலை மலரின்
பனித்துளிப் பொட்டுப்போல...
உன்
விழிமலரின்,
இமை இதழ்களில்
ஏன் ஒரு கண்ணீர் விலாசம்...?
-o-
என் விரல் இடுக்குகளில்-
பேனா முனையில்..
உன் நினைவுகள் சுமக்கப்படுகின்றன.
-o-
காலம் பொல்லாததுதான்...!
நீளங்களில் விசாலமானது...!
இருப்பினும்; அதன் பாதை முழுவதும்
நாம் நடந்துதானே ஆக வேண்டும்-
கால் கடுக்க...!
-o-
இந்தத் தேசத்தோடு ஜனித்த
சோகம் போல...
நம் ஜீவனோடு ஜனித்தது வெறுமை!
தென்றல் தாலாட்டும்
குறிஞ்சி மலரே...!
நெருஞ்சி முட்களில்தானே
நம் வாழ்க்கைச் சேலை
நெய்யப்பட்டிருக்கிறது...!
-o-
கொழுந்து பறித்து
சிவந்து போன
உன் விரல் நுனிகளும்...
எழுதி, எழுதி தேய்ந்து போன
என் பேனா முனையும்...
ஒரு சரித்திரம் சிருஷ்டிக்காதா...
என்ன...?
-o-
நீ காத்திரு...!
எனக்கும் விலங்கிடப்படாமலிருந்தால்
உன் வாழ்க்கையோடு
கலக்க வருகிறேன்...!

சிந்தனைப்பித்தன்.

## இனி முடிவுரை...

அந்தச் சூரியன்
க(ள)லங்கப்பட்டுப்போனது;
ஏழு வானங்களும்
ஒரு கணம்
நடு நடுங்கிப் போயின!
-o-
பிரிவைச்
சுமக்க முடியாத-என்
ஒப்பாரியின்
ஓலம் கேட்டு,
விதி கூட
அதிர்ந்து போனது;
அது வரைந்த
தீர்ப்புக்காக
வெட்கப்பட்டுத்
தலை குனிந்து கொண்டது!
-o-
துடித்துத் துடித்துச்
சாவதற்காகவா
உன்னைக்
காதலித்தேன்?
-o-
நுரைத்து நுரைத்துப்
பொங்கிப் பிரவகிக்கும்
நினைவுகளையும்
கண்ணீரையும்
கட்டுப் படுத்த முனைந்து
தோற்றுப் போனேன்!
-o-
விக்கித்து அழுவதிலும்
விழி நீரைத் துடைப்பதிலும்
எத்தனையோ இரவுகளின்
தூக்கத்தைத்
தொலைத்து விட்டேன்!
-o-
என் இளைய வாழ்வில்
கீதங்களுடன்
தவழ்ந்து வந்த வசந்தம்,
சோகங்களின் பின்னால்
பதுங்கி
வாய் மூடிக் கொண்டது!
-o-
உனை மறக்க நினைத்து
எனக்குள்ளே
மாபெரும் போராட்டங்கள்
நிகழ்த்தப்பட்ட போதும்,
இரத்தக் கண்ணீர்ச்
சேற்றில் தான்
ஒவ்வொரு முறையும்
தத்தளித்து மீண்டேன்!
-o-
என் வாழ்வு சுமக்கும்
கண்ணீரின் ஈரம்
உன் மனச் சாட்சிக்கு
மாபெரும் பாரமாகலாம்!
-o-
உயிரில் எழுதப்பட்டுள்ள
உன் நினைவுகளை
மறக்க வேண்டுமானால்
சத்தியமாக நான்
செத்தேயாக வேண்டும்!
-o-
வானம் பூமியாவும்
விக்கித்து நிற்க
உரத்துக் கதறுகிறேன்:
"உயிரானவளைச்
சிறிது சிறிதாகச்
சித்திரவதை செய்து
சீவனை உறிஞ்சித்
துப்பிக் கொண்டிருக்கும்
துரோகி நீ!"
-o-

செல்வி பஹீமா ஜஹான்-
மெல்சிரிபுர.

## சூரிய விழுகைகள்

சூரியன் விழுந்துவிட்டதாம்!
அந்தி வானை நோக்கி
மனிதர்கள் ஓடுகிறார்கள்!
நின்றவர்கள்
நின்றபடியே ஓடுகிறார்கள்!
சூரியன் விழுந்துவிட்டதாம்;
படைத்தவனே கைசலித்த நிலை!
•••
மேற்கு எல்லைக்கு ஓடியவர்கள்
திரும்பி ஓடுகிறார்கள்!
கருகிவிட்ட தேன் கூட்டில்
உருக்குலைந்த மனிதங்களை
சிலர்
தேடி எடுத்துப் போகிறார்கள்!
சிதறிப் பறந்த சடலங்களை
சிலர்
பொறுக்கி எடுத்துப் போகிறார்கள்!
காயப் பட்டுத் துடிப்பவர்களையும்
காப்பாற்றிவிட வேண்டுமென்று
கங்கணப்பட்டுக்கொண்டு
மனிதர்கள் திரும்பி ஓடுகிறார்கள்!
•••
வாகனக் குற்றிகள்
தடங்கிக் கிடந்த வீதிகளை
அவலக் குரல்களால்
சல்லடைபோட்டுப் போகிறார்கள்;
உயிர் பிடித்துக் கொடுப்பதற்காக!
•••
சூரியன் விழுந்துவிட்டதாம்!
ஓடிய ரயிலுக்குள்
சகோதர மனிதன் யாரோ
மரணசாதனத்தை முடுக்கி
விட்டதால்
சூரியன் விழுந்துவிட்டதாம்!
•••
வானம் வெறுமையாகிப்
போனது;
நட்சத்திரங்கள் அச்சத்தால்
ஒளிந்துகொண்டன!
சேமிக்க வெட்டிய
மின்சாரம் கூட
துணைக்கு வரவில்லை!
சூரியத் துண்டங்கள்
தெரியாமற் போனதில்
தெற்கத்தி வீடுகளில்
விழி நீர் வெள்ளம்!
இனி விடிந்தாலும்
சூரியன் வருமா,,?
•••

மாவை-வரோதயன்.

## அணைப்பதெப்போ?

விழிக்குள் மெதுவாய்ப் படம்பிடித்து-வான்
வெளியில் என்னைப் பறக்கவிட்டாய்!
மொழிக்குள் அடங்காக் கவியாகி-ஆழ்
மனதில் மல்லிகை பூக்கவைத்தாய்!
***
பத்து விரலால் முகம்மறைத்து-என்
பலத்தை யொடித்துச் சிறைபிடித்தாய்!
தத்திச் சுழலும் கயல்விழியால்-என்
தலைமுதல் கால்வரை கிறங்கவைத்தாய்!
***
உதிர்க்கும் மொழிகள் ஒவ்வொன்றும்-என்
உள்ளம் தழுவிச் செல்லுதடி!
குதித்து மகிழ்ந்து கூத்தாடி-இந்தக்
குவலயத்தை அது வெல்லுதடி!
***
ஆசை மனது உறங்காது-உன்
அணைப் பாலன்றி அடங்காது!
பூசை மலரே புதுநிலவே-எனைப்
புரிந்து துணிந்து அணைப்பதெப்போ?

-க.கோணேஸ்வரன்-

## ஏன் எதிரிக்கு!

'கஸ்ம்'

என்
அன்புக்குரிய
எதிரிக்கு,
அன்பு மட்டுமல்ல,
அகங்காரம்கூட
அதிகம்தான்!
*
உன் தலைக்குமட்டும்
சொந்த மானதல்ல,
என்
மனதுக்கும்தான்!
*
என் பயம்
தோட்டாவுக்கல்ல,
உன் 'நா'வுக்கு- அது
உதிர்க்கும்
வார்த்தைக்கு!
*
கள்ள விழியும்,
கனி மொழியும்,
காதில் விழ
சங்ககாலமல்ல-இது
லஞ்சகாலம்!
*
இந்தப் பிரபஞ்சத்திலே
லஞ்சம் கொடுக்க
முடியாதது-உன்
"நா"
ஒன்றுக்குத்தான்!
*
உன்
அன்பளிப்பு
அன்பு வார்த்தையல்ல;
இன்ப எச்சரிக்கை!
தொடரப்போகும்
பனிப் போருக்கான
வெள்ளோட்டம்!!
*
என்
சிந்தனை
மழுங்கடிக்கப்பட்டது,
செயல்
வடிவம் பெறாதது,
தூக்கம்
இழந்ததுங்கூட
உன்னால்தானே?
சொல்.....
நீதானே என்முதல்
எதிரி?

சு.உத்திரன்-பம்பலப்பிட்டி.

## அந்தநாள் ஞாபகம்

இங்குள்ள படங்களில் இருக்கும் நடிகரை உடனடியாக அடையாளம் காண்பது கஷ்டமாக இருக்கிறதல்லவா. மக்கள் திலகம் என்று பெயரெடுத்து, திரையில் முடிசூடா மன்னனாக இருந்த எம்.ஜி.ஆரின் ஆரம்பகாலப் படங்கள் இவை. இப்படங்களில் எல்லாம் சிறிய வேடங்களில் நடித்து பல தடைகளைத் தாண்டித்தான் பின்னாளில் கதாநாயகனாக வெற்றி உலாவந்தார் எம்.ஜி.ஆர்.


'தாசிப்பெண்' படத்தில் எம்.ஜி.ஆர். சந்தானலஷ்மியுடன்


எம்.ஜி.ஆர்


'இயேசு நாதராக' மக்கள் திலகம்


'சதிலீலாவதி'யில்


'மந்திரி குமாரி'யில் எம்.ஜி.ஆர்., நம்பியார், சிவசூரியன்

## இந்த வாரம் உங்கள் பலன்

( 08.09.96 தொடக்கம் 14.09.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, தொழில் விருத்தி. | பகல் 12 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 6 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, பணச் செலவு. | பி.ப. 1 | மணி |
| புதன்- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 | மணி |
| வியாழன்- வீண் முயற்சி, மனக் கலக்கம். | பி.ப. 3 | மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, தொழில் மந்தம். | காலை 7 | மணி |
| சனி- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 1 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, பண வரவு. | காலை 7 | மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனக் கசப்பு. | பகல் 12 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, கௌரவம். | காலை 7 | மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 | மணி |
| வெள்ளி- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | காலை 7 | மணி |
| சனி- பொருள் வரவு, சுபகாரிய மகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், இனசன நன்மை. | பி.ப. 2 | மணி |
| திங்கள்- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 7 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பிரயாணம், கௌரவம். | பி.ப. 3 | மணி |
| புதன்- தொழில் நன்மை, பணச் செலவு. | காலை 8 | மணி |
| வியாழன்- இனசன மகிழ்ச்சி, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, முயற்சியில் வெற்றி. | மு.ப. 9 | மணி |
| சனி- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், மனக்குறை நீங்கும். | பி.ப. 2 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 8 | மணி |
| செவ்வாய்- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பி.ப. 2 | மணி |
| புதன்- துன்ப மிகுதி, தேககம் பாதிப்பு. | காலை 7 | மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, பண வரவு. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | காலை 7 | மணி |
| சனி- பண வரவு, காரியானுகூலம். | பி.ப. 1 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், முயற்சி பலிதம். | பி.ப. 2 | மணி |
| திங்கள்- வீண் குறை கேட்டல், மனக் கலக்கம். | மு.ப. 9 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பண வரவு. | காலை 8 | மணி |
| புதன்- உயர்ந்த நிலை, தேகசுக நன்மை. | காலை 10 | மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், பணக் கஷ்டம். | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- இனசன விரோதம், தொழில் இலாபம். | மு.ப. 9 | மணி |
| சனி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| சிம்மம் | - சூரியன், புதன். |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |
| மிதுனம் | - செவ்வாய், வெள்ளி. |

சுபநேரம் புதிய நேரப்படி கணிக்கப்படுகிறது

★ சந்திரன்- கர்க்கடகம், சிம்மம், கன்னி ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, முயற்சி பலிதம். | பகல் 12 | மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், பணச் செலவு. | காலை 8 | மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, கௌரவம். | பி.ப. 2 | மணி |
| புதன்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | காலை 7 | மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, பண வரவு. | பகல் 12 | மணி |
| வெள்ளி- சுபகாரிய மகிழ்ச்சி, செலவு மிகுதி. | காலை 8 | மணி |
| சனி- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-2

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 | மணி |
| திங்கள்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | காலை 7 | மணி |
| செவ்வாய்- பிரயாணக் கஷ்டம், செலவு மிகுதி. | பகல் 12 | மணி |
| புதன் - அந்நியர் சகவாசம், பயனுள்ள செயல். | பி.ப. 2 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | காலை 7 | மணி |
| வெள்ளி- மனக் கலக்கம், கௌரவ மிகுதி. | பகல் 12 | மணி |
| சனி- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, இனசன நன்மை. | பகல் 12 | மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், உயர்ந்த வாழ்க்கை. | மு.ப. 9 | மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, எதிர்பார்த்த நன்மை. | பி.ப. 1 | மணி |
| புதன்- வீண் தொல்லை, முயற்சி பலிதம். | காலை 7 | மணி |
| வியாழன்- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- கடன் தொல்லை நீங்கும், கௌரவம். | பகல் 12 | மணி |
| சனி- முயற்சி பலிதம், அந்நியர் உதவி. | காலை 7 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பி.ப. 2 | மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், மனக் கவலை. | காலை 8 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | பகல் 12 | மணி |
| புதன்- இனசன நன்மை, கௌரவம். | மு.ப. 9 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- கடன் தொல்லை, கௌரவக் குறைவு. | காலை 7 | மணி |
| சனி- வீண் குறை கேட்டல், பணக் கஷ்டம். | பி.ப. 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, பண வரவு. | பி.ப. 3 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, கௌரவம். | மு.ப. 9 | மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |
| புதன்- உயர்ந்த நிலை, புதிய முயற்சி. | காலை 6 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, மனக் கலக்கம். | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- செலவு மிகுதி, கடன் படல். | காலை 7 | மணி |
| சனி- பிரயாண நன்மை, தேகசுகம் பாதிப்பு. | காலை 7 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-3

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், முயற்சித் தடை. | பி.ப. 2 | மணி |
| திங்கள்- பிரயாண மிகுதி, கௌரவம். | காலை 7 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, பண வரவு. | பி.ப. 2 | மணி |
| புதன்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 6 | மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | மு.ப. 9 | மணி |
| சனி- பயனுள்ள செயல், மன விரக்தி. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 | மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பகல் 12 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், புதிய முயற்சி. | பி.ப. 2 | மணி |
| புதன்- பயனுள்ள செயல், மனக் கலக்கம். | காலை 7 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, செலவு மிகுதி. | பகல் 12 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, கடன் படல். | பி.ப. 2 | மணி |
| சனி- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 3 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com





## ஒற்றுமையாய் ஆடுவோம்



துள்ளித் துள்ளி பாயுமாம்
துடுப் பெடுத்து ஆடலாம்
அல்லிப் பூவைப் போலவாம்
அடித்து விட ஓடுமாம்!

பாலைப் போல வெள்ளையாம்
பஞ்சைப் போல மென்மையாம்
தோலில் செய்த பந்திது
தந்தை தந்த பந்திது!

பூமிப் பொம்மை போலவே
பந்தும் வட்டம் ஆனது;
நாமிப் போது ஆடுவோம்
நண்பர் நால்வர் கூடுவோம்!

முற்றத்திலே ஆடுவோம்
முறை வகுத்து ஆடுவோம்
ஒற்றுமையாய் ஆடுவோம்
எந்த நாளும் ஆடுவோம்!!

சிவசக்தி.

சாதிகள் இல்லையடி பாப்பா- குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாபம்!
நீதி, உயர்ந்த மதி, கல்வி-அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# புத்திசாலிக் கழுதை

ஒரு காட்டில் கழுதை தன் மனைவியுடன் வசித்து வந்தது. கழுதையின் மனைவி மிகவும் புத்திசாலி.

ஒரு நாள் ஆண் கழுதை தன் இருப்பிடத்திலிருந்து மேய்ச்சலுக்காகச் சென்றது. அங்கு ஒரு புலி வந்தது.

"உன்னை நான் இப்போது கொன்று தின்னப்போகிறேன். அப்படியே நில்!" என்றது புலி.

புலியைக் கண்டு முதலில் நடுங்கிய கழுதை பின்னர் சமாளித்துக் கொண்டு,

"எனது வீட்டில் என் மனைவி அழகான மான்கள் இரண்டை வளர்த்து வருகிறாள். என்னை நீ கொல்லாமல் விட்டால் அந்த மான்கள் இரண்டையும் உனக்குக் கொண்டு வந்து தருகிறேன்," என்றது.

இரண்டு மான்கள் என்றதும் புலியின் நாக்கில் நீர் ஊறியது.

"சரி. ஆனால் உடனேயே கொண்டு வா," என்று சொல்லியது புலி.

தனது இருப்பிடத்தை நோக்கி வேகமாக ஓடிப்போனது கழுதை. அங்கு அது தன் மனைவியிடம் நடந்தவற்றைக் கூறியது.

உடனே பெண் கழுதை,

"நான் ஒரு யுக்தி செய்கிறேன். நீங்கள் முன்னால் போய் புலியிடம், மான்கள் என்னிடம் வர மறுக்கின்றன. அதை என் மனைவி அழைத்து வருகிறாள் என்று சொல்லுங்கள்," என்றது.

சரியென்று ஆண் கழுதை முன்னால் போனது. புலியிடம் போய் பெண் கழுதை சொன்னதை அப்படியே சொன்னது. புலிக்குத் தான் இன்னும் காத்திருக்க வேண்டுமே என்று ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

இதற்குள் பெண் கழுதை, ஒரு விசித்திரமான மிருகம் ஒன்றைப் போல் தன்னை மாற்றிக் கொண்டு புலியிருந்த பக்கம் பாய்ந்து பாய்ந்து வந்தது.

அங்கு புலியைப் பார்த்து கரகரப்பான குரலில்,

"அப்பா இன்று ஒரு புலியாவது தின்னக் கிடைத்ததே. மூன்று நாட்களுக்கு முன்னர் மூன்று புலிகளைக் கொன்று தின்றது தான். அதன் பிறகு இன்று தான் புலியைப் பார்க்கிறேன்," என்றது.

இதைக் கேட்டதும் தப்பினோம், பிழைத்தோம் என்று புலி ஒரே ஓட்டமாக ஓடியது.


வெகு வேகமாக ஓடுகின்ற புலியைக் கண்ட நரி, "எங்கே இத்தனை வேகமாக ஓடுகிறீர்?" என்று கேட்டது.

நடந்த விஷயத்தைப் புலி சொன்னதும் நரி கேலியாகச் சிரித்தது.

"ஒரு பெண் கழுதை அல்லவா தங்களைப் பயப்படுத்துவதற்காக விசித்திர மிருகம் போன்ற வேஷம் போட்டுக் கொண்டு வந்தது," என்றது நரி.

ஆனால் புலி அதை நம்பமறுத்தது.

"பாய்ந்து பாய்ந்து வந்த அந்த மிருகத்தைப் பார்ப்பதற்கே பயமாக இருந்தது. அத்துடன் அதன் குரல் வேறு கர்ண கடூரமாக இருந்தது. நீ என்னவென்றால் பெண்கழுதை வேஷம் போட்டுக் கொண்டு வந்தது என்கிறாயே?" என்றது புலி.



"உங்களுக்குச் சந்தேகமாக இருந்தால் வாருங்கள் இருவரும் சேர்ந்து போய்ப் பார்ப்போம்," என்றது நரி.

"நீ பயத்தில் நடுவில் ஓடிப்போய்விட்டால் என்ன செய்வது?"

"உங்களுக்குச் சந்தேகம் என்றால் நம் இருவரின் வால்களைச் சேர்த்து ஒன்றாகக் கட்டிக் கொண்டு செல்வோம்," என்றது நரி.

சரியென்று புலி சொல்ல, இருவரும் தங்கள் வால்களை ஒன்றாகச் சேர்த்துக் கொண்டு கழுதைகள் இருந்த இடத்திற்குச் சென்றன.

புலியையும், நரியையும் கண்ட ஆண் கழுதை பயந்தது,

"போச்சு. நம் இருவரின் உயிரும் போச்சு," என்றது ஆண் கழுதை.

அதைக் கண்ட பெண் கழுதை, "பயப்படாதீர்கள். இதற்கு நான் ஒரு வழி செய்கிறேன்," என்றது.

"சபாஷ் நரியே! சபாஷ்! நல்ல காரியம் செய்தாய். நான் சாப்பிடுவதற்காக ஒரு புலியை உன் வாலோடு கட்டிக்கொண்டு வந்ததற்கு மிகவும் நன்றி. ஆனால் ஒரு புலிதானே கொண்டு வந்திருக்கிறாய். இது என் அசுரப் பசிக்குப் போதாதே," என்று கூறியது.

இதைக் கேட்ட புலி, நரியைப் பார்த்து,

"திருட்டு நரியே! என்னை ஏமாற்றவா பார்த்தாய்?" என்று வெகு வேகமாக ஓட ஆரம்பித்தது. நரி அதன் வாலோடு கட்டப்பட்டிருந்ததால் வழியெல்லாம் தரையில் மோதி இறந்தது.

பெண் கழுதையின் புத்திசாலித்தனத்தால் புலியிடமிருந்து தப்பிக்கொண்டது ஆண் கழுதை. ■

## வாரம் ஒரு நாடு

### பப்புவா நியூகினியா



**தலைநகர்**- போர்ட் மோர்ஸ்பி
**பரப்பு**- 4,62,840 சதுரகிலோமீட்டர்
**மக்கள் தொகை**- 43 இலட்சம்
**மொழி**- ஆங்கிலம், மெலனேஷியன், பப்புவான் மொழிகள்
**எழுத்தறிவு**- 52%
**சமயம்**- கிறிஸ்தவம், பழங்குடி சமயம்
**நாணயம்**- கினா
**தனிநபர் வருமானம்**- 950 டொலர்.

**அமைவிடம்:-**

பப்புவா நியூகினியா, நியூகினித்தீவின் கிழக்குப் பகுதியும், அதையொட்டி அமைந்த தீவுகளும் கொண்ட நாடு. உயர்ந்த மலைகளையும், சதுப்பு நில சமவெளியையும் உடையது. அருகிலுள்ள தீவுகள் எரிமலைகள், அல்லது பவளங்கள் கொண்டவை.

**வரலாறு:-**

பப்புவா நியூகினியாவின் தெற்குப் பகுதி துவக்க காலத்தில் பிரிட்டனின் கையிலும், பின்னர் அவுஸ்திரேலியாவின் கைக்கும் மாறியது. வடக்குப் பாகம் ஜெர்மனியிடமிருந்து அவுஸ்திரேலியாவுக்குச் சென்றது. 1975ல் இரண்டு பாகங்களும் ஒன்றாகிச் சுதந்திரம் பெற்றன. பாராளுமன்ற ஜனநாயக நாடு.

**பொருளாதாரம்:-**

சிறுவகை விவசாயம் முக்கியமானது. செம்புச் சுரங்கங்கள் அதிகமாக உள்ளன. தங்கம், வெள்ளி போன்றவையும் கிடைக்கின்றன. எண்ணெய் வளமும் உள்ளது. ●

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 14.09.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 157
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 155

பரிசுக்குரியவர்:
ஏ.சி. முஹம்மட்மது றிஸ்வான்,
சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ரா. நிரோஷா, ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை. | எவ். சப்றீனா, இல்மா தேசிய மகளிர் பாடசாலை, கிருலப்பனை. |
| செல்வன் இப்திகார் இஸ்மாயில், பள்ளி வீதி, மடவளை பஸார், மடவளை. | இ. முஹம்மட் நிதவ்ஸ், போலீஸ் வீதி, புத்தளம். |
| கமறூன் ஹுசைன், தவளமண்டியா, பஸரை. | வி. நளாஜினி, சைவ பிரகாச வித்தியாலயம், வவுனியா. |
| ஏ. ஸீ.எப். பாயிகா, ஹிரும்புர ஸுலைமானியா வித்தியாலயம், காலி. | எம்.எப்.எப். ரம்சியா, பாத்திமா மகளிர் மஹா வித்தியாலயம், புத்தளம். |
| வி. சற்குணராஜ, அந்தனிஸ் மாவத்தை, கொழும்பு-3. | பாலா பாலரஞ்சனி, கிரான்லி தமிழ் பாடசாலை, அக்கரப்பத்தனை. |

## தீக்கோழி



உலகிலுள்ள பறவைகளில் மிகப் பெரியது தீக்கோழி. இதன் உயரம் சுமார் 2 1/2 மீட்டர். இதன் எடை சுமார் 130 கிலோ இருக்கும். இது ஆசிய, ஆபிரிக்கா கண்டங்களிலும், சவுதி அரேபியாவிலும் அதிகம் வாழ்கிறது.

தீக்கோழியின் தலை சிறியது. ஆனால் கழுத்து மிக நீளமாக இருக்கும். கழுத்தில் சிறகுகள் இருக்காது. கழுத்தும் கால்களும் சிவப்பாக இருக்கும். எனினும் இதனால் பறக்க இயலாது. ஆனால் இப்பறவை மணிக்கு 100 கிலோமீட்டர் வேகத்தில் ஓடக்கூடியது. வேகமாக ஓடுவதற்கேற்ப இதன் கால்கள் மிக நீளமாகவும், உறுதியாகவும் அமைந்துள்ளன. தன்னைக் காத்துக் கொள்ள இது பகைவர்களைக் கால்களால் எட்டி உதைக்கும். இதனால் உதை வாங்கும் குதிரையோ, மனிதனோ உடனே எழுந்திருக்க முடியாது.

இலை, விதை, பழங்கள் முதலியனவும் சிறுபூச்சிகளுமே தீக்கோழியின் உணவு. ஆனால் கல், ஆணி, கண்ணாடித்துண்டுகள், எலும்புகள் முதலியவற்றையும் இது விழுங்கும். இரைப்பையில் உணவைக் கரைத்துச் சமிபாடு அடையவைக்க இவை உதவுகின்றன.

தண்ணீர் குடிக்காமல் தீக்கோழியால் பல நாட்கள் உயிர் வாழ முடியும். அதற்காக இதனை 'ஒட்டகப் பறவை' என்றும் சொல்வர். தீக்கோழி சுமார் 80 ஆண்டுகள் வரை உயிர்வாழும்.

மணலில் பள்ளம் தோண்டி தீக்கோழி முட்டையிடும். இதன் முட்டை மிகப் பெரியது. ஒரு முட்டை, 12 கோழி முட்டைகளின் அளவு இருக்கும். இதன் முட்டை ஓடுகள் மிகவும் கடினமானவை. இந்த ஓடுகளை ஆபிரிக்கப் பழங்குடி மக்கள் உணவு உட்கொள்ளும் பாத்திரமாகப் பயன்படுத்துகிறார்கள்.

தீக்கோழிகளை எளிதில் பழக்கிக் கொள்ளலாம். பழக்கிய தீக்கோழிகளைக் கொண்டு ஓட்டப்பந்தயம் நடத்துவதுமுண்டு. ●

## கோவா



◆ **இந்திய மாநிலங்களில் இருந்து கோவா மாநிலம் வேறுபட்டிருப்பதன் காரணம் என்ன?**

இந்திய மாநிலங்களிலேயே சிறிய மாநிலம் கோவா. இந்தியா முழுவதும் சுதந்திரம் பெற்ற பின்னரும் 15 ஆண்டுகள் வரை இது போர்த்துக்கேயர் வசம்தான் இருந்தது. 1961ம் ஆண்டு டிசம்பர் 12ம் திகதி தான் இந்தியா வசம் வந்தது. 1987ம் ஆண்டு மே மாதம் 30ம் திகதி இந்தியாவின் 25வது மாநிலமாக அங்கீகரிக்கப்பட்டது.

◆ **இதன் பழமையான பெயர்கள் என்ன?**

கோவாவை முன்னர் ஆட்சி செய்த மன்னர்கள் கோவபுரி, கோபபுரம், கோவ் என்று அழைத்தனர்.

◆ **கோவாவில் இறைதொண்டு புரிந்து மேன்மை பெற்ற புனிதரின் உடல் இருந்தது; அப்புனிதர் யார்?**

புனித பிரான்ஸிஸ் சேவியர் அடிகளார். 1542ம் ஆண்டு இந்தியா வந்து இறைதொண்டு புரிந்தார். அவரது உடல் 400 ஆண்டுகளுக்கும் மேலாக கோவாவில் உள்ள பாம் ஜீசஸ் என்னும் ஆலயத்தில் பாதுகாக்கப்பட்டு வந்தது.

◆ **கோவா மக்கள் பேசும் மொழிகள் எவை?**

கோவாவின் ஆட்சிமொழி கொங்கணி. மாராத்தி, ஆங்கிலம், போர்த்துக்கேய மொழிகளும் பேசப்படுகின்றன.

◆ **கோவா விழாக் கோலம் பூணுவது எப்போது?**

ஈஸ்டர் பண்டிகைக்கு முந்தைய 40 நாட்களும் தபசு காலமாகும். அந்த நாட்களை இறைவனுக்கு அர்ப்பணித்து எளிய வாழ்க்கை நடத்துவார்கள். அதனால் அந்த 40 நாட்கள் தொடங்குவதற்கு முந்தைய மூன்று நாட்கள் விருந்து, கேளிக்கை என்று கோலாகலமாக அனுபவிப்பார்கள். இதற்கு 'கோவா கார்னிவேல்' என்று பெயர்.

## விடுகதைகளும் விடைகளும்

1. சிவப்பு உடல் அழகியைக் கண்டவுடன் அலறுவார்கள்.
   யார் அவள்?
2. அறைக்குள் இருந்து கொண்டு ஆயிரம் கதை பேசிடுவாள், அறையை விட்டு வெளியே வந்தால் அவள் உயிர் அரோகரா. யார் அவள்?
3. ஆளில்லாத கோயிலில் மணிமட்டும் அடிக்குது.
   அது என்ன?
4. அவளைத் தொட்டேன், அதிர்ச்சியைத் தந்தாள்.
   அவள் யார்?
5. ஆறு நிறைய நீர் இருந்தாலும் நாய்க்குட்டி நக்கித்தான் நீர் குடிக்குது.
   அது என்ன?

### விடைகள்

1. இரத்தம் 2. நாக்கு
3. கடிகாரம் 4. மின்சாரம்
5. பேனா நிப்

தொகுப்பு: எம்.பாத்திமா-தெஹிவளை.

## அதிசய எண்

2519 என்ற இலக்கத்தை,
10 ஆல் வகுத்தால் மீதி 9ம்
9 ஆல் வகுத்தால் மீதி 8ம்
8 ஆல் வகுத்தால் மீதி 7ம்
7 ஆல் வகுத்தால் மீதி 6ம்
6 ஆல் வகுத்தால் மீதி 5ம்
5 ஆல் வகுத்தால் மீதி 4ம்
4 ஆல் வகுத்தால் மீதி 3ம்
3 ஆல் வகுத்தால் மீதி 2ம்
2 ஆல் வகுத்தால் மீதி 1ம்
வரும்.

2519

அனுப்பியவர்-சிவமதி.

www.padippakam.com

# தா!

"அஷ்டலக்ஷ்மி கோயிலுக்குப் போறேன்னு தானே அவ போனா. அங்கேதானே கொலை நடந்தது? கொலை செஞ்சது இவன் தான்ங்கிறப்போ, இவன் தானே காதலன்?"

"இருங்க. அடுக்காதிங்க. இப்படி எல்லாம் பேசக்கூடாது. இவர் கொலை செஞ்சார்ன்னு இன்னும் தீர்ப்பாகலை. மதனுக்கு பதிலா சுதாகர்ன்னு ஒருத்தனை நிறுத்தினா, அவன்தான் கீதாவோட காதலன், அப்படித்தானே?"

"ஆமாம்."

"ஸோ, நீங்க மரியகீதாவோட காதலனோட போட்டோ எதுவும் பார்த்ததில்லை."

"இல்லை."

"சரி. உங்க தங்கை எல்லா விஷயத்தையும் உங்ககிட்டே மனம் திறந்து பேசுவா. அப்படித்தானே?"

"ஆமாம்."

"அப்படி என்ன என்ன விஷயங்களை பேசுவீங்க தயக்கம், கூச்சம் எதுவும் இல்லாம சொல்லணும். ஏன்னா, அக்கா-தங்கச்சி மாதிரியே பழகமாட்டிங்க நீங்க. இல்லையா?"

"யுவர் ஆனர், ஹி ஈஸ் கன்ஃபியூசிங் த விட்னெஸ்"

"இல்லை பிராசிகியூட்டர், கரெக்டா போறார். லெட் ஹிம் ப்ரொசீட்."

"சொல்லுங்க. என்ன பேசுவீங்க?"

"அரசியல் பத்தி-சினிமா பத்தி-பொது விஷயங்கள் பத்தி."

"இது எல்லா அக்கா-தங்கைகளும் பேசுவாங்களே. இதிலே நீங்க என்ன ஸ்பெஷல்? ஏன் ஜட்ஜை பார்க்கறிங்க, என்னைப் பார்த்து சொல்லுங்க. வேற என்ன பேசுவிங்க?"

"செக்ஸ் ஜோக்ஸ் பேசிக்குவோம். ரொட்ல போறப்போ ஜென்ட்சை கமெண்ட் அடிச்சி பேசிக்குவோம். இந்த மாதிரி..."

"வெரிகுட். இந்த பதில்தான் எதிர்பார்த்தேன். ஏன் மிஸஸ் ரோஸ்லின், செக்ஸ் ஜோக் அடிக்கிற ஒரு தங்கை, கமெண்ட்ஸ் அடிக்கிற ஒரு தங்கை, தன் காதலைப் பத்தி தயக்கமே இல்லாம சொல்ற ஒரு தங்கை-தான் கர்ப்பமா இருக்கிறதையும் சொல்லியிருக்கணுமே. சொன்னாளா?"

"ஆர்டர்! ஆர்டர்! யாருப்பா அது கோர்ட் ஹாலுக்குள்ளே கை தட்றது? இன்னொரு தடவை இப்படி கைதட்டினா, வெளில அனுப்பிடுவேன். பேசாம கவனிங்க."

"சொல்லுங்க. சொன்னாளா?"

"இ.. இல்லை."

"ஏன் சொல்லலை?"

"ஐ ஃஸ்ட்ராங்லி அப்ஜெக்ட். எந்தப் பொண்ணுமே. தான் கர்ப்பமா இருக்கேன்னு தன் அக்காகிட்டே சொல்ல மாட்டா."

"இவங்க அக்கா-தங்கை மாதிரி பழகலையே- இந்தப் பொண்ணு காதலை சொல்லிருக்கா. ஆனா கர்ப்பத்தை மட்டும் ஏன் சொல்லலை?"

"கோபாலகிருஷ்ணன், வாட் ஈஸ் த் பாய்ண்ட், யு வாண்ட் டு எஸ்டாபிளிஷ், ஃப்ரம் திஸ்?"

"யுவர் ஆனர், கொலை செய்யப்பட்ட மரியகீதா தன் காதலைப் பற்றியோ, தன் கர்ப்பத்தைப் பற்றியோ எதுவுமே தன் அக்காவிடம் சொன்னதில்லை. இந்த சாட்சி முழுக்க முழுக்க முரண்பாடுகளாலும், பொய்களாலும் உருவாக்கப் பட்டுள்ளது. ஐ ஹோப், யுவர் ஆனர்ஸ் டிஸ்கிரீஷன் அலோங் ஹேர்ஸ் டு ஜட்ஜ் திஸ். தட்ஸ் ஆல்."

"அடுத்த சாட்சிக்குப் போகலாம்."

→→→→→ ⚖

"....ஆகவே, இரு தரப்பு வாதங்களையும், சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களையும் பரிசீலனை செய்தவகையில், மரியக்தாவைக் கொலை செய்ய பயன்படுத்தப்பட்ட கொலை ஆயுதத்தில் குற்றம் சுமத்தப்பட்ட மதன் என்பவரின் கைரேகை இருப்பதை மிகச் சரியாக பிராசிகியூஷன் தரப்பு நிரூபித்திருந்தாலும், நேர்முக சாட்சிகள் எதுவும் இல்லாத காரணத்தாலும், மரிய கீதாவின் காதலனும், அவளை கர்ப்பமடைய செய்தவனும் இந்த மதன்தான் என்பதை சரியான ஆதாரங்களோடு நிரூபிக்கத் தவறியிருக்கிறது, என்கிற நிலையில் கொலைக்கான காரணம் பலமில்லாமல் இருப்பதால், குற்றம் சுமத்தப்பட்ட மதன் இதை செய்திருக்கலாம் என்கிற சந்தேகம் எழுகிறதே ஒழிய, மதன் தான் கொலை செய்தான் என்று உறுதியாக நிரூபணமாகவில்லை. எனவே, இந்த சந்தேகத்தை குற்றம் சுமத்தப்பட்டுள்ள மதனுக்குச் சாதகமாக்கி, திறமையாக வாதம் செய்த கோபாலகிருஷ்ணனை பாராட்டுவதோடு, சரியான ஆதாரங்கள் இல்லாமல் கோர்ட்டின் மதிப்பான நேரத்தை வீணாக்கியுள்ள போலீஸ் தரப்பை கண்டிக்கவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன்."

❊❊❊

"மதன் வாடா. உள்ளே வா. கோர்ட்ல தீர்ப்பு படிக்கிறப்போ என் நெஞ்சு எப்படி அடிச்சிக்கிச்சி தெரியுமா? ஒரு வேளை வேற மாதிரி தீர்ப்பாகியிருந்தா, சத்தியமா எனக்கு ஹார்ட் அட்டாக் வந்திருக்கும்."

"ரொம்ப தாங்ஸ் ரவி! நீ மட்டும் இவ்வளவு முயற்சி எடுத்துக்கிட்டு, வக்கீலை அமர்த்தி, இவ்வளவு செலவு செய்யலைன்னா.. எவ்வளவுடா செலவாச்சி?"

"அதுவா இப்போ முக்கியம். உக்காரு."

"நம்ம ரூம்தானா இது? என்னமோ புது உலகத்தை பார்க்கிற மாதிரி இருக்கு."

"நீதி என்னைக்கும் தோத்துடாது. கடைசில பார்த்தியா, உன்னோட ஆளு எப்படி காலைவாரி விட்டுட்டா! கீதா மட்டும் சாட்சி சொல்ல வந்திருந்தா எப்பவோ முடிஞ்சிருக்கும் கேசு."

"அவளை, தப்பு சொல்லாதே ரவி."

"தப்பு சொல்லாதேவா? என்ன நீ. நிதானத்திலேதான் பேசறியா? அன்னிக்கு நீ பக்கத்திலே இருந்திருக்கணும். என்ன சொன்னா தெரியுமா?"

"தெரியும் வக்கீல் சொன்னார். சாட்சி சொல்ல மட்டும் கூப்பிடாதிங்க. பணம் எவ்வளவு வேணும்னாலும தர்றேன். காப்பாத்துங்கன்னு சொன்னாளாமே.. அப்புறம் என்ன?"

"பணமா முக்கியம்? அவ சாட்சியம் தானே உயிர் நாடி?"

"அதெல்லாம் மிகைப்படுத்தி பேசாதே. நான் தப்பு செய்யலைன்னு எனக்குத் தெரியும். அப்படி இருக்கிறப்போ கேஸை எவ்வளவு ஜோடிச்சாலும் நிக்காது. இப்போ, கீதா சாட்சி சொல்லாம வெளியே வரலையா நான்."

"அது வேற."

"என்ன வேற... எதையும் அவங்க கோணத்திலே சூழ்நிலையிலே வச்சிப் பார்க்கணும் ரவி. கீதாவோட அப்பாவைப் பத்தி உனக்குத் தெரியாது. கௌரவம் பார்க்கிறவர். அவரோட கார் டிரைவர் ஒருநாள் யூனிஃபார்ம் அழுக்கா போட்டிருந்தான்னு அறைஞ்சதை சொல்லியிருக்கா. தன் பொண்ணு கொலை குத்தம் சுமத்தப் பட்டிருக்கிற ஒருத்தனை விரும்புறா, அவனுக்காக சாட்சி சொல்றான்னு தெரிஞ்சா, அந்த மனுஷன் என்ன வேணாலும் செய்வான்."

"அதுக்காக? அப்பாவோட கோபம் முக்கியமா? காதலனோட உயிர் முக்கியமா? அப்போ இது என்ன காதல்?"

"டேய், சும்மா என்னை சூடேத்தப் பார்க்காதே. வெளியே வந்ததும் முதல் காரியமா போன் செஞ்சிப் பேசிட்டுதான் வர்றேன். போன்லயே அழுதா தெரியுமா? ஒவ்வொரு நாளும் துடிச்சிப் போய்ட்டேன்னு சொன்னா."

"எல்லாம் நாடகம்."

"சீச்சி. உண்மைல என்மேல காதல் இல்லைன்னா நான் போன்ல பேசினப்போ இனிமே என்கூட பேசவேணாம்னு சொல்லிட்டு கட் பண்ணிடலாமே. செஞ்சாளா?"

"ஸோ?"

"ஸோ, உன்னோட புது டி.ஷர்ட்டை எனக்குத் தர்றே."

"எதுக்கு?"

"ஈவினிங் நாங்க சந்திக்கிறோம்-நீண்ட இடைவெளிக்குப் பிறகு."

"எப்படியோ ஒழி! கடற்கரையா?"

"ஆமாம். அதே கடற்கரை."

"பார்த்து, பக்கத்திலே எதுவும் பொணம் இருக்கான்னு பார்த்துட்டு உக்காரு."

✧◆✵

"சரியா ஒரு மாசமாச்சிங்க மதன் நாம பார்த்து."

"ஆமாம். எவ்வளவு சம்பவங்கள். இதே இடம். இதே நேரம். நல்லவேளை, வக்கீல் திறமையா வாதாடலைன்னா? என்னை என்ன பண்ணியிருப்பாங்களோ...

"சேச்சே. அப்படி எல்லாம் எதுவும் ஆகியிருக்காது. எனக்கு நல்லாத் தெரியும், நீங்க விடுதலையாகிடுவிங்கன்னு."

"எப்படி?"

## அசத்தல் — 09

**மதன், கீதா இருவரும் காதலர்கள். கடற்கரையில் மாலை நேரத்தில் சந்திக்கின்றனர். இருட்டாகி விட்டதால் இருவரும் புறப்படுகின்றனர். மதனின் பர்ஸ் தொலைந்து விடுகிறது. கடற்கரையில் ஒரு பெண்ணின் உடல் கிடக்கிறது. அந்தப் பெண்ணின் பெயரும் கீதா-மரிய கீதா. பொலிசார் விசாரணைக்கு வருகின்றனர். மதனின் பர்ஸ் கிடைக்கிறது. மதனைத் தேடிவருகின்றனர். மதனின் காற்சட்டையில் இரத்தக்கறை இருக்கிறது. மதன் கைது செய்யப்படுகிறான். காற்சட்டையில் எப்படி இரத்தம் வந்தது என்பதை அவனால் விளக்க முடியவில்லை. மதனின் காதலி கீதாவுக்கு பொலிசார் போன் செய்கின்றனர். மதன் என்று யாரையும் தனக்குத் தெரியாது என்கிறாள் கீதா. கோர்ட்டில் விசாரணை தொடர்கிறது.**

"நீங்க அதை செய்யலையே..."

"ஆனா சந்தர்ப்ப சாட்சியங்கள் சொல்லிச்சே."

"கடைசில ஜெயிச்சது நியாயம்தானே மதன்?"

"இல்லை கீதா, வக்கீலோட வாதம்."

"மனசை தொட்டுச் சொல்லுங்க, என் மேல கோபம்தானே?"

"இருட்டா இருக்கே. உன் மனசு தெரியலையே. எப்படி தொட்டுச் சொல்றது?"

"சொல்லுங்க. கொஞ்சம் கூட கோபம் இல்லையா?"

"முதல்ல கொஞ்சம் கோபம் இருந்திச்சி."

"அப்புறம்.?"

"அப்புறம் யோசிச்சிப் பார்த்தேன். நியாயங்கள் புரிஞ்சுதா."

"அந்த சூழ்நிலையிலே என்னால எதுவும் செய்ய முடியலைங்க மதன்."

"பரவாயில்லை. இப்ப என்ன?"

"உங்க ஃபிரெண்டு என்னை கண்ட மேனிக்கு திட்டினார் தெரியுமா?"

"சொன்னான். அவன் கோணத்திலே நீ செய்தது தப்பு. அவன் என்ன சொல்றான் தெரியுமா?"

"என்ன சொல்றார்.?"

"அப்பாவோட கோபத்தைவிட, காதலனோட உயிர் பெரிசில்லையான்னு கேக்கறான்."

"ஸ்டுப்பிட்! என்ன கேள்வி இது?"

"அவன் கேக்கறதிலேகூட ஒரு சின்ன நியாயம் இல்லையா கீதா?"

"என்ன நியாயம்?"

"இப்போ உன்னை ஒருத்தன் கற்பழிக்க வர்றான்னு வையி."

"என்னங்க இது!"

"சும்மா ஒரு பேச்சுக்குதானே... என்ன செய்வே?"

"என்ன செய்வேனா? போராடுவேன். ஆனா எனக்கு போராட அவசியம் இல்லை."

"ஏன்?"

"நீங்கதான் பக்கத்திலே இருக்கிங்களே... நீங்க விட்டுடுவிங்களா அவனை"

"விடமாட்டேன் தான். அவன் கைல கத்தி வச்சிக்கிட்டு கிட்டே வந்தா குத்திடுவேன்னு சொல்றான்னு வையி-அப்ப நான் என்ன செய்ய முடியும்?"

"கத்தியை காட்டினா விட்டுடுவாங்களா? கண்ணுக்கு முன்னாடி உங்க காதலி கற்பழிக்கப்படறதை பார்த்துக்கிட்டு நிப்பிங்களா? அப்போ உங்க உயிரா பொருட்டா தெரியும்?"

"ஏன் கீதா, என் உயிர் முக்கியம் இல்லையா? காதலனோட உயிரைவிட அப்பா சேர்த்து வச்சிருக்கிற சொத்து முக்கியம்னா, காதலியோட கற்பைவிட, உயிர் முக்கியமாகாதா?"

"மதன் உங்க கேள்விக்கு அர்த்தம் என்ன?"

"நத்திங். நான் செய்யாத ஒரு குற்றத்துக்காக என்னை கோர்ட்ல நிறுத்தினாங்க. நீ என்னை பார்க்க வரலை. லாக்கப்ல எத்தனை அடிவாங்கினேன் பெல்ட்டால. பூட்சால எத்தனை உதை தெரியுமா? நீ பார்க்க வரலை. தூக்குக் கயிறு என் கழுத்துக்கு பக்கமா இருந்திச்சி. நீ சாட்சி சொல்ல வரலை. உனக்கு உன் சொத்து முக்கியம். ஒருவேளை எனக்கு தூக்குக் கொடுத்திருந்தாங்கன்னா, அப்பா சொல்ற பணக்கார மாப்பிள்ளையை கட்டிக்கிட்டு உன் சௌகரியத்திலே எந்த குறையும் இல்லாம அமோகமா இருப்பே. உனக்கு வாழ்க்கை முக்கியம். காதல் ரெண்டாம் பட்சம். ஆனா, நான் நம்ம காதலை எப்படி நினைச்சேன் தெரியுமா? காதலைத்தான் நான் சுவாசிச்சேன். கனவுகளுக்காகவே தூங்கினேன். ஒவ்வொரு நிமிஷமும் கீதா-கீதா கீதா-கீதா! ஆனா, நீ!"

"நான் என்ன சொல்றேன்னா..."

"நீ எதுவும் சொல்ல வேணாம். கீதா, இந்த கேசில எப்படி நான் விடுதலை ஆனேன் தெரியுமா?"

"எதுக்கு சட்டையைக் கழட்றிங்க மதன்?"

"வேர்க்குது. கேளு. எப்படி விடுதலை ஆனேன்? ஒரே ஒரு பாயிண்ட். அந்த மரியகீதாவைக் காதலிச்சது நான்னு நிரூபணமாகலை. ஏன் நிரூபணமாகலை? தன் காதலனைப்பத்தி மரியகீதா வீட்ல மூச்சே விடலை. சரியான விபரங்களை சொல்லலை. அவன் எழுதின கடிதங்களோ, இல்லை போட்டோவோ கூட போலீசுக்குக் கிடைக்கலை. அதே மாதிரி?"

"நீ கூட எனக்கு லெட்டர் எழுதினதில்லை. போட்டோ தந்ததில்லை. நான் எழுதின கடிதங்களை எரிச்சுட்டே. நாம சேர்ந்த போட்டோ கூட எடுத்துக்கிட்டதில்லை."

"எதுக்கு இதெல்லாம் சொல்றிங்க?"

"எதுக்கு? சும்மாதான் பொழுது போகலை. எனக்கு. அதான் சொல்றேன். ஏன் கீதா, இப்போ- சும்மா ஒரு பேச்சுக்கு சொல்றேன்- உன்னை நான் கத்தியால குத்தி கொலை பண்றேன்னு வையி. என்னை யாரும் சந்தேகப்பட முடியாதில்லை?"

"மதன்! நான் போறேன், நேரமாச்சு."

"போக வேண்டியதுதான் கீதா. ஒரு மயக்கமான சந்தர்ப்பத்திலே நீ பேசின வசனம் எனக்கு நினைவுக்கு வருது. உனக்கு நினைவு இருக்கா? விலைமதிப்பே இல்லாத ஒரு உயர்ந்த பரிசுப் பொருள் உன்னால எனக்குத் தரமுடியுமான்னு நான் கேட்டேன். நீ முடியும்னே. என்னன்னு கேட்டேன். என் உயிர்ன்னு சொன்னே."

"அதுக்கென்ன இப்போ?"

"அதை இப்ப கேக்கறேன் தா!"

☆☆

"ஹலோ, அவசர போலீஸ்?"

"யெஸ்."

"சார், நான் பெஸண்ட் நகர்லேர்ந்து பேசறேன்."

"பேசுங்க."

"சார், நைட்ல நான் அரைமணி நேரம் வாக்கிங் போய்ட்டு வந்து படுக்கிறது பழக்கம்."

"சரி. அதுக்கு?"

"கேளுங்க. கடற்கரையோரமா ஒரு பாடி கிடக்குது." **(முதல் பாகம் முற்றும்)**



தமிழக கிரைம் கதை மன்னன்
பட்டுக்கோட்டை பிரபாகர்


பட்டுக்கோட்டை பிரபாகர்
ஜீ! வீரகும் 2
அடுத்த வாரம் முதல்
தொடரும்.....


## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எம். ஜீவன்.
வயது: 28
முகவரி: 72, மார்க்கெட் சைட், அனுராதபுரம்.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.



பெயர்: எம். ஹுஸைன்.
வயது: 20
முகவரி: 186, வடகரை வீதி, திருகோணமலை.
பொழுதுபோக்கு: பேனா நட்பு, ரீ.வி.



பெயர்: ஏ. ஆனந்தராஜா.
வயது: 28
முகவரி: P.O.BOX-41033, CODE NO-85851 JELEEB SHUYOUKH, KUWAIT
பொழுது போக்கு: பத்திரிகை, பாடல்கள்.



பெயர்: ஏ. உஷாந்தினி
வயது: 18
முகவரி: 47, காளி கோவில் வீதி, பெரிய ஊறணி, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: ஆர். ரசூல்
வயது: 18
முகவரி: 88/2, தம்பாளை, பொலன்னறுவை.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: எம். றிஸ்மி.
வயது: 23
முகவரி: P.O.BOX-4103, DOHA, QATAR.
பொழுது போக்கு : வானொலி, தொலைக்காட்சி.

பெயர்: முஹம்மட் நிஸான்
வயது: 16
முகவரி: 4/2, கொடபுதுன, நாவலப்பிட்டிய.
பொழுதுபோக்கு: பேனா நட்பு. வானொலி

பெயர்: முகம்மட் ரஸ்மி.
வயது: 25
முகவரி: 303/1, துனுவில வீதி, அக்குறணை.
பொழுதுபோக்கு: ரீ.வி., கிரிக்கெட்.

பெயர்: ஆர். ராஜ்குமார்.
வயது: 21
முகவரி: 16, பஜார் வீதி, சிலாபம்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எஸ். சிவானந்த்.
வயது: 23
முகவரி: குடுகல்வத்தை, இரத்தினபுரி.
பொழுது போக்கு: மீன்வளர்ப்பு, வானொலி.

பெயர்: ஆர். கருணாகரன்
வயது: 30
முகவரி: NYGAARDTRRE-220G, 3520, FARUM, DENMARK.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம். முகம்மட் சலீம்.
வயது: 19
முகவரி: பாடசாலை வீதி, மீராவோடை, வாழைச்சேனை.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.


படிப்பகம்

www.padippakam.com

# தாய்

92

"ஷ்!" என்று சமோய்லவின் தந்தையை நோக்கி விரலை நீட்டி எச்சரிக்கை செய்தான் அதிகாரி.

சிஸோவ் வருத்தத்தோடு தலையை அசைத்துக் கொண்டான்.

தாய் தனது பார்வையை அந்த நீதிபதிகளின் மீதிருந்து அகற்றவே இல்லை. அவர்கள் வெளிக்குத் தெரியாமல் தமக்குள் பேசிக் கொள்ளும் போது அவர்கள் ஆத்திர உணர்ச்சி அதிகரித்து வருவதையே அவள் கவனித்துக் கொண்டிருந்தாள். அவர்களது உணர்ச்சியற்ற மெலிந்த குரல்கள் தாயின் முகத்தைத் தொட்டன: அவளது கன்னங்களைத் துடிக்கச் செய்தன. அவளது வாயிலே ஏதோ ஓர் அருவருக்கத்தக்க கசப்பு ருசியை உண்டாக்கின. குதுகுதுக்கும் இரத்தமும், ஜீவசக்தியும் நிறைந்து துடிக்கும் தனது மகனையும் அவனது தோழர்களையும் பற்றி, அவர்களின் உடம்புகளைப் பற்றி, அந்த இளைஞர்களின் தசைகளையும் அவயவங்களையும் பற்றியே அவர்கள் பேசிக் கொண்டிருப்பதாக தாய்க்குத் தோன்றியது. அந்த உடம்புகளைக் காணும் அவர்களது உள்ளத்தில் பிச்சைக்காரர்களின் கேவலமான பகைமை உணர்ச்சியும் நோய்ப்பட்டு நொம்பலமானவர்களின் பேராசையுணர்ச்சியுமே இடம் பெற்று வளர்ந்தன. இன்பத்தை அறியவும் ஆக்கவும் சக்திபடைத்த, வேலை செய்யவும் செல்வத்தை ஆக்கவும் பெருக்கவும் சக்திபடைத்த, அந்த இளைஞர்களது உடல்களைப் பார்த்துப் பார்த்து வருத்தத்தோடு தங்கள் நாக்குகளைச் சப்புக் கொட்டிக் கொண்டார்கள். ஆனால் இந்த உடல்வளம் பெற்ற இளைஞர்களோ இனி ஒதுக்கப்பட்டுப் போனார்கள். அதாவது இனிமேல் அந்த உடல் வளத்தை யாரும் தங்கள் உடைமையாகக் கருத முடியாது; அதைச் சுரண்டி வாழ முடியாது: தின்று வாழ முடியாது. இந்தக் காரணத்தினால் தான் அந்தக் கிழட்டு நீதிபதிகளின் மனத்திலே பழிவாங்கும் சோக எரிச்சல் மூண்டது., தம் முன்னால் புதிய இரைப்பிராணி வரும்போது அதை எட்டிப் பிடிக்கத் தெம்பும் திராணியும் அற்றுப்போய் மெலிந்து வாடும் காட்டு மிருகத்தைப்போல், பிற மிருகங்களின் பலத்தை அமுங்கடித்து அவற்றைத் தமக்கு இரையாக்கித் தின்பதற்குச் சக்தியற்றுப் போய் அந்த இரைப் பிராணிகள் தம்மிடமிருந்து தப்பி நடமாடுவதைக்கண்டு, அவற்றைப் பிடித்து அடிக்கத்திராணியற்று அவற்றை நோக்கி உறுமுவதோடும் ஊளையிடுவதோடும் திருப்தியடையும் காட்டு மிருகத்தைப் போல், அவர்களும் தங்களது ஆட்சிக்குள் சிக்காது தப்பிக்கும் அந்த இளைஞர் களைப் பார்த்து பழிகொள்ளும் துன்ப உணர்வுடன் கொட்டாவி விட்டுக் குமுறிக் கொண்டிருந்தார்கள்.

இந்த மாதிரியான குரூரமான, விபரீதமான எண்ணங்கள் எல்லாம் நீதிபதிகளையே கவனித்துக் கொண்டிருந்த தாயின் மனத்தில் தெள்ளத் தெளிவாக உருப்பெற்றுத் தோன்றிக் கொண்டிருந்தன. தங்களது இந்தப் பேராசை உணர்ச்சியையும், ஒரு காலத்தில் தங்களது மிருகப் பசியைத் தணித்துக் கொள்வதற்கு வழி தெரிந்து வைத்திருந்து, இன்று பலமிழந்து போன மிருகங்களின் உறுமலைப் போன்ற ஆண்மையற்ற மூர்க்க பாவத்தையும், அவர்கள் அனைவரும் மூடி மறைக்க விரும்பவில்லை என்றே அவளுக்குத் தோன்றியது. பெண்மை உணர்ச்சியும் தாய்மையுணர்ச்சியும், கலந்து நிறைந்த தாய்க்கோ தனது மகனது சரீரம் என்றென்றும் இனிமை பயப்பதாக, ஆத்மா என்று சொல்லப்படுகிறதே, அதைவிட அருமையானதாகவே இருந்து வந்திருக்கின்றது. எனவே அந்தப் பசிவெறிகொண்ட மங்கிய கண்கள் அவனது முகத்தின் மீதும், மார்பின் மீதும் தோள்களின் மீதும், கைகளின் மீதும் ஊர்ந்து தவழ்ந்து, அவனது உயிர்ப்பு நிறைந்த சதைக் கோளத்தின் உணர்வை நாடி, அவன் உடம்போடு ஒட்டி உராய்ந்து தமது உடம்பிலும், தங்களது தொய்ந்து தொளதொளத்துப் போன தசைக்கோளங்களிலும், வலியிழந்து போன நரம்புகளிலும் புது வலுவை ஏற்றிக் கொள்ளும் விருப்பத்தோடு பற்றிப்பிடித்துப் பார்த்துக் கொண்டிருப்பதாகவே அவளுக்குப் பயங்கரமாய்த் தோன்றியது. அந்த இளைஞர்களுக்குத் தண்டனை விதிப்பதற்கும் தாமே ஆளாகி, அவர்களது உடம்புகளைத் தாம் என்றென்றும் இழப்பதற்கும் தயாராகிவிட்ட அந்த இளைஞர்களை எண்ணியெண்ணி அந்த நீதிபதிகள், ஊறிவரும் பகைமை, பேராசை முதலியவற்றின் உறுத்தலால், ஒரு புதிய துடிப்புக்கு ஆளாயினர். அவர்களது இந்த உணர்ச்சியற்ற இமையற்ற பார்வையைப் பாவெலும் உணர்ந்து கொண்டது போலவே அவளுக்குத் தோன்றியது. எனவேதான் அவன் அவளை ஒரு நடுக்கத்தோடு பார்ப்பதாக அவள் உணர்ந்தாள்.

பாவெல் அவளை அமைதியோடும் அன்போடும், கண்ணில் களைப்பின் சாயை படர்ந்து பரவப் பார்த்தான். இடையிடையே அவன் அவளை நோக்கித் தலையை அசைத்துப் புன்னகை செய்தான்.

"சீக்கிரமே-விடுதலை!" என்ற வார்த்தைகளே அவனது புன்னகையின் அர்த்த பாவமாகத் தோன்றியது; அந்தப்புன்னகை அவளைத் தொட்டுத் தடவி அமைதியளித்தது.

திடீரென்று அந்த நீதிபதிகள் எழுந்திருந்தார்கள். தாயும் தன்னை அறியாமலே எழுந்து நின்றாள்.

"அதோ அவர்கள் போகப் போகிறார்கள்" என்றான் சிஸோவ்.

"தீர்ப்புச் செய்யவா?" என்று கேட்டாள் தாய்.

"ஆமாம்."

அவள் கொண்டிருந்த உணர்ச்சிப் பரவசம் திடீரென இற்று முறிந்து, அவளுக்குக் களைப்புணர்ச்சியினால் ஏற்படும் மயக்க உணர்ச்சி மேலோங்கியது. அவளது புருவங்கள் நடுங்கின. நெற்றியில் முத்து முத்தாக வியர்வைத் துளிகள் பூத்துத் துளிர்த்தன.

## இந்த விசாரணையால் யார் சொல்வது சரி, யார் சொல்வது தப்பு என்பது வெளிவரவேயில்லை! தீர்ப்பு—தேசாந்திர சிட்சை!

அவளது இதயத்திலே துயரமும் அதிருப்தியும் நிறைந்த மனப்பாரம் ஏறியமர்ந்தது; அந்த மனப்பார உணர்ச்சி திடீரென்று அவள் மனதில் நீதி மன்றத்தின் மீதும் நீதிபதிகள் மீதும் ஒரு கசப்புணர்ச்சியை உண்டாக்கிவிட்டது. தலையை வலிப்பதாக உணர்ந்தாள் அவள். எனவே தன் கையினால் நெற்றியை அழுத்திப் பிடித்துத் தேய்த்தவாறே அவள் நிமிர்ந்து பார்த்தாள். கைதிக் கூண்டுகளை நெருங்கி சென்ற கைதிகளின் உறவினர்களையும் பேச்சுக் குரலின் ரீங்காரம் நிரம்பிய நீதி மன்றத்தையும் அவள் பார்த்தாள். அவளும் பாவெலிடம் சென்றாள். அவன் கையை அழுத்திப் பிடித்தாள். பல்வகையுணர்ச்சிகளின் குழப்ப நிலைக்கு ஆளாகி, அதனால் எழுந்த வேதனையோடும் இன்பத்தோடும் அவள் பொங்கிப் பொங்கி அழுதாள். பாவெல் அவளிடம் அன்போடு பேசினான்; ஹஹோலோ சிரித்துக்கேலி பண்ணினான்.



எல்லாப் பெண்களுமே அழுதார்கள். சோகத்தால் அழுவதைவிட, பழக்கத்தின் காரணமாகத்தான் அவர்கள் அழுது தீர்த்தார்கள். எதிர்பாராதவிதமாக எங்கிருந்தோ வந்து தம்மைத் தாக்கிய சோக வேதனை எதுவும் அவர்களுக்கு இல்லை, தங்களது குழந்தைகளைப் பிரிய வேண்டியிருக்கிறதே என்ற வருத்தத்தால்தான் அவர்கள் அழுதார்கள். அன்றைய தினத்தின் நிகழ்ச்சி களைப் பார்த்துப் பார்த்து அந்த வருத்த உணர்ச்சி கூட ஓரளவு சமனப்பட்டுப் போயிருந்தது. தந்தைமார்களும் தாய்மார்களும் தங்கள் பிள்ளைகளைக் குழம்பிப் போன பல்வகை உணர்ச்சியோடு பார்த்தார்கள். பெரியவர்களாகிய தாங்கள் அந்த இளைஞர்களைவிட உயர்ந்தவர்கள் என்ற வழக்கமான எண்ணத்தோடு, அந்த இளைஞர்களின் காரியங்களில் அவநம்பிக்கை உணர்ச்சியோடுதான் அவர்கள் பார்த்தார்கள். எனினும் அவர்கள் அந்த இளைஞர்களுக்கு ஒரு விதத்தில் மரியாதையும் காட்டினார்கள். புதியதொரு நல்வாழ்வைச் சமைப்பதைப் பற்றிக் கொஞ்சங்கூடப் பயமில்லாமலும் தைரியத்தோடும் அந்த இளைஞர்கள் எடுத்துக் கூறிய விஷயம் அவர்களது மனத்திலே ஒரு பெரும் வியப்பை ஏற்படுத்தியிருந்தது. எனவே அந்த வியப்புணர்ச்சிக்கு ஆளாகி, இனிமேல் தாம் எந்தவிதமாக வாழ வேண்டும் என்ற கவலைக்கு ஆளாகிச் சிந்தித்துச் சிந்தித்துச் சோர்ந்தார்கள் அந்தப் பெற்றோர்கள். உணர்ச்சிகளை உருவாக்கி வெளியிட முடியாத ஏலாத்தன்மையால் அந்த உணர்ச்சிகள் உள்ளுக்குள்ளேயே அழுந்திப்போயின. எனவே அவர்கள் சர்வ சாதாரணமான விஷயங்களைப்பற்றி, துணிமணி, உடம்பைப் பார்த்துக் கொள்ளுதல் முதலிய விஷயங்களைப் பற்றி என்னென்னவோ பேசிக்கொண்டார்கள்.

புகினின் மூத்த சகோதரன் தன் தம்பிக்கு எதையோ விளக்கிச் சொல்வதற்காக, கையை ஆட்டிக்கொண்டிருந்தான்:

"நியாயம்-இதுதான் வேண்டும். வேறொன்றுமில்லை!"

"நமது மைனாவைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்" என்று பதிலளித்தான் புகின்.

"பார்த்துக் கொள்கிறேன்."

மக்சீம் கார்க்கி

சிஸோவ் தன் மருமகனின் கையைப் பிடித்துச் சொன்னான்:

"நல்லது, பியோதர், அப்படியென்றால் நீ எங்களை விட்டுப் பிரிந்து செல்லப் போகிறாய்..."

பியோதர் தன் மாமனின் பக்கமாகக் குனிந்து அவன் காதில் ஏதோ இரகசியமாகச் சொல்லிவிட்டு, குறும்புத்தனமாகப் புன்னகை செய்தான். அங்கு காவல் நின்ற காவலாளியும் புன்னகை செய்தான். ஆனால் மறுகணமே அவன் தன் முகத்தை வக்கிரமாக வைத்துக் கொண்டு தொண்டையைக் கனைத்துச் சீர்படுத்திக் கொண்டான்.

மற்ற பெண்கள் பேசியது போலவே தாயும் தன் மகனிடம் துணிமணிகளைப் பற்றியும், அவனது தேக சுகத்தைப்பற்றியுமே பேசினாள். எனினும் அவளது உள்ளத்தில் சாஷாவைப் பற்றியும் தன்னைப் பற்றியும் அவனைப் பற்றியும் ஆயிரமாயிரம் கேள்விகள் நிரம்பிப் புடைத்து விம்மிக் கொண்டிருந்தன. இதற்கெல்லாம் மேலாக, அவள் தன் மகன்மீது கொண்ட பாசவுணர்ச்சியால் ஏதோ ஒரு பாரவுணர்ச்சி நெஞ்சில் குடிபுகுந்தது. அவள் அவனை மகிழ்வித்து, அவனது இதயத்தைத் தன் இதயத்தால் தொட்டுவிட விரும்பினாள். ஏதோ நடக்கப்போகிறது என்றிருந்த பயப் பிதியுணர்ச்சி மறைந்து போய்விட்டது. அதற்குப் பதிலாக அந்த நீதிபதிகளைப் பற்றிய நினைவு எழும்போது ஒரு நடுக்க உணர்ச்சியும், அவளது மனத்தின் மூலையிலே சில இருண்ட எண்ணங்களுமே தோன்றிக் கொண்டிருந்தன. தன்னுள்ளே ஒரு புதிய பிரகாசம் பொருந்திய இன்ப உணர்ச்சி பிறப்பதை அவள் உணர்ந்தாள். அதை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை; எனவே அவள் குழம்பித் தவித்தாள். ஹஹோல் எல்லோரிடமும் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு, தான் பாவெலிடம் காட்டும் பாசவுணர்ச்சியை விட, அவனிடமே தான் அதிகமான பாசம் கொள்ள வேண்டும் என்பதை அவள் உணர்ந்து அவனிடம் திரும்பிப் பேசினாள்:

"உங்கள் விசாரணையை நான் அப்படியொன்றும் பெரிதாக நினைக்கவில்லை!"

"ஏன் அம்மா?" என்று நன்றியுணர்வோடு புன்னகை செய்து கொண்டே கேட்டான் அவன்: "பசு கிழடேயானாலும் பாலின் ருசி போமோ?..."

"அதைப்பற்றிப் பயப்படுவதற்கே ஒன்றுமில்லை. ஆனால் இந்த விசாரணையால் யார் சொல்வது சரி, யார் சொல்வது தப்பு என்பது வெளிவரவேயில்லை" என்று அவள் தயக்கத்தோடு கூறினாள்.

"ஓஹோ, அதுவா? அதைத்தான் நீங்கள் எதிர்பார்த்தீர்களா?" என்று சொன்னான் அந்திரேய். "அவர்கள் உண்மையைத் தேடிக் காண்பதில் அக்கறை கொண்டவர்கள் என்று நினைத்தீர்களா?"

"இது ரொம்பப் பயங்கரமாயிருக்குமென்று நான் நினைத்தேன்" என்று பெருமூச்சோடும் புன்னகையோடும் சொன்னாள் அவள்.

"அமைதி! ஒழுங்கு!"

எல்லோரும் அவரவர் இடத்துக்கு ஓடிப்போனார்கள்.

பிரதம நீதிபதி தமது கையொன்றை மேஜைமீது ஊன்றிக் குனிந்தவாறு மறு கையால் தமது முகத்துக்கு நேராக ஒரு காகிதத்தை எடுத்துப் பிடித்தார்; மெலிந்து இரையும் குரலில் அதை வாசித்தார்.

"அவர் தீர்ப்பை வாசிக்கிறார்" என்றான் சிஸோவ்.

அந்த அறை முழுவதும் அமைதியாயிருந்தது. ஒவ்வொருவரும் அந்தக் கிழவரையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டே எழுந்தார்கள்.

(தொடர்ந்து வரும்)

---

பஸ்சை விட்டு இறங்கி அந்தச் சிறு கிராமத்தை நோட்டமிட்டவாறு நடந்தான் வினோதன். அவன் எதிர்பார்த்த அழகு இல்லாவிட்டாலும் ஆங்காங்கே பெரிய நாவல் மரங்கள், கருவிழிகள் போன்ற பழங்கள் அதில் சிலிர்த்துத் தொங்குவது அவனுக்குப் பிடித்தமான காட்சியாக இருந்தது. கிண்ணை மரங்களில் மூடியும் சாடியும் போல் அசைந்தாடும் பழங்களில் அணில் இச் இச் என்று சத்தம் போட்டு முத்தமிடுவதைக் கண்டு மகிழ்ந்தான் வினோதன்.

"தாத்தா! இங்கே பள்ளிக்கூடம் எங்கே இருக்கு?" எதிரில் வந்த ஒரு பெரியவரிடம் கேட்டான் அவன். வாயில் குதப்பியிருந்த வெற்றிலைச் சக்கையை ஒரு ஓரமாகச் சென்று துப்பிவிட்டு "தம்பி யாருங்க வேலையா வந்தீங்களா? ஊருக்குப் புதிசா?" என்றார். "ஆமாங்க" என்றான் வினோதன்.

"அந்தா ஒரு பெரிய மாமரம் தெரியுது பாருங்க. அங்க போயி கெழக்கால திரும்பினா, சோத்துக்கைப் பக்கமா ஒரு மஞ்சல் கட்டிடம் இருக்கும். முன்னால ஆத்து மணல் போட்டுப் பரவிருக்கு அதுதான் பள்ளி." பெரியவருக்கு நன்றி சொல்லிவிட்டு நடையின் வேகத்தை அதிகப்படுத்திப் பள்ளிக்கூடம் போய்ச் சேர்ந்தான் வினோதன்.

அன்று போயா தினமாதலால் பள்ளிக்கூடம் வெறிச்சோடிக்கிடந்தது. அதன் பின்புறத்தில் அவன் தங்குவதற்கான சிறு அறை இருந்தது. கடைகள் அக்கிராமத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்தன. நல்ல வேளை அங்கிருந்த சாப்பாட்டுக் கடையில் பசியைத் தீர்த்தான்.

வினோதனுக்குப் பொழுதுபோவது கஷ்டமாக இருந்தது. கண்ணுக் கெட்டியதூரம் வரை நடந்தான். ஆற்றுப்பக்கமாக உள்ள ஆலமர நிழலில் ஜோடிகள் இருந்து சல்லாபிப்பதைக் கண்ட வினோதன் மனதில் மெல்லிய சோகம் பரவியது.

ஆற்றங்கரை மணலில் அமர்ந்து தான் கையில் வைத்திருந்த டயரியின் பக்கங்களை புரட்டினான் 'என் இனியவளே: மதுரா! நீ இல்லாமல் நான் எப்படி வாழ்வேன்? ஒரு நிமிஷங்கூட உன்னைப் பிரிந்து வாழ மாட்டேன்.'

மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் அவன் எழுதியது அப்படியே இருந்தது. டயரியை மூடினாலும் மதுரா அவன் நினைவில் வந்து நின்றாள்.

மதுரா அவன் மனைவி. அதுவும் ஆசையர்க் கைப்பிடித்த இளம் மனைவி. மூன்று ஆண்டுகள் அவள் என்னை நேசித்தாள். வகை வகையாய்ச் சமைத்துப் போட்டாள். அழுக்குத் துணிகளைத் துவைத்து ஸ்திரிபோட்டு அழகாக மடித்து வைத்திருப்பாள்.

அவன் இனிய நினைவுகளை அசை போடும்போது, 'சிச்சி என்ன வாயாடி. அவள். நான் ஒன்று சொன்னால் அவள் இரண்டு சொல்வாள். நகரத்தில் பத்து விசேஷம் நடந்தாலும் அத்தனைக்கும் அவளைக் கூட்டிப் போகணும். இல்லாட்டா முகத்தை உம் என்று வைப்பாள்; அல்லது தொண தொணப்பாள். வரவுக்கு மிஞ்சிய செலவு வேறு. பிறந்த வீட்டுப் பெருமைகளைக் கதை கதையாய் அளப்பாள். சொல்வதெல்லாம் சொல்லிவிட்டு கடைசியில் சமாளிப்பாள்.' இந்த எண்ணங்கள் எழுந்து அவன் மனசில் பெரும்போராட்டமாக மாறியது.

கரும்பாக இனித்த வாழ்க்கை வேம்பாகக் கசந்தது. மனைவியுடன் சண்டை போட்டு அவளைப் பிறந்தகம் அனுப்பிவிட்டு அவளுக்குத் தெரியாமல் இந்தக் கிராமத்துக்கு மாற்றலாகி வந்தவன் தான் வினோதன்.

அவன் சிந்தனையில் ஆழ்ந்து மணலில் எதையோ எழுதி எழுதி அழித்துக்கொண்டிருந்தான்.

"என்ன வாத்தியார்த்தம்பி..! யோசனை பலமாயிருக்கு?" வினோதனின் முதுகைத் தொட்டவர் தாத்தா. "ஆ... தாத்தாவா!" வினோதன் ஆச்சரியப்பட்டுத் திரும்பினான். அவர் கையில் பாம்புபோலப் புடலங்காய் தொங்கியது. மறுகையில் இருந்த பிளாஸ்டிக் பையில் கத்திரியும் பூசணியும் எட்டிப் பார்த்தன. பெரியவர்– அவர்தான் தாத்தா, மணலில் துண்டை விரித்து வசதியாக உட்கார்ந்து கொண்டார்.

"தம்பி உங்களுக்குக் கிராமம் புடிச்சிருக்கா? நேரம் கெடச்சா என் வீட்டுப்பக்கமா வந்து ஒரு வாட்டி சாப்பிட்டுப் போங்களன்," என்றார். வினோதன் அவரை ஏற இறங்கப் பார்த்து "ஐயோ தாத்தா இந்த வயசில சமையல் அது இது என்று ஏன் கஷ்டப் படுறீங்க? யாரையாவது வேலைக்கு வச்சுக்கப்படாதா?" என்றான் ஆதரவாக.




தாத்தா வினோதனை அதிசயமாகப் பார்த்து வாய் திறந்து சிரித்தார். "வாத்யார் தம்பி! எனக்கு சம்சாரம் இருக்கு. அவ என் கடைசிப் பொண்ணோட பிரசவம் பார்க்க சம்பந்தி வீட்ட போயிருக்கிறா. சீக்கிரம் வருவனெண்டு கடுதாசி போட்டிருக்கா," என்று பூரிப்புடன் சொன்ன தாத்தாவைப் பார்த்தபடி அமைதியானான் வினோதன்.

"வாத்தியார்த்தம்பி எனக்கு வயசென்ன இருக்கும்?" தாத்தா அவன் அமைதியைக் கலைத்தார். அவரே தொடர்ந்தார், "எனக்கு வயசு இந்த ஆவணியோட எழுபத்தஞ்சு. பேச்சுக் கலியாணந்தான்; பேரு கற்பகம். என்மனைவியோட விசேஷம் என்னண்டா, மனசுக்க வச்சி எதையும் புழுங்க மாட்டா. பட்பட்னு பொரிஞ்சு தள்ளிடுவா."

"அப்ப உங்களுக்கு கோபம் வராதா?" என்று அவசரப்பட்டான் வினோதன்.

"தம்பி மனைவி எண்டாலும் அவளுக்கெண்டு ஒரு மனசும் இருக்குந்தானே? புருஷன் சொல்றதுக்கெல்லாம் தலையாட்டாம அவளுக்குப் புடிச்சதையும் புடிக்காததையும் சொல்றது நியாயம் இல்லியோ? குறகுத்தம் பார்த்தா குடும்பம் இல்ல வாத்தியார்த் தம்பி. நீங்க என்ன நினைச்சாலும் சரி. சண்டபுடிச்சாலும் நாங்க ஒருத்தரை ஒருத்தர் பிரிஞ்சி வாழ மாட்டம். அவ இல்லாட்டித்தான்அருமை தெரியும். எல்லா வேலயையும் காலயிலருந்து படுக்கிறவரைக்கும் செய்து, நம்மையும் கவனிச்சக்கிற அன்புக்கு விலயில்லத் தம்பி. பேப்பர் படிக்கிறதும் ரேடியோக் கேக்கிறதும்தான் என்ரவேல. அவளோட கஷ்டம் தனியா இருக்கறப்ப தெரியுது. முப்பத்தஞ்சி வருசம் வாழ்ந்திட்டம். அவளுக்கு நான், எனக்கு அவள்."

புருஷனுக்கு மனைவி ஒரு நிழல். தாத்தாவின் கண்களில் ஈரம் கசிவதைக் கண்டு வினோதன் ஆச்சரியப்பட்டான்.

தாத்தா சொன்னதெல்லாம் தனக்குத்தான் சொன்னது போல உணர்ந்தான் வினோதன். அவர் அவனிடம் விடை பெற்றுப் போகும்போது, "வாத்தியார்த் தம்பிக்கு இன்னும் கலியாணம் ஆகலியோ?" என்று கேட்டுவிட்டுச் சென்றார்.

வினோதனின் நெஞ்சு குறு குறுத்தது. டயரியைத் திறந்தான். 'என் கண்மணி மதுரா, உன்னை அழைத்துவர நாளை வருவேன்,' என்று எழுதினான். உடையில் ஒட்டியிருந்த மண்ணைத் தட்டிவிட்டு உற்சாகத்தோடு நடந்தான்.



படிப்பகம்

www.padippakam.com

# எரித்தது போதும்!

மாறுட புத்ரன்

காய்ந்த கட்டாந்தரை, மணலும் மணல் சார்ந்த பூமியும் அகதி முகாமுமாய்....வாழ்க்கை அவலம் நிறைந்த தொரு போராட்டப்பலம். எங்கு பார்க்கினும் மணல் தான், உதிர்ந்த வெளி. அகதிப்பிடி நிறைந்த நெஞ்சங் களுடன் தண்ணீர்க் குடத்தைச் சுமந்து கொண்டு எங்கள் இளம் பெண்கள் போகிறார்கள். வயோதிபரும் நோயாளரும் முடங்கவே முடியாமல் முடங்கிக் கொள்ள கிடுகு கொட்டில்கள். அழுகை வருகிறது.

எங்கள் கிராமம். பூப்போன்ற புண்ணியபூமி. எங்கள் கிராமம் பயிர் விளையும் பசுமிலம். எங்கள் கிராமம் அழகிய நந்தவனம். அந்தக் காலம் நந்திக்கடல் களப்பில் வாப்பா நண்டு பிடித்துக் கொண்டு வருவார். அதிகாலைப் பொழுதில் குத்தூசியைக் கையில் எடுத்துக் கொண்டு போனால் வாப்பாவிற்கு நண்டுதான். மீன் பெட்டி நிறையக் கொண்டு வருவார். உம்மா பச்சை மிளகாய், வெங்காயம் நிறையப் போட்டு தீய்ச்சு எடுத்த வெண்டால்... இப்ப நினைத்தாலும் வாயூறும்.



சில நேரம் களப்பில் இறால் பிடிக்க நானும் வாப்பாவும் போவோம். கூனியும் பெரிய இறாலும் அம்பிடும்.

எங்கள் நிலத்தை எங்கள்- பசுஞ்சோலையை- எங்கள் விளைநிலத்தை எரித்து விட்டார்கள். எங்கள் பூமியை 'கருக்கிப் பொசுக்கி விட்டார்களாம்.

எனக்கு அறிவை அளித்த வித்தியாநந்தாக் கல்லூரி இருக்கின்றதா இல்லையா? தெரியாது. என் அதிபர் ஆறுமுகம் மாஸ்டர் இருக்கின்றாரா இல்லையா? தெரியாது. எங்கள் பள்ளி வாசல்? எங்கள் வீடு? நாங்கள் பிறந்த பூமி எங்கள் தாய்மண். எங்கள் உடல்கள் அதன் மீதுதான் அடங்க வேண்டும். ஆதங்கம் நிறைகிறது.

பக்கத்து முகாமடியில் தெருநாயொன்று ஊளையிடுகின்றது. சிந்தனை குலைந்தது வாய் புளித்தது. ஒரு சிகரட் பத்த வைத்தால் தான் சரி- மனதின் ஆக்ஞையை மீறமுடியாமல் எனது பொக்கற்றைத் துளாவி பிறிஸ்டல் ஒன்றை எடுத்து நெருப்புப் பற்ற வைத்தேன்.

அற்பமான சுகத்தை என்பது எனக்குத் தெரியாததல்ல. அந்த அற்ப சுகம் தேவைப்பட்டது. ஒரு நாளைக்கு எத்தனை சிகரட்டை எரித்து வீசுகிறேன். நுரையீரலில் ஓட்டை விழும். என் ஆயுள் குறையும். இது தற்கொலைக்குச் சமம்தான். பழக்கம் அடிமைப் படுத்திய அவலம். வெறுப்பும் வந்தது. ஆனால் என்னால் தவிர்க்க முடியவில்லை.

சிவப்புக் குருசை முகத்திலும் முதுகிலும் பொறித்த

> அவளோடு பள்ளிக்கூடம்
> போனது......
> அவளோடு வயல் வரப்புக்களில்
> நடந்தது.....
> அந்தரமாய் இருக்கிறது.

படி ஐ.சி.ஆர்.சி. வான் ஒன்று முகாம் அலுவலகத்தில் வந்து நின்றது. "இண்டைக்கு அம்மைப் பால் குத்தி இருக்காதவங்களுக்கு அம்மைப்பால் குத்த சனிட்டறி வந்திருக்கிறாராம்....." செய்தி முகாமெங்கும் காற்றின் வேகத்தில் பரவி விட்டது.

பள்ளிக்கூடத்தில் ஐந்தாம் வகுப்பில் அம்மைப் பால் குத்த சனிட்டறி வந்த நேரம் நானும் மேரியும் ஓடிப்போய் யாருக்கும் தெரியாமல் பற்றைக்குள் ஒழிந்து கொண்டோம்.

எல்லா இடமும் தேடிய மொனிட்டர் அரவிந்தன் தான் என்னைக் கண்டு பிடித்தான். தில்லையம்பலத்தார் வர ஒண்டும் பறையாமல் அவனுக்குப் பின்னால் போனோம். தில்லையம்பலத்தார் என்றால் அந்தச் சுற்று வட்டாரமே கிடு கலங்கும். தமிழும் எடுப்பார்- ஆங்கிலமும் எடுப்பார். அடி எண்டால் நெருப்பு!

சனிட்டறி ஸ்பிறிட் விளக்கைக் கொழுத்தினார். விளக்கு அணையாமல் தகர ஸ்ராண்டால் மறைத்தார். பால் குத்தும் ஊசியை நெருப்பில் சூடுகாட்டினார். பெரியவர்கள் ஒவ்வொரு பிள்ளைகளாய்ப் பிடித்து வந்தார்கள்.

மேரி அழுது கொண்டிருந்தாள். "அனஸண்ணா.... சனிட்டறி குத்தப்போறார். அங்கை...அங்கை.... நெருப்பிலை ஊசியைக் காச்சுறார். ஐயோ அனஸண்ணா...." கூடப் பிறக்கவில்லை அவள் கிறிஸ்தவம். நான் இஸ்லாம். வேற்றுப்புறிப்புகள் அவதரிக்காத அந்த நாட்கள். "அழாதே தங்கச்சி!" எனக்குத் தெரியும் அவள் இண்டைக்கு அம்மைப் பால் குத்த விடமாட்டாள். தில்லையம்பலம் வாத்தியார் எங்கையோ போய் விட்டார்.

மேரியின் கண்களைத் துடைத்து விட்டேன். "தங்கச்சி உதைக் குத்தினால் அம்மை நோய் வராது. உனக்குத் தெரியும் தானே பக்கத்து வீட்டு செல்லையாண்ணரின்ரை மகள் ரதிக்கு வந்திச்சே, மேலெல்லாம் பொக்களம் பொக்களமாய்; அதைப் போல வராமல் இருக்கிறதுக்குத் தான் உதைக் குத்திறது. ஓ." விம்மலை அடக்கினாள்.

நானும் அவளின் இடது கையைப் பிடித்தேன். அதற்குள் பிரம்போடு தில்லையம்பலத்தார் வந்து விட்டார். யாரும் அழவில்லை. அதன்பிறகு சனிட்டறிக்கு வேலை லேசாகிவிட்டது.

சிகரட் எரிந்து கொண்டிருக்கிறது. என் சிந்தனை அழிக்கவே முடியாத நினைவலைகளோடு பின்னிப் போய்விடுகிறது. ஒருநாள் குளத்தடியில் "மேரி.... இஞ்சாலை வா. உனக்கென்ன நீந்தவே தெரியும்....? முதலை இருக்கு வந்திட்டுதெண்டால் உனக்குத் தெரியாதே குமாரண்ணையை மாட்டோடை புடிச்சுக் கொண்டுபோனது...." மேரியின் நினைவுகளில் அழிக்க முடியாத நினைவுச் செல்வம். அவளோடு வயல் வரம்புகளில் ஓடியது. அவளோடு புளியங்குளத்தில் நீந்தியதும் குளித்ததும்...... அவளோடு பள்ளிக்கூடம் போனது.

அந்தரமாய் இருக்கிறது....அவதிச்சுமை. மேரி இல்லாத வாழ்வு அஸ்தமனமாய்..."தங்கச்சி அடியேய்" கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து "அனஸண்ணா...." என்பாளே! மனதினில் எரிகிறது. அவளைப் பிரிந்து இன்று எத்தனை வருடங்கள்? அவளின் நினைவாய் என் மூத்த குழந்தைக்கு "மர்யம்" பெயர் வைத்து ஆறுதலடைந்தது மட்டுமே!

"மகன்! வாப்பா படுத்திருக்கிறார். நீ போய் முகாம் கடையிலை அரை போத்தில் தேங்காயெண்ணை வாங்கி வாறியே."

"உம்மா அதோடை ஒரு பிறிஸ்டலும்....."

"உனக்கு உந்தக் கோதாரியை விட ஏலாதே? எவ்வளவு சொன்னாலும் விட மாட்டியே?" உம்மா வயிறெரிஞ்சா. "என்ன செய்வது பழகியாச்சு........"

அங்கை மேரி என்ன பாடு படுவாளோ. தண்ணீரூற்று சேர்ச்சுக்குக் கிட்டத்தான் அவள் வீடும் இருக்கிறது. எங்கள் வீடும் ஒரே வேலிதான். கலியாணம் முடிச்சிருப்பாளோ....! என் தேசம் பற்றி எரிகிறது. முல்லைத்தீவு முழுக்க குண்டு போட்டிருப்பாங்கள். தண்ணிரூற்றும் எங்களும் குண்டுக்கு இரையோ? -எனதுகால்கள் நடக்கின்றன.

அம்மாவிடம் தேங்காயெண்ணையைக் கொடுத்து விட்டு வாங்கிக் கொண்டு வந்த தினமுரசை விரித்தேன். கையில் சிகரட் பத்திக்கொண்டிருந்தது. சிகரட்டின் இனிமை மனமெங்கும் வியாபித்துக் கொண்டிருந்தது.

திடீரென அய்யாத்துரை அண்ணர் சொன்ன விஷயம் நெஞ்சில் உதைத்தது. "எங்கள் நாட்டில் சிகரட் பொன்முட்டையிடும் வாத்து.... சிகரட்டின் வருமானத்தில் ஒரு பகுதி யுத்தத்திற்காகப் போகிறது."

என்மேலேயே எனக்கு ஆத்திரம் வந்தது. என் மலர்கிராமம் எரிந்து கொண்டிருப்பது தெரிந்தது. அடா நானுமா என் தேசத்தை எரித்தது?' உணர்வுகள் குமுறிட்டன. இதயம் நெருடியது. மனதுக்குள் இன்னொரு மனம் என்னைத் திட்டிக் கொண்டிருந்தது. கையிலிருந்த மீதிச் சிகரட்டை வீசி எறிந்தேன்.

# காயம் பட்ட வாழ்க்கை




சிலாபம் பொ. புஷ்பராஜ

வானம் கறுத்துக் கொண்டிருந்தது. கணபதி பீலி லயத்துக் காம்பராவுக்குள் கயிற்று கட்டிலில் படுத்துக் கொண்டு சாரத்துக்கு இடையில் இடுப்பில் சொருகியிருந்த பீடியை எடுத்து பத்த வைத்து சுருள் சுருளாக வாயிலிருந்து புகையை கக்கிக் கொண்டிருந்தான். அப்போது கணபதியின் மனைவி பாப்பாத்தி கொழுந்துக் கூடையை முதுகில் சுமந்தபடி லயத்து காம்பராவுக்குள் நுழைந்தவள், கூடையை ஆணியில் மாட்டி வைத்துவிட்டு "மச்சான் லயத்து படிக்கட்டு பாதையில் ஒரே சனகூட்டமாகயிருக்கு. கொஞ்சம் போய்த்தான் பாருங்களே....." என்றாள்.

ஒரு தம் இழுத்து விட்டு வாயிலிருந்து துண்டுப் பீடியை லயத்து கானுக்குள் வீசி விட்டு படிக்கட்டு பாதை அருகே ஓடினான்.

அங்கு கணபதி வந்ததும் சனக் கூட்டம் அவனை கொஞ்சம் வித்தியாசமாகப் பார்த்தது. கணபதி சிவனுவைப் பார்த்து "என்ன நடந்து போச்சு அண்ணே? எல்லாம் கூட்டமாகயிருக்கீங்க?"

"கணபதி! உன் மரக்கறி தோட்டத்தை நம்ப தோட்டத்து தொரை நம்ப ஆளுகள வச்சே அழிச்சுப் புட்டாம்பா. அதுதான் என்னா செய்யலாம்னு யோசிக்கிறோம்." என்றான் சிவனு.

"அடப்பாவி பய பெத்த பிள்ள. அந்த தொர இந்த அநியாயம் பண்ணுவான்னு எனக்குத் தெரியும். அவனை ஒரு கை.... பார்த்தால் தான்சரி!"

"கணபதி சும்மா ஒண்ணும் கத்தாதே. இப்ப காலம் கெட்டுப் போயிருக்கு. நம்ப சனங்களுக்கே கெட்டகாலம். நீயும் பொறுமையாயிரு!"

யார் சொல்லியும் கணபதி கேட்கவில்லை. நேராக தோட்டத்து துரையின் பங்களாவுக்குச் சென்றான். தோட்டத்து துரையின் பங்களா அரண்மனை மாதிரி. அந்த பங்களாவை சுற்றி பூக்கன்றுகள், பச்சைப் பசேலென செழித்து வளர்ந்திருந்தன. பங்களாவின் முன் வாசலுக்கு எதிராக உயர்ந்து வளர்ந்திருந்த தேக்கு மர நிழலில் உட்கார்ந்து சாராயம் குடித்துக் கொண்டிருந்தான் துரை. ஒரு பீங்கான் கோப்பையில் கோழி இறைச்சியிருந்தது. அவனுக்கு அருகே இரண்டு அடி உயரத்தில் இரண்டு அல்சேஷன் நாய்கள். நாய்களுக்கு இரண்டு எலும்புத்துண்டுகளை வீசி விட்டு "என்னா பங்களா வந்தது மேன்?" என்றான் துரை.

குடிவெறியில் தோட்டத்து துரையைக் கண்டதும் கணபதியின் இதயம் 'பட்பட்' டென்று அடித்தது. தவளையைப் போல பெரிய சத்தமாய் மேல் மூச்சு வாங்கியது. முழு உடலும் நடுங்கியது.

"என்னூட்டு மரக்கறி தோட்டத்தை அநியாயமா அழிச்சுப் புட்டீங்களே. சீமை தொரமாரு காலத்துல யிருந்து எங்க தாத்தா, அதுக்குப் பொறகு எங்க அப்பா, இப்ப நானு பாடுபட்ட காணிங்க. வெள்ளக்கார சீமை தொரமாரு எங்க தாத்தாவுக்கு சந்தோசமா கொடுத்த காணித்துண்டு. இதை போயி நாசமாக்கிட்டீங்களே."

"யாருடா நாசமாக்கியது?"

"தொர நீங்க தான் எங்க சனங்களை வைச்சே நாசமாக்கிபுட்டீங்க."

"டேய் கணபதி நீ தெரிஞ்சுக்கோ! இது உன் தாத்தா அப்பன் காணியில்ல. நம்ப கம்பெனிக்கு சொந்தமான காணி. நாங்க இந்த தோட்டத்து ஆட்களுடைய மரக்கறி தோட்டத்து காணியை பக்கத்து கிராமத்து மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப் போறான். அவுங்கள் காணி இல்லாம கஷ்டப்படுறான். மிச்சம் பேசினா என்னைய தெரியும்தானே?"

துரையின் பேச்சு கணபதியை கொதிப்படையைச் செய்தது. கவ்வாத்து கத்தி மட்டும் அவன் இடுப்பில் இருந்திருந்தால் உண்மையிலேயே தோட்டத்துரையை அந்த இடத்திலேயே கண்ட துண்டமாக வெட்டி வீசியிருப்பான். முரடன் அவன். ஒரு முறைப்பு முறைத்தான்.

"எங்க தாத்தா பத்து வயசுல இந்த தோட்டத்துக்கு வந்தவரு. என் அப்பா பொறந்தது. நான் பொறந்தது எல்லாமே இந்த தோட்டத்திலதான். என் வயசில முழுப் பகுதியும் இந்த தோட்டத்து மண்ணுக்கே போயிடுச்சு. நான் பட்ட கஷ்டம், துன்பம், துயரம், இன்னல் எல்லாம் இந்த தேயிலை செடிகளுக்காகத்தான் மாடாய் உழைத்தேன். இது தானே என் மண்ணு. எங்க தாத்தா, அப்பத்தா, அப்பா, அம்மா, எல்லோருமே செத்தபிறகு இந்தத் தோட்டத்து மண்ணுலதான் பொதைச்சாங்க. நான் கலியாணம் செஞ்சது, பிள்ளைகளைப் பெத்தது எல்லாமே இந்த மண்ணுலதான். அந்த பீலி தண்ணீயிலதான் சின்ன வயசுல குளிச்சுபுட்டு, ஸ்கூலுக்குப் போவேன். இதுதான் என்நாடு, என் தேசம் எல்லாமே இந்த தோட்டம்தான்."

துரையின் முகம் கோபத்தில் சிவந்து கொண்டிருப்பது தெரியாமல் அவன் தொடர்ந்து பேசினான்.

"ஐம்பது வருசமா நான் வாழ்கிற காம்பரா- அரைடசின் பிள்ளைகளையும் பாப்பாத்தி அந்தக் காம்பராவுக்குள்ளதான் பெத்தெடுத்தாள். அந்த காம்பராவுக்குள்ளதான் இதுவரை ரெண்டு கலியாணம் செஞ்சுப் பார்த்துட்டேன். வெள்ளைக்கார சீமை தொரமார் போட்ட சல்லடை கூரை, சரிஞ்சு விழப்போகும் சுவரு, உளுத்துப் போன கதவு, வெளிச்சத்தையோ, காற்றையோ காணாத காம்பரா. இதையும்தான் எனக்கு சொந்தமா தான்னு அரசாங்கத்துக்கிட்ட கேட்டிருக்கிறோம். இதையுமா தொர என்னுக்கிட்டயிருந்து புடுங்கிட்ட போறீங்க?"

"என்னடா நீ மொதல்ல காணி கேட்டது. இப்ப வீடு கேட்கிறது. இன்னம் கொஞ்ச நேரம் போனா நம்ப பங்களாவையும், இந்த அல்சேஷன் நாய்கள் ரெண்டையும் கேட்பாயோ? எனக்கு ஒண்ணும் புரியல்ல. அந்த வடிவேலு மகனைப் போல உன்னையும் புடுச்சிக் கொடுத்தா தான் இந்த தோட்டம் சரிவருவான்."

துரையின் இந்தப் பேச்சைக் கேட்டதும் கணபதி பயந்து விட்டான். "தொர நான் புள்ளைகுட்டிக் காரனுங்க. நேத்துதான் கடைசிப் புள்ளையும் பெரிய மனுசியாகியிருக்கு. பெரிய மகளும் நெற மாசம். வீட்டுக்கு வந்திருக்கா. இப்ப போய் என்னையையும் ஒன்று செய்துடாதீங்க. கையெடுத்து கும்புடுறேன் சாமி. என்ன புடுச்சி குடுத்துடாதீங்க. மாரியாத்தா சத்தியமா இனி ஒன்றுமே கேட்கமாட்டேன் தொர. என்ன மன்னிச்சுடுங்க. நீங்க பெரியவங்க. ஏதோ நினைப்பில பேசிப்பிட்டன். நீங்கள் மனசு வைச்சா..." இப்போது தேயிலை செடிகளுக்கு அடியில் இருக்கும் அட்டையைப் போல கூனிக் குறுகி தன் தலையை சொறிந்துக் கொண்டான், கணபதி.

கணபதியை பார்க்க தோட்டத்து துரைக்கு பரிதாபமாகயிருந்தது. "சரி சரி நீ போ. தோட்டத்து சனங்களுக்கு அது, இது கேட்க சொல்லி கொழுப்பம் பண்ணாதே! போ. சரியா."

ஆள் தப்பினால் போதும் என்ற நினைப்பில் கணபதி தோளில் துண்டைப் போட்டுக் கொண்டு லயத்துப் பக்கமாக நடக்கத் தொடங்கினான். பங்களா மலை உச்சியிலிருந்து தூரத்தே பல ஏக்கர் காணி காடாக தரிசாகக் கிடப்பது அவன் பார்வையில் விழுந்தது. 'அந்தக் காட்டை அழிச்சு மரக்கறி தோட்டம் போட்டா' கணபதியின் மனம் பேசியது.

'ச்சே நாங்க வளமாக வாழ எவனுமே விட மாட்டானுங்க எங்களை பயமுறுத்தி, பயமுறுத்தியே வாழப் பழக்கி புட்டானுங்க' என முனகிக் கொண்டே அழுதான். அவனுடன் சேர்ந்து தேயிலை செடிகளும் சவுக்கு மரங்களும் அழுதன.

# புரியாதது

ஷர்மிளா இஸ்மாயில் - கண்டி

டி.வியில் கார்ட்டூன் படம் பார்த்து இரசித்தவன் ஒரு கட்டத்தில் 'பக்'கென சிரித்து விட்டான்.

அம்மா முறைத்துப் பார்த்தாள். பின் முணு முணுத்தாள். "இருபத்தஞ்சு வயசாகுது. கழுதை. இன்னும் இந்த உலகம் புரிஞ்சபாடில்லை. எனக்குன்னு வந்து பொறந்தானே!"

அவனுக்கு நன்றாகக் கேட்டது; அம்மாவின் எரிச்சலுக்கான காரணம் புரிந்தது.

அவனுக்கு பெண் பார்க்கப் போக புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அம்மா, அப்பா, அண்ணா, அண்ணாவின் மனைவி பிள்ளைகள், இன்னும் தங்கை, தம்பி என ஒரு பெரிய படை- என்னவோ நாடு பிடிக்கப்போவது போல். அவனுக்கு வெறுப்பாயிருந்தது.

அவன் வெறுத்தாலென்ன? விரும்பினாலென்ன? அதையெல்லாம் கருத்திலெடுக்க யாருமில்லை. சுருங்கச் சொன்னால் அவனை அவர்கள் இன்னும் 'உலகம் புரியாதவனாய்க்' கணிப்பிட்டு வைத்திருந்தார்கள்.

காரணம் அவன் குணம் அப்படி.. எதிலும் மென்மை. கனிவு அலாதியான கற்பனைகள், வாழ்க்கை பற்றிய அவனது நோக்கு அவர்களது இயந்திரத் தன்மையினின்றும் அப்பாற்பட்டிருந்தது.

பார்க்கையில் அவனுக்குள் லேசான கொதிப்பு. அம்மா வேறு அண்ணாவுடன் சேர்ந்து அங்கலாய்த்தாள். பேசாமல் இருந்தான்.

அதைப் போலவே தங்கைக்கு ஒரு பட்டுச் சேலையை ஒரு முறை அவனாக வாங்கி வந்து அலட்சியப் படுத்தப்பட்டான். இவ்வாறு எத்தனை முறைகள்; எத்தனை சந்தர்ப்பங்கள். அப்பா மட்டும் என்னவாம்? படிக்கும் காலங்களில் பாடங்களில் எத்தனை உயர் புள்ளிகள் எடுத்தாலும் ஒரு பாராட்டில்லை. ஆனால் எப்போதாவது ஐம்பதுக்கு குறைவாய் எடுத்து விட்டானோ அன்றைக்கு வீடே இரண்டு படும். ஓயாமல் ஏச்சுப் பேச்சுகள்.



அண்ணாவும் இவனை அப்படியே நடத்தி வந்தான். தான் பெரியவன், தனக்கே சலுகைகள் என உரிமையோடு. உண்மையில் இவனுக்கு அவர்களை புரியவில்லை. அவர்களுக்கும் இவனைப் புரிந்து கொள்ளும் ஆர்வமில்லை. யோசித்துக் கொண்டிருந்தவனை அண்ணா வந்து உலுக்கினான்.

"எழும்பு. ரெடியாகு. பொண் பார்க்கப் போறோமில்லை. சடுதியா ரெடியாகிக் கிளம்பு."

அமர்த்தலாக கேட்டும் கேட்காதவனாய் கட்டிலில் சாய்ந்து கொண்டிருந்தவன் அண்ணாவை வெறித்துப் பார்த்தான்.

அதனால் உலகம் புரியாதவன் என்ற பட்டம் இலவசமாய் வந்து கழுத்தில் தொங்கியது.

நினைத்துப் பார்த்தான். பெருமூச்சு வெளிப்பட்டது. 'என்னை என்று இவர்கள் புரிந்து கொள்ளப் போகிறார்களோ?' எழுந்து போய் கட்டிலில் சாய்ந்து கொண்டான்.

யோசிக்கையில் ஞாபகம் வந்தது. முதன் முதலாக அவன் அண்ணாவுக்கு 'ஷேர்ட்' ஒன்று வாங்கி வந்தான், அன்புடன் அவன் பிறந்த நாள் பரிசாக. அண்ணா மகிழவில்லை. "ஏன்டா, இத்தனை விலை கொடுத்து இதைப் போய் வாங்கினியே! இதுக்கும் குறைவா என் நண்பனோட கடையில வாங்கியிருக்கலாம். கொஞ்ச நேரம் பேரம் பேசியிருந்தாலும் குறைச்சுக் கொடுத்திருப்பான். அதையெல்லாம் செய்ய மாட்டியே!"

அலுத்துச் சலித்துக் கொண்ட அண்ணாவைப் பின் "யாருக்காக பொண் பார்க்க போறீங்க?" கேட்டான். அண்ணா இந்த வினாவை அடியோடு எதிர்பார்க்கவில்லை என்பது அவன் முகத்தில் தெரிந்தது.

"உளறாதே! உனக்குத் தான். என்ன திடீர்னு கேள்வி?" அழுத்தமாய்க் கேட்கவும் அம்மாவும் வந்தாள். அவன் வாயைத் திறந்தான் இப்போது.

"எனக்குத் தானே? நீங்க யாரும் கஷ்டப்படாதீங்க எனக்காக வேண்டி! எனக்கான பொண்ணை நானே பார்த்துக் கொண்டேன். நாளைக்கு கூட்டிட்டு வர்றேன்; வேணுன்னா நீங்க பார்த்துக் கொள்ளுங்க." அதிர்ந்தார்கள் அவர்கள். அவன் காதலியைப் பற்றி சொல்லி விட்டு மல்லாக்கப் படுத்துக்கொண்டான். அவனது உலகத்தைப் புரியாதவர்களாய் அதிர்ச்சியில் இன்னும் உறைந்திருந்தார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

# இதுதான் மெய்!

து ரு வ து ர சி க ன்

"நினைவிருக்கிறதா நின் கடமை?"
நேர் நின்று கேட்டவன் பல்லவ மன்னன்.
கேட்கப்பட்டவள் ஒரு சித்திரப்பாவை!

"நெஞ்சில் நிறைந்திருக்கிறது மன்னா!"
கொஞ்சும் இதழ் திறந்து பதில் உதிர்ந்தது!
"காது குளிர ஒரு தரம் எடுத்துச் சொல்!"

"பாண்டிய மன்னனின் நெஞ்சத்தில்
நாட்டியமாடி இடம்பிடிப்பது-பின்னர்
அவன் மஞ்சத்தில் தடம்பதிப்பது!"

"மஞ்சத்தில் இந்த மாணிக்க உடல்
ஏன் உருளவேண்டும்?"
"பாண்டியனின் மகுடம் உருளவேண்டுமானால்
அவன் கன்னத்தில் உரசிக்கொண்டே
அங்கே கன்னக்கோல் சாத்தவேண்டும்!"
மன்னன் முகம் மலர்ந்தது.

"கட்டான பெண்ணே!
இட்ட பணியை முடித்துக் காட்டு!"

"தட்ட முடியாத பணி-பாண்டியன்
தப்பவிடக்கூடாத பிணி!-மன்னா!
வெற்றி எனக்கு எட்டும் கனி!"

"தேனில் தோய்ந்த வார்த்தைகளால்
செவியில் பாய்கிறது தேனருவி!"

"நினைப்பது நடக்கும் மன்னா!"
"நடந்தால் நெஞ்செல்லாம் இனிக்கும் பெண்ணே!"

"தரையில் உருளும் பாண்டிய மகுடம்.
கடந்து வருவேன் என்ன தருவீர்கள்?"

"நீ தவழ, நெஞ்சாரச் சாய
மஞ்சமாக என் நெஞ்சம் தருவேன்!

சித்திரப்பாவை சிட்டாகப் பறந்தாள்.
பாண்டிய சபையில் பாவையின் நடனம்.
சொக்கிப் போயினர் சபையிலுள்ளோர்.
கொக்கி போட்டாள் கோல விழிகளால்!

"முக்கனி வேண்டுமா?
முல்லைப்பூவாக மாறவா-என்
மன்னவா-மன்னவா!
மலர்ச் செண்டு இவ்விடம்
மதன வண்டு அவ்விடம்
இரண்டும் சேர்வதெப்போது ஓரிடம்?"

கண்டவர் மயங்க, கனிகள் குலுங்க
நந்தவன மேனியாள் நடனமாடினாள்.

வியந்து திறந்த விழிகள் மூடவில்லை.
மறந்து திறந்த வாய்கள் மூடவில்லை.
பிறந்ததே இதற்குத்தானோ என்று - மெய்
இறந்தவர் போல சிலையாகினர் யாவரும்!

"எண்ணிரண்டு வயது, கனியிரண்டும் இனிது!
கண்ணிரண்டு போதுமோ, கையிரண்டு காணுமோ?
பொன்னிருக்கும் பொருளிருக்கும் உன்னிடம்,
பூவிருக்கும், புதுச் சுவையிருக்கும் வா என்னிடம்!"

மயங்கிக் கிடந்தது சபை.
மன்னனாக இல்லாமல் போனோமே
என்று எண்ணாதவர் எவருமில்லை!
மன்னன் மட்டும் மனம் மாறவில்லை.
மந்திபோல அவன் மனம் தாவவில்லை!



"நானுன்னை சேரலாம்
நாலவிழி மயங்கலாம்
நாமினி ஒருவராகலாம்
தா இனி உன்னைத் தா!
வா இனி உனக்குத்தான்!"

நடனம் முடிந்தது. மன்னவன் நகைத்தான்.
"புள்ளிமயிலே! துள்ளியாடினாய்!
அள்ளித்தரட்டுமா-அல்லது
பள்ளியறையில் அளந்து தரட்டுமா?"

"தரிசாய் கிடக்கும் நிலம் நான் மன்னா;
பரிசாய் நீங்களே எடுத்துக் கொள்ளலாம்!"

"மன்னனுக்கே பரிசா?
மட்டற்ற மகிழ்ச்சி எனக்கு!"

"பாண்டிய மன்னன்
என்னால் மகிழ்ந்தது எனக்குப் பெருமை!
நெஞ்சம் முழுவதும் நிறைவாக இனிமை
தஞ்சம் தந்தீர் நான் உம் அடிமை!"

"அடிமையாக வந்தாயா?
அடிமையாக்க வந்தாயா?"

"ஆளும் மன்னர் நீர்-ஆட்டுவித்தால்
ஆடும் பொம்மை நான்.
வாடும் கொடி இது-உம்மை
நாடி வந்திருக்கிறது!"

"மடமானே! மரமா நான்?"
"பெருமானே! பொறுத்தருள்க
உவமைக்காய் உரைத்த சொல்லது!"
"பெண்மானே' கனி இருக்க காய் எதற்கு?
உவமைக்காயும் காய் வேண்டாம்!"
விலா நோக நகைத்தான் வேந்தன்.

நினைத்து பலித்த நினைப்பில்
மனமது இனித்த சுவைப்பில்
கட்டழகி புகுந்தாள் கட்டிலறைக்குள்!
கண்ணெதிரே தோன்றினாள் பட்டத்து
-ராணி!

மஞ்சத்தில் மன்னன் எங்கே?
கொஞ்சவந்த இடத்தில் குறுக்கே ராணியா?
நெஞ்சத்தில் வினா. நெற்றியில் சுருக்கம்.

"யாரைத் தேடுகிறாய்?"
ராணி கேட்டாள்.
"பாராளும் மன்னனை!"
துடுக்காய் உரைத்தாள்.
"பாராளும் மன்னனை
பள்ளியறையில் ஆள வந்தாயா?"
"வரச்சொன்னது மன்னன்-என்னில்
வருத்தப்பட்டு பயன் இல்லை!"

மன்னனும் அங்கே தோன்றினான்.
மான் மிரண்டு பார்த்தது.
"உறை ஒன்று, வாள் இரண்டு
முறையல்லவே பள்ளியறைக்கு?"

மன்னன் மௌனித்தான்.
பட்டத்து ராணி முன்னே நகர்ந்தாள்.
பளார் என்று கன்னத்தில் அறைந்தாள்!

"மன்னா என்ன இது?"
நடனக்காரி நடுங்கிக் கேட்டாள்.
"எல்லை தாண்டியதற்கு விலை.
பள்ளியறைக்கு உன்னை அழைத்தது
மஞ்சத்தில் அணைத்துக் கொஞ்சவல்ல
உன் நெஞ்சத்தில் படிப்பினை பதிக்க!"

"என்ன படிப்பினை?"
"பாம்புகள் புகுவதற்கு
பாண்டிய மன்னன் அந்தப்புரம் புற்றல்ல.

காலில் சுற்றிக் கழுத்தில் கொத்த
பாண்டியன் கண்கள் குருடல்ல!
நீ அழகிதான்-ஆனால்
உன்னைவிட அழகி என் ராணி.
உருவத்தால்-உள்ளத்தால்-என்
உயிரோடு கலந்த பாசத்தால்!

விரக்தியோடு வியந்தாள்.
"துறவியானீரோ நீர்?" என்றாள்.
"உண்மை! அளவுக்கு மீறிய
ஆசைகள் விடயத்தில் உண்மை!"

"ஆடையாளம் இல்லாத துறவி
அதுதான் அடையலாம் என்று நம்பிவிட்டேன்!"

"என்ன அடையாளம்?"
"மொட்டையும் நீர் போடவில்லை.
முழு நீளமாக சடையும் வளர்க்கவில்லை."

"மொட்டை, சடை, முழுக்காவி-கழுத்திலொரு
உருத்திராட்சக் கொட்டை!
துறவறத்தின் அடையாளம் தோற்றமல்ல!"
"வேறென்னவோ!"

"மழித்தலும் வேண்டாம், நீட்டலும் வேண்டாம்
உலகம் பழிக்கும் தீயொழுக்கத்தை
உள்ளத்தில் இருந்து ஒழித்தால் போதும்!
புறத்தோற்றம் பொய்!
அகத் தூய்மையே மெய்!"

"புதுவிளக்கம்!"
"இல்லைப் பெண்ணே!
இது திருக்குறள் விளக்கம்!

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்துவிடின்."
குறள்-280- அதிகாரம் : 28.

## ஸ்போர்ட்ஸ்

## புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

உலகின் தலைசிறந்த சகலதுறை ஆட்டக்காரர்களில் ஒருவரான இங்கிலாந்தின் இயன் பொத்தம் 1992ம் ஆண்டு உலகக் கோப்பை போட்டிக்குப் பின்பு கிரிக்கெட் விளையாட் டில் இருந்து ஓய்வு பெற்றார்.

அவரது மகன் லியாம் பொத்தம் தற்போது இங்கிலாந்தின் கவுன்டி அணிகளில் ஒன்றான ஹம்ஷயர் அணிக்காக விளையாடி வருகிறார். தனது முதல் போட்டியிலேயே மிடில்செக்ஸ் 67 ஓட்டங்கள் கொடுத்து 6 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார். இதனால் மிடில்செக்ஸ் அணி 199 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

லியாமின் பந்து வீச்சில் பலியான முதல் வீரர் இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டனும், இயன் பொத்தமின் சகாவுமான மைக் கட்டிங் என்பது குறிப்பிடத்தக்கது.

"தந்தையைப் போலவே தலை சிறந்த வீரராக லியாம் பிரகாசிப்பார்," என்று மைக் கட்டிங் வாழ்த்தினார்.

19 வயதான லியாம், 1997ம் ஆண்டின் இறுதிக்குள் இங்கிலாந்து அணியில் இடம் பெறுவாரா? என்பது குறித்து இப்போதே இங்கிலாந்தில் பந்தயம் கட்டத் தொடங்கி விட்டனர்.

## மரடோனா விலகுவாரா?

கனடாவில் உள்ள ரொரண்றோ நகரில் 1ம் திகதி ரொரண்றோ இத்தாலியா மற்றும் கனடா லீக் அணிகளுக்கு இடையே கால்பந்து போட்டி நடந்தது.

ரொரண்றோ இத்தாலியா அணியில், பிரபல கால்பந்து வீரர் டியாகோ மரடோனா, தனது சகோதரர் லாலோ மரடோனாவுடன் கலந்து கொண்டார்.

போட்டிக்கு வந்திருந்த டியாகோ மரடோனா நிருபர்களிடம் கூறியதாவது:

"எதிர்காலத்தில் நான் தொடர்ந்து விளையாடுவது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை. இரண்டு மாதம் கழித்து, மீண்டும் விளையாடுவதா? வேண்டாமா?



என்று திட்டவட்டமாக அறிவித்து விடுவேன்." இவ்வாறு மரடோனா தெரிவித்தார்.

## வருமானம் 400 கோடி



உலக அதிபார (ஹெவி வெய்ட்) பிரிவு குத்துச்சண்டை சம்பியன் மைக் டைசன் கற்பழிப்பு வழக்கில் சிக்கி 3 ஆண்டுகள் சிறையில் கழித்தார்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் விடுதலை ஆனபின்பு மீண்டும் குத்துச்சண்டைப் போட்டியில் டைசன் பங்குபற்றி வருகிறார்.

7ம் திகதி புரூஸ் செல்டன் என்ற வீரருடன் மோதுவதற்காக டைசன் லாஸ் வேகாஸ் நகரில் பயிற்சி பெற வந்தபோது அங்கு நிருபர்களிடம் பேசுகையில்,

"சிறையில் என்னை மற்றவர்களை விடக் கொடுமையாக நடத்தினார்கள். சிறை வாழ்க்கை என்னை மாற்றவில்லை. நானாகவே என்னை சில விஷயங்களில் மாற்றிக் கொண்டேன்," என்று கூறினார்.

சிறையில் இருந்து விடுதலையான பின்பு குத்துச்சண்டைப்போட்டிகள் மூலம் டைசன் 400 கோடி ரூபாய் சம்பாதித்துள்ளார். இந்த வருமானம்தான் டைசனுக்கு எதிரி. ஏனெனில் டைசன் இல்லாவிட்டால் அந்த வருமானம் தமக்கு வருமே என்ற ஆசையில் தான் டைசனின் போட்டியாளர்கள் சதி வலைகளை விரிக்கிறார்கள். அதில் டைசனை வீழ்த்திவிட நினைக்கிறார்கள்.

## சிந்தியா பதில்கள்

* சிங்கர் கிண்ணப் போட்டிகளில் இதுவரை உம்மைக் கவர்ந்த வீரர் யார்?
இ. சோதிலிங்கம், தெகிவளை.

இலங்கை அணி தோல்வியின் விளிம்பில் நின்றபோது சற்றும் மனம் தளராமல் ஆடி, அடிமேல் அடி அடித்து வெற்றிக் கனியைப் பறித்துக்கொடுத்த அரவிந்த டி சில்வாவின் ஆட்டம்.

◘◘

* டியர் சிந்தியா! தற்போதைய நேரமாற்றம் யாருக்கு இலாபம்?
ஜெ. அப்துல் அஸீஸ், தெல்தோட்டை.

சப்பாத்துக்கு அளவாக கால்களை வெட்டுவதால் யாருக்குத்தான் இலாபம்?

◘◘

* பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும் என்கிறார்களே. எப்படி?
எம். சொரூபன், திருமலை.

ஒருத்தருக்கு காது சுத்தமாக கேளாது. அதை வெளியே காட்டிக்கொள்ள அவருக்கு வெட்கம்.

ஒருநாள் அவர் பஸ்ஸில் போய்க் கொண்டிருந்தார். பக்கத்து இருக்கையில் இருந்தவர் ஏதோ சொல்லிக் கொண்டே வந்தார். இவருக்கு எதுவுமே கேட்கவில்லை. பஸ் நின்றதும் இருவரும் இறங்கினார்கள்.

தனது குறையை மறைக்கிறதுக்காக இவர் சொன்னார்: "நீங்கள் ரொம்ப அபூர்வமான விஷயங்களெல்லாம் சொல்லிக் கொண்டு வந்தீர்கள். மிக்க நன்றி."

உடனே மற்றவர் என்ன சொன்னார் தெரியுமா?

"நான் எங்கே உங்களுடன் பேசினேன்? வாய்க்குள் இருந்த சூயிங்கத்தையல்லவா மென்று கொண்டிருந்தேன்!"

◘◘

* ஆளாளுக்குத் தகுந்தாற்போல நடந்து கொள்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?
எம்.எம். றுவைஸ், கொழும்பு-10.

சில நேரங்களில் அதுவும் முக்கியம் தான். ஒரு கதை சொல்கிறேன். கேளுங்கள்.

எல்லோரையும் அனுசரித்து அன்பாக நடந்து கொள்வது எப்படி என்று ஒரு பெரியவர் இளைஞன் ஒருவருக்கு சொல்லிக் கொடுத்தார். "அடுத்தவர் தோளில் கைபோட்டு அன்பாக நடக்க கற்றுக்கொள். வாழ்க்கையில் எங்கோ போய் நிற்பாய்" என்றார் பெரியவர்.

மறுநாள் முகத்தில் வாட்டத்துடன் பெரியவரிடம் வந்தான் அந்த இளைஞன். "நீங்கள் சொன்னபடி செய்து பார்த்தேன். என் வேலையே போய்விட்டது!" என்று சொன்னான்.

"என்னப்பா நடந்தது?" என்றார் பெரியவர்.

"அடுத்தவர் தோளில் கைபோட்டு அன்பாகப் பேசவேண்டும் என்று சொன்னீர்கள். அப்படித்தான் பேசினேன். அவர் முதுகைக் கூடத் தட்டிக் கொடுத்தேன். வீட்டுக்கு போ என்று அனுப்பிவிட்டாரே!" என்றான்.

"யாருடன் பேசினாய்?" என்றார் பெரியவர்.

"என் முதலாளியிடம்!"

◘◘

* விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வது அவசியமா?
எல். செந்தில்வேல், மட்டக்களப்பு.

பேச்சுவார்த்தை கதவுகள் மூடப்படவில்லை என்றும் அரசாங்கம் சொல்கிறது. அது உண்மையானால் புலிகளுக்கு தடை விதிப்பது திறந்துள்ள கதவு முன்பாக பெரும் சுவர் கட்டி தடுப்பது மாதிரியாகி விடும். புலிகள் கொரில்லாக்கள்தானே; தேவைப்பட்டால் ஒரே பாய்ச்சலில் தடைச் சுவரைத் தாண்டி உள்ளே வந்துவிடுவார்கள் என்று அரசாங்கம் நினைக்கிறதாக்கும்.

◘◘

* துன்பம் வரும்போது சிரிக்க முடியுமா?
ஏ. சின்னதம்பி, நுவரெலியா.

முடியும். ஒரு குட்டிக்கதை கேளுங்கள்.

ஒரு ராஜாவுக்கு பிறந்தநாள். ராஜாவுக்கு பழங்கள் என்றால் உயிர்.

ராஜாவைப் பார்த்து பிறந்தநாள் வாழ்த்துச் சொல்லப் பெரிய கூட்டமே திரண்டு வந்து கியூவிலே நின்றது.

அன்றைக்கு என்று பார்த்து ராஜாவுக்கு ராணியோடு ஒரு தகராறு. மூட் அவுட்டாகி இருந்தார் ராஜா.

கியூவிலே நின்றவர்கள் ஒவ்வொருத்தராக உள்ளே போனார்கள். முதலில் போனவர் எலுமிச்சைப் பழம் வைத்திருந்தார்.

"இந்த எலுமிச்சைப்பழத்தை இவன் வாய்க்குள் திணித்து அமுக்கி விடுங்கள்" என்றார் ராஜா. அப்படியே செய்யப்பட்டது.

"சரி நீ போகலாம்." என்றார் ராஜா. அவனோ சிரித்துக் கொண்டே போனான். ராஜாவுக்கு ஒரே ஆச்சரியம்.

"நில் இங்கே! ஏன் சிரிக்கிறாய். உனக்கு வேதனையாக இல்லையா?" என்றார் ராஜா.

அதுக்கு அவன் என்ன சொன்னான் தெரியுமா?

"என்நிலையே இப்படி என்றால், எனக்குப் பின்னாடி ஒருத்தர் பலாப் பழத்துடன் நின்று கொண்டிருந்தார். அவர் நிலையை எண்ணிப் பார்த்தேன். சிரிப்பு வந்துவிட்டது." என்றானாம்.

◘◘

* விடுமுறை தினங்கள் குறைக்கப்பட்டதால் நாட்டுக்கு நன்மை ஏற்படுமா?
கு. ரவிக்குமார், வவுனியா.

கொடுமுறையான யுத்தம் தீரும்வரை, விடுமுறைக் குறைப்பால் ஏற்படும் பலன்களும் கடலில் போட்ட உப்புக்கட்டிதான். தவறு எங்கோ இருக்க, வேறெங்கோ திருத்த வேலை நடக்கிறது.

◘◘

* ஜெயலலிதா சசிகலாவை ஒதுக்கி வைத்து விட்டாராமே? ஆச்சரியமாக இல்லையா?
சி. சக்திவடிவேல், பண்டாரவளை.

இல்லை. ஆனால் பாராட்டலாம். ஜெயலலிதா நன்றாக நடித்துக் கொண்டிருக்கிறார். ஆனால் விருது கிடைக்குமா? விலங்கு ஏறுமா? என்றுதான் தெரியவில்லை.

◘◘

* டியர் சிந்தியா! பல வருடங்கள் காதலித்தும் காதலியைப் புரிந்து கொள்ள முடியா விட்டால்...?
அன்சீர்.ஏ.மஜீட், கல்கமுவ.

நீர் ஒரு 'டியூப் லைட்' என்று அர்த்தம், அர்த்தம்!

◘◘

* நடிகர் திலகம் சிவாஜிகணேசனுக்கும், ரஜினிக்கும், கமலுக்கும் நடிப்பில் உள்ள வித்தியாசம் என்ன?
எஸ். சாந்தி, கொழும்பு-8.

யாருடைய பாதிப்பும் இல்லாமல் தனக்கென்று ஒரு தனிப்பாணியில் முத்திரை பதித்தவர் முன்னவர். பின்னவர் இருவரும் முன்னவரின் பாதிப்புடன் கலந்த தனிப்பாணியை உருவாக்கிக்கொண்டவர்கள்.

◘◘

* சிவாஜிக்கு இம்முறையும் 'தாதா சாகேப்' விருது கிடைக்கவில்லையாமே?
வி. யோகேந்திரன், மன்னார்.

பல்கலைக்கழகம்தான் விருதுகள் கொடுப்பது வழக்கம். அந்தப் பல்கலைக் கழகத்துக்கே விருது கொடுப்பதென்றால் தகுதியானவர்கள் வேண்டாமா? அந்தத் தகுதி தமக்கு இல்லை என்று இந்திய அரசு நினைக்கிறதாக்கும். அதுவே சிவாஜிக்கு பெருமைதானே. விடுங்கள்.

◘◘

* இம்ரான்கானின் அரசியல் பிரவேசம் பெனாசீரைப் பாதிக்குமா?
மரியம் காலித், கண்டி.

எதிர்காலத்தில் பாதிக்கலாம். எனினும், இம்ரான்கானின் அரசியல் பிரவேசத்தின் முன்பிருந்த பரபரப்பும் எதிர்பார்ப்பும், அரசியல் பிரவேசத்தின் பின் அடங்கி விட்டது மாதிரித் தெரிகிறது.

◘◘

* சிக்கனமாக வாழ்வது நல்லதா?
ஜெ. மாசிலாமணி, மட்டக்களப்பு.

நல்லதுதான். அளவுக்கு மீறிய செலவும் கூடாது. அளவுக்கு மீறிய சிக்கனமும் கூடாது.

அப்பாவிடம் ரொம்ப மகிழ்ச்சியாக மகன் சொன்னான்.

"அப்பா இன்று நான் ஐந்து ரூபா மிச்சப்படுத்தி இருக்கிறேன்."

"அப்படியா மகனே, என்ன செய்தாய்?"

"பஸ்ஸில் ஏறாமல் அதன் பின்னாலேயே ஓடி வந்துட்டேன்." என்றான் மகன்.

அப்பா என்ன சொன்னார் தெரியுமோ?

"அடப்பாவி! ஒரு ஓட்டோவுக்கு பின்னாடி ஓடி வந்திருந்தா 50 ரூபா மிச்சமாகியிருக்குமே." என்றாராம் ரொம்பவும் கோபமாக!

இது தேவைதானா?

◘◘

* கங்குலி திருமணம் செய்துவிட்டதாக முரசு வெளியிட்ட தகவல் உண்மையா?
எம். பெரோஸ், கொழும்பு-06.

பின்னே பொய்யா? கங்குலியின் மனைவி டோனா ராயைக் காண விருப்பமா? இதோ படம்.



டோனா ராய்



படிப்பகம்

# இராமாயணம் அங்கம் 47

# அனுமனின் இராம தரிசனம்

இராமரும் இலக்குமணனும் அந்தக் கானகத்தில் வில்லேந்தியவர்களாகத் திரிவதை அறிந்த சுக்கிரீவனின் பயத்தைப் போக்குவதற்கான உறுதியினை அளித்த ஆஞ்சநேயர், தன்னுடைய ஞானதிருஷ்டியினால் இராம இலக்குவனைப் பார்க்கிறார். அவர்கள் இருவருடைய உருவங்களும் அனுமனுடைய உள்ளத்தில் உடனடியாகவே பதிந்து விட்டன. சற்று நேரம் கண்களை மூடிக் கொண்டிருந்த அனுமன் தன் கண்களைத் திறந்து சுக்கிரீவனை நோக்கி, "மன்னவா! இவ்விருவரும் சுத்த வீரர்கள். அவர்களால் தங்களுக்கு எதுவித கெடுதலும் நேரப் போவதில்லை. இவர்கள் வாலியால் ஏவப் பட்டவர்களாக இருக்க முடியாது. இவர்களைப் பற்றித் தாங்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. நானே நேரடியாகச் சென்று அவர்களைக் கண்டு பேசிவருகிறேன்," என்றார்.

தலைமறைவாக இருந்தபோதிலும் தனக்கென சிறியதோர் இராச்சியத்தை அமைத்துப் பரிபாலனம் செய்து வந்தான் சுக்கிரீவன். தனது முதன் மந்திரியாக அனுமனை வைத்திருந்தமையினால் சுக்கிரீவன் ஓரளவு அச்சம் நீங்கியவனாக இருந்தான். அனுமன் வேறு எங்காவது போக நேர்ந்தால் சுக்கிரீவன் பயந்து நடுங்குவான். இராம இலக்குவனைக் கண்டு அதனால் ஏற்பட்ட பயம், அமைச்சர் அனுமனைக் கண்டதும் பறந்தோடி விட்டது. அவர்களைப்பற்றி அனுமன் தன் ஞான திருஷ்டியினால் அறிந்து கூறியதும் சுக்கிரீவன் அமைதியடைந்தான்.



## அந்தணனுருவில் அனுமன்

ஆஞ்சநேயர் வானர உருவோடு செல்லாமல் அந்தணன் போன்றதோர் உருவெடுத்து இராம இலக்குவனிடம் சென்றார். அவர்கள் இருவரும் அக்கானகத்தில் வீழ்ந்து கிடந்த ஒரு மரத்தின் மீது அமர்ந்து இளைப்பாறிக் கொண்டிருந்த வேளையில் அனுமன் அவர்களை அணுகினார். வெகு தொலைவில் அவர்களைக் கண்டதும் அவர்கள் மீது அனுமனுக்கு விபரிக்க முடியாத ஒரு பாந்தம் ஏற்பட்டது. காந்த சக்தியால் கவரப்பட்ட நிலையினை அனுமன் அடைந்தார். முன் எப்போதோ மிக நெருக்கமாக உறவாடி பின்னர் நீண்ட நெடுங்கலாம் பிரிந்திருந்து விட்டு,மீண்டும் ஒருவரை ஒருவர் காணும் போது ஏற்படும் உணர்ச்சி தன் உள்ளத்திலும் உடலெங்கணும் பரவுவதை ஆஞ்சநேயர் உணர்ந்தார்.

அனுமனுக்கு மட்டுமல்ல, இராமரும், அந்தணவேடத்தில் ஒருருவம் தங்களை நாடி வெகு தூரத்துக்கப்பால் வரும் போதே

## இராஜகுமாரன்

ஒருவகைப் பாசம் அந்த உருவத்தின் மீது படர்வதை உணர்ந்தார். இலக்குவனைப் பார்த்து, "தம்பி! யாரோ ஒருவர் நம்மை நாடி வருகிறார். அவரை அணுகி, அவர் யார் என்பதை அறிந்து அழைத்து வா" என்றார். இலக்குவனும் ஆஞ்சநேயரை அணுகினான்: ஆனால் ஆஞ்சநேயரிடம் இலக்குவனால் எதையும் பேச முடியவில்லை. அவருடைய பார்வை இராமர் மீதே நிலைகுத்தியிருந்தது. தான் அருகில் வந்ததைக் கூடக் காணாமல், தனது அண்ணனுடைய திருவுருவத்தால் கவர்ந்திழுக்கப்பட்டவரைப் போன்று அவ்வந்தணர் செல்வதை இலக்குவனால் தடைசெய்ய முடியவேயில்லை. இராமரின் முன்னிலையை அடைந்ததும் இருகைகளையும் கூப்பிய அனுமன்,

"இளந்தபசிகளே! தங்கள் இருவரையும் பார்த்தால் அரசகளை சொட்டுகிறது. மரவுரி தரித்து இந்த வனத்துக்கு ஏன் வந்தீர்கள்? நீங்கள் யார் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு முன் நான் யார் என்ற உண்மையை தங்களுக்குத் தெரியப்படுத்துவது எனது கடமையாகும். நான் அந்தணனுக்குரிய வேடம் தரித்து வந்திருந்தாலும் நான் ஒரு வானரன். எனது தலைவனிட்ட கட்டளைப்படி தங்களைப் பற்றி அறிந்து செல்லவே உருமாறி வந்தேன்.

எங்கள் தலைவரின் எதிரிகளாக இருப்பீர்களோ என்ற ஐயத்தினால் எம்மினத்தவர்கள் அஞ்சி அலைந்து திரிகின்றனர். ஆனால் தாங்கள் இருவரும் எங்களுடைய அச்சத்தைப் போக்குவதற்காக வந்தவர்கள் போலத்தான் எனக்குப் படுகிறது. தங்கள் இருவரின் வருகையால் இந்தப் பிரதேசத்தில் ஒரு புதுப்பொலிவினை நான் காண்கிறேன். தாங்கள் யார்? இக்கானகம் வரக் காரணம் என்ன? என்பதனைத் தயை கூர்ந்து அறியத்தாருங்கள்."

இவ்வாறு அனுமன் கூறியதும் இராமர் ஆச்சரியப்பட்டார். முன்பின் தெரியாத ஒரு அந்தணர் தங்கள் முன்வந்து நின்று, நிதானம் தவறாமல் உண்மைகளை எடுத்துரைத்தது வியப்பை அளித்தது. அனுமனுடைய பேச்சின் சுத்தத்தில் வயித்திருந்தமையினால் இருவராலும் உடன் பதிலளிக்க முடியவில்லை. இதனைக் கண்ட அனுமன் மேலும் பேசலானார்.

"தபோதனர்களே! நான் இத்தனை கூறியும் தாங்கள் எதுவித பதிலும் கூறவில்லை. என் பேச்சில் தங்களுக்கு இன்னும் நம்பிக்கை பிறக்கவில்லை என்றே தெரிகிறது. எனது தலைவர் சுக்கிரீவன் தனது அண்ணன் வாலியால் அடித்துத் துரத்தப்பட்டு இந்தக் கானத்தில் மறைந்து வாழ்கிறார். சுக்கிரீவனின் அமைச்சன் நான். வாயுதேவனின் புத்திரன்: அனுமன் எனது பெயர். எனது தலைவனிட்ட கட்டளைப்படி மாறு வேடத்தில் அணுகினேன். இதுவே உண்மை. இனிமேலாவது தங்களைப் பற்றிய உண்மையினை அறியலாமா?" என்று வினயமாக அனுமன் கேட்டதும் இராமருடைய முகத்தில் புன்முறுவல் தோன்றியது. இலக்குவனை அருகழைத்த இராமர், தங்களுடைய வருகைக்கான நோக்கம் பற்றி அனுமனிடம் கூறுமாறு சொன்னார். இலக்குவனும் அனுமனிடம் தங்கள் இருவரைப் பற்றிய விபரங்களை கூறியதுடன், அகோர வடிவம் கொண்டலைந்த கபந்தன் சாப விமோசனமடையும் போது, 'சுக்கிரீவனிடம் உதவி பெற்றால் சீதையைத் தேடும் முயற்சி கைகூடும்' என்று கூறியதையும் தெரிவித்து, சுக்கிரீவனைத் தேடிக் கண்டு பிடிப்பதைப் பற்றியே தாங்கள் இருவரும் யோசித்துக் கொண்டிருந்ததாகவும் தெரிவித்தான்.

## இராமர்–சுக்கிரீவன் சந்திப்பு

இதனைக் கேட்ட அனுமன் பெருமகிழ்ச்சியடைந்தார். சுக்கிரீவனைக் கொல்வதற்காக கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் வாலியை வதைப்பதற்கு வழி தெரியாமல் தவித்த தன் தலைவனுக்கு தக்க உதவி வழங்க இராமரும் இலக்குமணனும் கிடைத்து விட்டார்கள் என்று அனுமன் பேரானந்தமடைந்தார். உடனடியாகவே சுக்கிரீவன் இருக்குமிடத்துக்கு இருவரையும் கூட்டிச் செல்ல அனுமன் சம்மதித்தார். அடர்ந்த காடுகளைக் கடந்து சுக்கிரீவன் தங்கியிருக்கும் குகையினை இராமரும் இலக்குமணனும் அடைவது கடினம் என்பதனால் அனுமன் தனது சுயரூபமான வானர வடிவமெடுத்தார். இருவரையும் தன் இருதோள்களிலும் அமர்த்திக் கொண்டு புறப்பட்டார்.

உருசிய முகமலையடிவாரத்தின் குகையருகே இருவரையும் இறக்கி, அவர்கள் இருவருக்கும் இருக்கைகளை ஏற்பாடு செய்து விட்டு குகையினுள் சென்று சுக்கிரீவனிடம் இராம இலக்குவனைப் பற்றிய விபரங்களைக் கூறினார் அனுமன். தன்னுடைய உதவியையே இராம இலக்குமணன் நாடி வந்திருப்பதனை அறிந்ததும் சுக்கிரீவன், தன்னுடைய துன்பங்களெல்லாம் மறைந்து விட்டதாகவே கருதி ஆனந்தக் கூத்தாடினான். அனுமனையும் அழைத்துக் கொண்டு குகை வாயிலை அடைந்து அரசகுமாரர்கள் இருவரையும் வரவேற்று அழைத்துச் சென்று உபசரித்தான் சுக்கிரீவன்.

இருவருக்கும் பரஸ்பரம் உதவி ஒத்தாசைகள் தேவைப்பட்டமையினால் இருவருடைய சுக துக்கங்களிலும் பங்கேற்க வேண்டிய நிலை இரு சாராருக்கும் இருந்தது. சீதையைத் தேடிக் கண்டறிவதற்கு சுக்கிரீவன் மூலம் வானரப் படைகளின் உதவியைப் பெறுவது என்றும், வாலியின் கொட்டத்தை அடக்குவதற்கு இராம இலக்குமணரின் உதவியை சுக்கிரீவன் பெறுவது என்றும் ஒப்பந்தம் செய்து கொண்டனர். இதற்கு அக்கினியை சாட்சியாக்கும் பொருட்டு, குச்சிகள் பலவற்றைப் பொறுக்கி வந்த அனுமன் தீ மூட்டினான். இராமரும் சுக்கிரீவனும் தீயின் முன்னிலையில் தங்கள் வலக்கரங்களை இணைத்து பிரதிக்ஞை எடுத்துக் கொண்டனர்.

இருவருடைய சுக துக்கங்களிலும் இருவரும் பங்கேற்பதென முடிவாயிற்று.

இராமர் சீதையைப் பிரிந்து பெருந்துயரடைந்தது போல், சுக்கிரீவனும் தன்னுடைய மனைவி உருமை என்பவளைப் பிரிந்து துன்பமேலிட்டவனாகவே வாழ்ந்தான். ஆகவே இருவருக்கும் ஒரே வகையான துயரம். எனவே இருவருக்குமிடையிலான நட்பும் மிக நெருக்கமாகிவிட்டது.

சுக்கிரீவன் அரசகுமாரர்கள் இருவருக்கும் உணவளித்தான். வானரக்குடிகளும் இராம இலக்குவனை வந்து வணங்கி தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

## சீதையின் அணிமணிகள்

இராமரும் சுக்கிரீவனும் உரையாடிக் கொண்டிருக்கும்போது, சுக்கிரீவன், "அண்ணலே! சில நாட்களுக்கு முன்னர் வான் வெளியே ஒரு விமானம் பறந்து சென்றது. அது இலங்கை வேந்தன் இராவணனுடையது என்பதை அறிந்து கொண்டோம். அந்த இரதத்திலிருந்து ஒரு பெண்மணியின் அழுகைக் குரல் கேட்டது. எம்மவரில் பலர் இக்காட்சியைக் கண்டனர். "இராமா! இலட்சுமணா!" என்று கூவிய வண்ணம் சென்ற அப்பெண்மணி நிச்சயமாகத் தங்கள் துணைவியாகத்தான் இருக்க வேண்டும் என்று இப்போது தெரிந்து கொண்டோம். அதுமட்டுமல்லாமல் தன்னுடைய ஆடையில் ஒரு துண்டினைப் பியத்தெடுத்து, அதில் தன் அணிமணிகள் சிலவற்றையும் ஒரு முடிச்சாகக் கட்டி கீழே வீசினார். அந்தப் பொதியை நாங்கள் பத்திரமாகப் பாதுகாத்து வருகிறோம்," எனக் கூறினார்.

இதேவேளை அப்பொதியை பயபக்தியுடன் ஆஞ்சநேயர் அங்கு கொண்டு வந்து சேர்த்தார். பொதியைச் சுற்றியிருந்த துணியைக் கண்டதும் இராமரின் துயரம் பெருக்கெடுத்தது. கண்களிரண்டும் கடலாயின. இலக்குவன் எழுந்து சென்று அனுமனிடமிருந்த அப்பொதியைப் பெற்று இராமரின் காலடியில்வைத்தார். அதனைத் திறந்து பார்க்கும்படி இராமர் தம்பிக்குக் கண்சாடை காட்டினார். இலக்குவனும் பொதியைத் திறந்ததும் அவருடைய கண்களில் முதன் முதலில் தென்பட்டது சீதாப் பிராட்டியாரின் காற்சிலம்புகள்தான். அவற்றை மட்டும் எடுத்து அண்ணனிடம் காண்பித்து, இவை அண்ணியின் பாதச் சிலம்புகளே என்று சைகையால் உறுதி செய்தான்.

சீதையின் கால்களை அல்லாது வேறு எந்த அவயவங்களையும் பார்த்தறியாத பண்பாளனான இலக்குவனுக்கு ஏனைய அணிகள் பற்றி எதுவுமே தெரிந்திருக்க நியாயமில்லை. சிலம்புகளையும் ஏனைய அணிகளையும் பார்த்ததும் இராமர் சுற்றுச் சூழல் எல்லாவற்றையும் மறந்து அந்தப் பொதியையும் கையிலெடுத்துக் கொண்டு தனியான தோரிடத்துக்குச் சென்று துயர வெள்ளத்தில் மூழ்கினார்.

(தொடர்ந்து வரும்)

## இராமாயணப் போட்டி: 45

**சரியானவிடை:- இந்திரன்**

1. ஏ.ஜே.எம். ஜஃபர், 17, சேச் வீதி, மட்டக்குளி,கொழும்பு-15.
2. சீ. ஷோபா. திம்புல கீழ் பிரிவு, பத்தனை.
3. எல். துரைராஜா, 34, சிறில் ஒழுங்கை, மட்டக்களப்பு.
4. செல்வி எஸ். வதனி, இல.16, டயா வீதி, வெள்ளவத்தை.
5. எஸ். ஆனந்தகுமாரி, பிரதான வீதி, பெரிய நீலாவணை-02, கல்முனை.

**போட்டி இல. 47** கேள்வி:-சுக்கிரீவனின் முதலமைச்சர் யார்?

செப்டம்பர்.14 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
இராமாயணப் போட்டி–இல.47, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.

# காதிலே பூ கந்தசாமி

இலங்கையிலிருந்து தமிழ் அகதிகள் மீண்டும் தமிழகம் செல்ல ஆரம்பித்துள்ளார்கள். இன்றைய நிலையில் கலைஞர் கருணாநிதி எதிர்க்கட்சி தலைவராக இருந்திருந்தால் எப்படி பேசியிருப்பார்? கற்பனை செய்கிறார் காதிலை பூ கந்தசாமி.

## அகதிகளை தடுப்பது அடுக்காது

## உடன் பிறப்புக்கு கலைஞர்கடிதம்

இலங்கைத் தமிழர்கள் மீண்டும் தமிழகம் நோக்கி வரத் தொடங்கியிருப்பது தெரிந்ததே. இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவரும், திமுக. தலைவருமான டாக்டர் கலைஞர் உருக்கமான கடிதம் ஒன்றை முரசொலியில் எழுதியுள்ளார்.

உடன்பிறப்பே! கண்ணீர் வழிந்தோடுகிறது. கவலை நிழலாடுகிறது. இதயத்தில் ஈட்டியைச் செருகியது போல இணையற்ற வேதனை ஏற்பட்டுவிட்டது.

ஈழத்தில் எம் தமிழர் துன்பப்படுகிறார்கள் கண்ணீரும், கம்பலையுமாக காட்சியளிக்கிறார்கள்.

வந்தாரை வாழவைக்கும் தமிழ் நாட்டில் அவர்களை வாழை இலை போட்டு வரவேற்காவிட்டாலும், நொந்தாரை மேலும் நோகவைக்கும் விதமாக நடந்துகொள்ள வேண்டுமா? நினைக்கவே என் நெஞ்சம் கலங்கிக் குளமாகிறது.

அகதிகள் வந்திடாமல் தடுப்பதற்காக மீனவர்களின் படகுகளை பறிமுதல் செய்துவிட்டது தமிழ் உணர்வு சிஞ்சிற்றும் இல்லாத செல்வியின் அரசு.

தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ் நாட்டின் முதல்வராக வரவேண்டும் என்றார் பேரறிஞர் அண்ணா.

அதனை நாம் மறக்காமல் இருந்திருந்தால் இன்று இந்நிலை, இழிநிலை ஏற்பட்டிருக்குமா?

தி.மு.க. என்றுமே வன்முறைக்களமாக இந்த வளபூமி மாறுவதை ஆதரிக்காது. புலிகளின் ஊடுருவலைத் தடுக்க எடுக்கும் நடவடிக்கையை நாம் கண்டித்ததில்லை. அதனால் காயப்பட்டதுமில்லை.

புலிகளை தடுப்பது வேறு. புவியில் வாழ இடமின்றி புகலிடம் தேடிவரும் நம் தமிழர்களை தடுப்பது வேறு.

அகதிகளை வரவிடுங்கள். புலிகளை வழிமறியுங்கள் என்பதுதான் தி.மு.க.வின் இலட்சிய முழக்கம்.

இந்த இலட்சிய முழக்கத்தை தமிழக அரசு அலட்சியம் செய்யுமானால், தமிழகம் போர்க்களமாக மாறும் என்று சொல்லி வைக்க ஆசைப்படுகிறேன்.

போர்க்களம் என்றதும் வன்முறையாளர்கள் என்று எம்மைத் தூற்றுவர் ஏதுமறியாதோர்.

நான்சொல்வது அமைதிப் போர்க்களத்தைப் பற்றி என்பதை நீ அறிவாய். நாடறியும். அண்ணா வழி வந்தவர்கள் நாம்! போர்க்களம் என்று நாம் சொல்வது எதனை என்பதை புரியவேண்யடிவர்கள், புரியவேண்டிய வகையில் புரிந்து கொள்ளாவிட்டால், புரியவைக்க வேண்டியவிதத்தில் புரியவைக்க வேண்டிய கட்டாய நிலை கழகத்துக்கு ஏற்படும்.

மீனவர்கள் மிரட்டப்படுகிறார்கள். படகுகளைப் பறித்து தரையில் உருட்டப் படுகிறார்கள் என்றெல்லாம் 24 மணி நேரமும் என் செவியில் செய்திகள் விழுந்து கொண்டிருக்கின்றன. இதனைவிட ஈயத்தைக் காய்ச்சி என் செவியில் ஊற்றியிருக்கலாம்.

உடன்பிறப்பே! பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பைந்தமிழ் உணர்வோடு அண்ணா காட்டிய பாதையில் நடப்பவர்கள் நாங்கள்.

ஏழைகள், பாழைகள், ஏதுமில்லாதோர் வாழ்வோடு விளையாடும் ஆட்சியை பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்றால், அது பயத்தால் அல்ல பண்புகாரணமாக, அமைதி வழி மீது கொண்ட அன்பு காரணமாக என்பதை சொல்லிவைக்கிறேன்.

மீனவர்கள் தொடர்ந்து தொல்லைக்கு உள்ளானால் அவர்களுக்காக ஒரு உரிமைப் போராட்டமும், அகதிகள் வருவதைத் தடுத்தால் அதனைக் கண்டித்து ஒரு உணர்ச்சி வெள்ளம் போராட்டமும் தி.மு. கழகத்தால் தமிழ்நாடெங்கும் நடத்தப்படும்.



அகதிகளுக்கு அதிக இடம் கொடுத்தால் அதுவே தன் ஆட்சி போகக் காரணமாகிவிடுமோ என்று ஜெயலலிதா அம்மையார் அச்சப்படுகிறார்.

நாமோ நம் தலையே போனாலும் தமிழர்கள் அவர்கள் தமிழ்நாட்டில் இருந்தாலும், ஈழத்தில் இருந்தாலும், எங்கோ இங்கிலாந்தில் இருந்தாலும் காப்பாற்றப்படவேண்டும் என்ற கொள்கையுடையவர்கள்.

ஈழத்தில் உள்ள அத்தனை தமிழ் மக்களும் இங்கே வந்தாலும் கூட இறுக அணைத்துக் கொள்ள வேண்டுமே தவிர, இன்முகம் காட்டிட வேண்டுமே தவிர, எட்டி உதைக்கும் விதமாக எவரும் நடந்துகொள்ளக்கூடாது என்று கருதுபவர்கள் நாம்.

அந்த உணர்வோடு அகதிகளுக்காக போராட ஆயத்தமாக இருக்குமாறு உடன்பிறப்புக்களை உருக்கமாகக் கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு தி.மு.க.தலைவர் கலைஞர் கருணாநிதி உடன்பிறப்புக்களுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## வழிவிடலாம், வலிய அழைக்கக்கூடாது

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அகதிகள் விடயம் தொடர்பாக எப்படிப் பேசுவார்? அவரது சமபகால பேச்சுக்களின் அடிப்படையில் ஒரு கற்பனைப் பேட்டி நடத்துவோமா?

**கா.பூ.க:-** வணக்கம் ஐயா! அகதிகள் மீண்டும் தமிழகம் வருகிறார்களே. தமிழக அரசு தொடர்ந்து அனுமதிக்குமா?

**கலைஞர்:-** அவர்கள் அகதிகளாக இருக்கும் பட்சத்தில் அனுமதி இருக்கும்.

**கா.பூ.க:-** தமிழக அரசு அகதிகளை ஏற்றிவரும் மீனவர்களை தொல்லைப்படுத்துவதாக செய்திகள் வருகிறதே?

**கலைஞர்:-** அகதிகள் தாமாக வந்தால் தமிழக அரசு அனுமதிக்கும். நாமாகப்போய் அழைத்து வருவது முறையல்ல என்பதே தமிழக அரசின் எண்ணமாகும்.

**கா.பூ.க:-** அகதிகள் வருவதற்கு விரும்புவதால் தானே மீனவர்கள் ஏற்றிவருகிறார்கள்.

**கலைஞர்:-** வலைபோட்டால்தான் மீன் மாட்டுகிறது. அதுபோல அகதிகளுக்கும் வலை போட வேண்டாம் என்பதை மட்டும்தான் மீனவர்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

**கா.பூ.க:-** எடுத்துச் சொல்வதோடு நிறுத்தாமல் மீனவர்களின் படகுகளையும் அனுமதிப் பத்திரங்களைளயும் எடுத்துக் கொண்டிருக்கிறீர்களே?

**கலைஞர்:-** எடுத்துச் சொல்வதைக் கேட்க ஆட்கள் வேண்டுமல்லவா. அதுதான் தடுத்து வைத்து எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

**கா.பூ.க:-** மீனவர்களின் தொழில் பாதிக்கப் படாதா?

**கலைஞர்:-** மீனவர்கள் மீனவர்களாக மட்டும் இருந்தால் பாதிப்பு வராது.

**கா.பூ.க:-** அகதிகள் வருகையைத் தடுக்கக் கூடாது என்று வை.கோபால்சாமி கூறியிருக்கிறாரே?

**கலைஞர்:-** தி.மு.க. ஆட்சி கவிழவேண்டும் என்று மறைமுகமாகச் சொல்லுகிறார்.

**கா.பூ.க:-** அகதிகள் வருவதால் ஆட்சிக்குப் பாதகம் ஏற்படும் என்று நினைக்கிறீர்களா?

**கலைஞர்:-** ஆட்சி போகும், வரும். வரும், போகும். அதற்காக கவலைப்படும் கட்சியல்ல கழகம்.

**கா.பூ.க:-** அகதிகள் விடயத்தில் தமிழக அரசு கருணையுடன் நடக்கவேண்டும் என்று சொல்லுகிறாரே ஜெயலலிதா?

**கலைஞர்:-** தி.மு.க. ஆட்சியைக் கவிழ்க்கும் சூழ்ச்சிப் பேச்சு அது. அம்மையாரின் சூழ்ச்சிகளை முறியடித்து ஐந்தாண்டுகள் ஆட்சி நடத்துவோம். அதன் பின்னரும் பதவிக்கு வந்து தொடருவோம்.

**கா.பூ.க:-** உங்கள் ஆட்சி தொடர்வதற்கு இடையூறு வரக்கூடாது என்றுதான்.....

**கலைஞர்:-** (இடைமறித்து) ஆட்சி நாளை போனாலும் நாலாண்டுகளின் பின் போனாலும் இரண்டையும் ஒன்றாகக் கருதும் இயல்பினர் நாங்கள்.

**கா.பூ.க:-** புலிகளின் ஊடுருவல் இருப்பதாகப் பேசப்படுகிறதே?

**கலைஞர்:-** எங்கள் ஆட்சிக்கு குழிபறிக்க நினைப்பவர்கள் கூறும் பொய்களை மக்கள் நம்பமாட்டார்கள். ஐந்தாண்டுகள் தி.மு.கழகம் ஆட்சி நடத்த மக்கள் அனுமதி தந்திருக்கிறார்கள்.

**கா.பூ.க:-** அகதிகள் மீது விசாரணை நடத்தப்படுகிறதா?

**கலைஞர்:-** அகதிகள் அகதிகள்தானா என்று அறிய விசாரணை நடத்துவது விசித்திரமுமல்ல. வேறெங்கும் நடக்காத விநோதமுமல்ல. கனடாவிலும் அப்படித்தான் நடக்கிறது. அது நிர்வாக முறையே தவிர நிறைவற்ற அணுகுமுறையல்ல.

**கா.பூ.க:-** இலங்கை அகதிகள் விடயத்தில் உங்கள் நிலைப்பாடு என்ன?

**கலைஞர்:-** உள்ளே எடுக்கலாம், ஊக்கம் கொடுக்கக் கூடாது. வந்தால் வழிவிடலாம், வாருங்கள் என்று வலியப்போய் அழைக்கக் கூடாது.



www.padippakam.com
படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O. (OD/24/NEWS/96)

www.padippakam.com


அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS




பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

436331

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# மாறாத மவுசு



↑ பிரித்தானியாவின் புராதன தங்க நாணயத்தின் இரண்டு பக்கங்களே இங்கே படத்தில் காணப்படுகின்றது. இது கிறிஸ்துவுக்கு முன் 90ம் ஆண்டு ஆட்சிக்கால நாணயமெனக் கண்டறியப்பட்டுள்ளது. வெஸ்ரேர்ஹாம் வகை தங்க நாணயமான இது மிகப் புராதனமானது.

கிறிஸ்துவுக்குமுன் 550ம் ஆண்டில் குடினஸ்ரி என்றழைக்கப்பட்ட சீனக் காசுகள் புழக்கத்திலிருந்ததாம். கி.மு 630 இல் துருக்கி நாட்டு மன்னன் கிங்ஜிஜெஸ் புழக்கத்தில்விட்ட எலெக்ற்றம் நாணயமும் புராதனமானதுதான்.

இருந்தும் வெஸ்ரெர்ஹாம் தங்க நாணயம்தான் இன்றும் உள்ளது. தற்போது இதன் பெறுமதி பல கோடி ரூபாய்கள். 'ஓல்ட் இஸ்ட் கோல்ட்' என்பார்கள். இது உண்மையாகவே கோல்ட். இந்தத் தங்க நாணயம் இன்றிருப்பது இலண்டனிலுள்ள அஸ்மோலியம் அருங்காட்சியகத்தின் காட்சிப் பெட்டிக்குள்.


ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்




SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

323657

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# மகா ஆழம்



தருவது லியோபெட

↑ இருபுறமும் குவிந்து உயர்ந்து வானை நலம் விசாரிக்கும் மலைச் சிகரங்கள். அவற்றின் இடையே மெல்லிய இடைவெளி. அதுதான் பள்ளத்தாக்கு.

படத்தில் இருப்பதுதான் உலகின் மிக மிக மிக ஆழமான பள்ளத்தாக்கு. இது திபெத் நாட்டின் கிழக்குத் திசையில் இமயமலைப் பகுதியில் இருக்கிறது.

இதனை 'யார்லவ் ஷங்போ' என்று அழைக்கின்றனர்.

இதில் ஒரு ஆச்சரியமான விஷயம் என்ன தெரியுமா? 1993 வரை இப்படி ஒரு ஆழமான பள்ளத்தாக்கு இருப்பதே உலகின் கண்களுக்குத் தெரியாமல் இருந்தது.

புவியியல் ஆய்வாளரான றிச்சார்ட் ஃபிஸ்ஸெர் பத்து வருடமாக முயன்று, பாதுகாப்பு அனுமதிபெற்று இப்பகுதிக்குச் சென்று இப் பள்ளத்தாக்குப் பற்றி 1993 இல் அறிவித்தார்.

இந்தப் பள்ளத்தாக்கின் ஆழம் 5075 மீட்டர். அதாவது 16,650 அடிகள்.

இருபுறமும் உள்ள மலைச் சிகரங்களுக்கு நாம்ச்சி பார்வா, ஜாலபேரி என்று பெயர். பள்ளத்தாக்கின் வழியாக அழகிய நதியொன்றும் பாய்ந்தோடுகிறது.

மேலும் இங்கு ஆராய்ச்சிகள் நடத்தினால் பல அரிய தகவல்கள் கிடைக்கும் என்று சொல்கிறார் றிச்சார்ட். மறைந்து கிடந்த அழகு!

# போதுமா இந்தப் பொரி

இது வித்தியாசமான சாதனை. உலகிலேயே மிகப் பெரிய அளவில் பெட்டியிலடைக்கப் பட்ட சோளப் பொரி (பொப் கோர்ன்) இது வாகும்.

அமெரிக்காவின் ஃபுளோரிடா மாநிலத்திலுள்ள ஜாக்சோவில்லே என்னும் ஊரிலுள்ள ஆரம்பப் பாடசாலையொன்றின் சிறார்களின் முயற்சியால் உருவானது.

6620 கனஅடி கொள்ளளவுள்ள இந்த சோளப்பொரிப் பெட்டி 1994 ஒக்டோபர் மாதம் 6ம் திகதியிலிருந்து 11ம் திகதிவரை 6 நாட்களாக நிரப்பி முடிக்கப்பட்டது.

இந்தச் சோளப்பொரிப் பெட்டியின் அகலம் 20 அடி 8 1/2 அங்குலம். உயரம் 8 அடி. நீளம் 39 அடி 11 1/2 அங்குலம்.

சாதனைப் பொரி, சாப்பிட்டாலும் ருசி!





# பார்வைகள் பலவிதம்

↓ 16 வயதில் பாகிஸ்தானுக்கு எதிரான சர்வதேச ஒரு நாள் போட்டியில் ஆரம்பித்து அசத்தத் தொடங்கிய டெண்டுல்கருக்கு இப்போது 23 வயது.

இந்திய கப்டனாகிய பின்னர் சந்தித்த முதல்போட்டியில் அணி தோற்றது. ஆனாலும் செஞ்சரி போட்டதோடு, ஒரு விக்கெட்டையும் வீழ்த்தி பதட்டமில்லாத கப்டன் என்ற பெயரைச் சம்பாதித்துக் கொண்டார்.

அசாருதீனும் கப்டனான புதிதில் நன்றாகவே விளையாடினார். பின்னர்தான் சுமை காரணமாக பின்னடைந்தார். அதுபோல டெண்டுல்கருக்கும் நேருமோ என்று ரசிகர்கள் பலர் பயப்படுகிறார்கள்.

டெண்டுல்கரால் சமாளிக்க முடியும். அணியில் உள்ளவர்கள் மத்தியில் மதிப்பு இருப்பதால் டெண்டுல்கரால் சிறப்பான தலைமையைக் கொடுக்க முடியும் என்னும் கருத்தும் இருக்கிறது.

ஒரு நல்ல கப்டனை இனம்காண சில போட்டிகள் மட்டும் போதாது. டெண்டுல்கரின் ஆளுமையை மதிப்பிட இன்னும் சில காலம் பொறுத்தேயாக வேண்டும்.

அற்புதமான துடுப்பாட்ட வீரரும், சகல துறை ஆட்டக்காரருமான டெண்டுல்கர் கப்டனாகிவிட்டதால் இனிமேல் அணியின் வெற்றி தோல்வி பற்றிய விமர்சனங்களையும் அவர் தடுத்தாட வேண்டியிருக்கும்.





# ஊருக்குப் போதும்



வருடாவருடம் பிரிட்டனிலுள்ள 'ஒற்றன்' கிராமத்தில் 'புடிங்' உணவு தயாரிக்கும் வைபவம் இடம்பெறும் (உணவு தயாரிக்கவே ஒரு வைபவமா?)

1992ம் ஆண்டும் இக்கிராமத்தவர்களால் 'புடிங்' உணவு ஜூலை மாதம் 3ம் திகதி தயாரிக்க ஆரம்பிக்கப்பட்டது. கிராமத்தவர்களில் இருவருக்கு மட்டுமே தெரிந்த சமையல் நுணுக்கத்தோடு கிராமத்தவர் பல பேரின் உதவியுடன் பெரிய தாச்சியில் தயாரான புடிங் ஜூலை 10 ஆம் திகதிதான் தயாரித்து முடிக்கப்பட்டது. 7231 இறாத்தல் எடைகொண்ட இந்தப் புடிங்தான் உலகின் மிகப்பெரிய புடிங்.

கிராமமே ஒன்றாகச் சேர்ந்து சாப்பிட்டு முடித்தனராம். சாதனை படைத்து பகிர்ந்து உண்பது மகா சந்தோசம்தானே!



படிப்பகம்